கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

இறைவன் துணை.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

1-வது பகுதி.

நூன்முகம். கௌமார குருகுலம்.
1. சமயமும் ஒழுக்கமும்.

SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞான முனிவர்
TIRUNELVELI

ஆசிரியர்
இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.

மன்னார்குடி பாரதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1932.

4 பகுதிகளும் சேர்ந்து விலை ரூ. 2—8—0.

இறைவன் துணை.

முதியோர்
கிராமக் கல்வி நூல்.

1-வது பகுதி.

நான்முகம். கௌமார குருகுலம்.

1. சமயமும் ஒழுக்கமும்.

பதிப்பாசிரியர்
இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.

மன்னார்குடி பாரதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1932.

4 பகுதிகளும் சேர்ந்து விலை ரூ. 2—8—0.

கௌமார குருகுலப் பிரசுரம்.

முதற்பதிப்பு 500.

இதின் சகல உரிமைகளும் கௌமார குருகுலத்திற்கே யாகும்.

இறைவன் துணை.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

பொருளடக்கம்.

		பாடங்கள்	பக்கங்கள்.	படங்கள்
	1-வது பகுதி.			
	நூன்முகம்		8	1
	கௌமார தருதலம்		50	11
1.	சமயமும் ஒழுக்கமும்	15	111	3
	2-வது பகுதி.			
2.	சுகாதாரம்	12	100	8
3.	கிராமப்பொருள்நிலை	8	82	1
	3-வது பகுதி.			
4.	தமிழ்மொழி	8	69	—
5.	தேச சரித்திரம், பூகோளம்	10	97	13
	4-வது பகுதி.			
6.	தேசபரிபாலனம்	9	76	—
7.	பூதபௌதிக அறிவு	8	118	16
	நூன்முடிவு		1	
	மொத்தம்	70	712	53

இந்நூலைப் படிக்கும் முறை.

மேற் சொல்லிய 70 பாடங்களும் அலாதி அலாதியானது. ஒன்றுக்கொன்று முன்பின் தொடர்ச்சி இல்லாதது. எந்த ஒன்றையேனும் எடுத்து இஷ்டப்படி படிக்கலாம்.

இவை ஆழ்ந்து படிக்கவேண்டியவை. சில பக்கங்கள் குறைந்தும் சில பக்கங்கள் மிகுந்தும் இருக்கின்றன. சாாசரி ஒரு பாடத்திற்கு பத்து பக்கம் ஆகிறது. தினம் பத்து பக்கம் சுமாராகப்படித்தால், 2½. 3. மாதத்தில் படித்துவிடலாம். ஆறு மாதத்தில் இரண்டு முறை திருப்பிப் படிக்கலாம்.

ஒரு பாகத்தில் ஒருபாடமும், இன்னமொருபாகத்தில் ஒரு பாடமுமாக மாறி மாறிப்படித்தால் கடினமாகக்காணாது.

நக்ஷத்திரப் படங்கள், உடற்பயிற்சிப் படங்கள், விவசாய விஷயம், கைமருந்துகள், சுகாதார விஷயம், தமிழ் இலக்கியப் பகுதிகள், பண்டைத்தமிழர், சரித்திர, பூகோள பாகங்கள் முதலிய அடுத்தடுத்து ஆழ்ந்து வேண்டியபோது கவனிக்கத்தக்கவை.

இறைவன் துணை.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

1-வது பகுதி.

பொருளடக்கம்.

நூன்முகம்.

கிராமக்கல்வி முதியோர் வித்தியாசாலை படம்	முகவணை.
பாரதியார் பாட்டு	,,
முன்னுரை	,,

கௌமார குருகுலம்.

	பக்கம்.
சங்க நிகழ்ச்சிமுறைக் குறிப்பு	1
தருமசாசனம்	13
கிராமக் கல்வித் தொண்டு	27
கிராமக்கல்வி முதியோர் வித்தியாசாலை	35
வாழ்த்து	43

படங்கள்.

	பக்கம்.
கௌமார குருகுலக் கல்வித்தொண்டின் எல்லை	12 (1)
கௌமார குருகுல ஸ்தலம்	12 (2)
,, பொருட்காக்ஷிசாலை	23
,, உபாத்தியாயர் வீடு	24
,, சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டி	25
,, சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டியில் புத்தக வினியோகம்	26
,, சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டியின் பிளான்கள்	32, 33, 34
கிராமக்கல்வி முதியோர் வித்தியாசாலை காலை தினசரி பிரார்த்தனை	37
,, ,, ,, காலை தினசரி உடற்பயிற்சி	37
,, ,, ,, தினசரி மாலை திறந்தவெளியில் உபந்நியாசம்	38
,, ,, ,, விவசாயப் பொருட்காக்ஷி மோட்டார்	38

இறைவன் துணை.

முன்னுரை.

யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.* —திருக்குறள்.

நாட்டின் நிலை.

புண்ணிய பூமியாகிய நமது பரததேசம் என்ற இந்தியநாடு பூவுலகு முழுவதிலும் உள்ளவர்களில் சுமார் ஐந்தில் ஒருபாகமாகிய முப்பத்தைந்து கோடி மக்களை உடையது. இவர்களில் கல்வி கற்றவர் நூற்றில் 9 பேர்கள்; கிராமாந்தரங்களில் வசிப்பவர்கள் நூற்றில் 90 பேர்கள்; விவசாயத்தால் ஜீவிப்பவர்கள் நூற்றில் 75 பேர்கள்; இவர்களில் நாவில் ஒரு பாகத்தினர் உடல் பலம் இருப்பினும் பெரும்பாலும் வருஷமெல்லாம் உழைப்பின்றியும் ஊதியமின்றியும் சோம்பி இருக்கின்றனர்; தற்காலத்தில் நம்மவர்களுக்குச் சராசரி வயது 22 என்கின்றனர். கிராமங்களும், கிராம மக்களும், புத்துயிர் பூண்டு விழித்தெழுதல் எத்துணை அவசியமென்பதற்கு இவை எடுத்துக்காட்டாகும். இங்ஙனம் உயிர்த்தெழுதற்குக் கல்வியும் அதன் பயனாக ஒழுக்கமும் ஓங்குவது இன்றியமையாததெனப் பெரியோர் யாவரும் வற்புறுத்தி வருவது அனைவரும் அறிவர்.

இளைஞர் கல்வி.

இளைஞருக்கும் வாலிபருக்கும் கல்வி அறிவு ஒழுக்கம் அமைய எத்தனையோ பாடசாலைகளும் கல்லூரிகளும் நாட்டில் உள்ளன. அவ்வை போதா எனினும் அக்குறைவுகளை நீக்க பலர் முயன்று வருகின்றனர். ஆனால் முதியோர்க்கான கல்விக்கு எவ்வித ஆதரவும் இதுகாறும் இங்கு ஏற்படவில்லை. கல்வி மிகுந்துள்ள மேல் நாடுகளிலும் முதியோர் கல்வியை பல வகைகளிலும் பயின்று வருகின்றனர் எனில், கல்வி மிகக் குறைந்துள்ள நமது நாட்டில் தேசநலம் உதயமாகி வரும் இக்காலத்தில் **முதியோர் கல்வி**க்கான முயற்சியை நாம் செய்தல் முக்கிய மென்பது மிகையாகாது.

முதியோர் கல்வியின் முக்கியம்.

தூண்டிய விளக்கே குறையாது ஒளி தருவது போலவும், தேகம் உயிர் வாழ்வதற்கு தினம் உண்பது அவசியம் போலவும், அறிவும் ஒழுக்கமும் ஒருவரிடம் குறையாது நிலைத்து வளரவேண்டுமெனின், கல்வி ஏதோ ஒருகாலம் சிறுபோது படித்தது மாத்திரம் போதியதாகுமோ? அல்லது ஏதோ எழுதப்படிக்க அறிவதுமாத்திரம் நலந்தருமோ? உயிர் வாழ்வு நல்வாழ்வு ஆவதற்கு அவசியமான பலதுறைக் கல்வியும் இயன்ற வரைப் பயிலுவதவசியமாகும்.

---

*குறிப்பு:— கல்வி கற்றவனுக்கு எந்நாடும் எவ்வூரும் தன்னதாக இருக்க, இறக்குமளவும் கல்வி கல்லாமல் போவது என்னை?

நம் நாட்டவர்கள் கிராமங்களிலே பெரும்பாலும் வசிப்பவர்கள் ஆனதால் **முதியோர் கல்வி** பொதுப்படையாகக் கிராமவாசிகளுக்குப் பயன்படுமாறு **கிராமக் கல்வியாக** அமைவதே பொருத்தம்.

கிராமக்கல்வி விளக்கம்.

கிராமவாசிகளின் கல்வியானது உத்தியோகத்தைப் பெறுவதற்காக அல்ல; வித்வான்களாகிக் கல்விச் சாமர்த்தியத்தினால் வாதம் செய்வதற்காக அல்ல; கச்சேரிகளுக்குச் சென்று கக்ஷி ஆடுவதற்காக அல்ல; திறந்த கண்ணுடன் பட்டப்பகலில் பாதை அறிந்து எவ்விதம் ஒருவன் செல்லுவானோ, அவ்விதம் கிராமவாசிகள் தங்கள் வாழ்க்கையில் குடும்பத்தையும், குடித்தனத்தையும், தொழிலையும், ஜன சமூகத்தையும், சுய நலம் பொதுநலம் விளங்கும்படி இக்காலத்திற்குத் தக்கவாறு அறிவையும் ஒழுக்கத்தையும் தரத்தக்க கல்வி **கிராமக்கல்வி**யாகும்.

முதியோர் கல்வியின் இயற்கை.

ஜீவிய வாழ்க்கையின் அமைப்பில் **முதியோர் கல்வி** இயற்கையே. பெரும்பாலும் கல்வியினாலேயே ஜீவிக்க வேண்டிய சிலரோ சில வகுப்பாரோ அன்றி மற்றவர்களெல்லாம் இளம்பிராயத்தில் எளிய நூல்கள், கணக்கு வாய்ப்பாடுகள் முதலிய கற்றுத் தங்கள் தங்கள் தொழிலிலேயே ஈடுபடலாயினார்கள்; நமது நாட்டில் விவசாயமே பெருந் தொழிலானதால், இத் தொழில் அறிவோ கண் பார்க்கக் கை செய்து அனுபவத்திலேயே அனேகமாய் வருகிறது. விவசாயம் தவிர மற்ற சாமான்னிய தொழிலிலுங்கூட, "தந்தையொடு கல்விபோம்" என்றவாறு தகப்பனிடமிருந்தே பிள்ளை கற்றுக்கொள்வன். இதனாற்றானே அனேக ஜாதிகளும் அவரவர் தொழில்களைப்பற்றியுள்ளன. தொழில்களுக்கு என அலாதியாகத் தொழிற் கல்வி கற்பிப்பது உத்தியோகங்களைப் பொறுத்து பெரும்பாலும் மேல்நாட்டு முறையை ஒட்டியதே.

தற்காலக் கல்விமுறை.

இதன் காரணமாக இருபத்தைந்து வயதுக்குள்ளாக காயமான உத்தியோகம் கைப்பற்றவேண்டி, உடல் நன்கு வளர்ந்து திடமாகாதபடி அதி சிறு பிராயத்திலேயே படிக்கத் தலைப்பட்டு மூளையைக் கசக்கிப் பிழிந்து பரிக்ஷை எனும் பயம் பிடித்து பதினாறாண்டிற்குள் கண்ணாடியிட்டு கல்வியூட்டும் தற்கால விதியும் பழக்கமும், உத்தியோகம் பெறும் சிலருக்கே அன்றி மக்களுக்காவது நாட்டிற்காவது சாதாரணமாக உலக ஜீவியத்தில் நலம் தருமா? எண்ணிப்பாருங்கள்.

முதியோர் கல்வி ஒரு பண்டைப்பழக்கம்.

இயற்கையாக எவ்விதக் கவலையுமின்றி பிள்ளைகள், ஆணும், பெண்ணும் காலாற ஓடி கையாற ஆடி கண்டது செய்து களித்துவிளையாடியே உடலும் மனமும் பெருமிதம் அடையவேண்டும். நாட்டில் வேண்டிய நயமான எளியகல்வி ஏழாண்டுமுதல் பதினைந்து ஆண்டுவரை கற்று, தந்தைத் தமயனுடன் தன்தொழிலில் கலப்பதே மக்களுக்கு இயற்கை.

அதற்குமேல் மனமுவந்து அவாமிகுந்து உலகியல் பலதுறைகளில் அறியவேண்டியவை அறிவதே ஜீவிய இயற்கையாகும். இதுவே இந் நாட்டில் முன்னும் பழக்கத்திலுள்ளது என்பது பெரும் பண்டைத்தமிழ் நூல் தொல்காப்பியத்தும் காணப்படும்:—

"வேண்டிய கல்வி ஆண்டு மூன்று இறவாது"

ஒரு நாயகன் தன்மனைவியைப் பிரியும் வகை ஆறனுள் ஓதற்பிரிவு ஒன்று; அவ்வகையில் மூன்று வருஷங்கள் பிரிந்திருக்கலாம் என்பது இலக்கணம் என தமிழ்ப்பேராசிரியர் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் இந்நூலில் அடங்கியுள்ள "பண்டைத்தமிழர்" என்ற பாகத்தில் எடுத்து விளக்கியுள்ளதையும் கண்டறிக.

எனவே "இளமையிற்கல்" என்னும் வாக்கு பிறகு கல்விகற்பது பொருத்தமன்று என அல்ல. இளமையில் தலைப்பட்ட கல்வி குறளாசிரியர் கூறியவாறே இறக்குமளவும் கற்கவேண்டுவதே. இதுவே பண்டை வழக்கம்; இக்காலத்தும் இது இன்றி அமையாததே.

சமய ஒழுக்க அறிவின் அவசியம்.

சில நண்பர்களுக்கு சமயமும் ஒழுக்கமும் இக் கிராமக்கல்வியில் அவசியமா என ஒரு ஐயப்பாடும் உண்டு. அவர்கள் அறிவாளிகளே; நமது இயக்கத்திற்கும் அன்பர்களே; சமயங்கள் கேடுற்றுத்தவிக்கும் இக்காலத்தில் சமயங்களில் சம்பந்தமின்றி ஒதுங்கிச் செல்லுவதே சௌகரியமென அவர்கள் எண்ணுவது தவறாகாது; அது தற்காப்பைப் பொறுத்ததே.

இதற்கு சமயங்கள் காரணமாகா; ஆனால் இப்போது சமயக்காரர்களிடம் அகன்ற நோக்கங்கள் குன்றி குறுகிய நோக்கங்கள் மிகுந்து விளங்குவதே இதற்குக் காரணம். இக்குறை ஒழியவேண்டுமானால் ஒவ்வொருவரும் தங்கள் சமய உண்மைகள் எவை, மற்றவர்களின் சமய உண்மைகள் எவை எனவும் கற்றறிந்து உற்றுப்பார்க்கின் அல்லது தெளிவு வராது. அவ்விதமாக சமரச புத்தியோடு விசாரிப்பார்களானால் எல்லா மதங்களுக்கும் அடிப்படையாக (தேவர்கள், தேவதைகள், தேவதூதர் முதலியோர் பலர் இருப்பினும்) கடவுள் ஒருவரே என்றும் (நிறத்தாலும், குணத்தாலும், தொழிலாலும், ஜாதியாலும், ஆண்பெண் எனவும் பலவகைப்படினும்) மக்கள் யாவரும் சகோதரர்கள் எனவும் விளங்கும். பேதங்களெல்லாம் கடவுளை வழிபடுமுறையிலும் மக்களுடைய நடையுடை பாவனையிலுமே யாகும்.

இந்துக்கள் (அவர்களுள்ளும் சைவர் வைஷ்ணவர் பிராமணர் சூத்திரர் பறையர்,) முசிலீம்கள், கிறிஸ்தவர்கள் முதலியோர் பல சமய ஒழுக்கங்களிலும் ஈடுபட்டவர்கள், கடவுளின் அனுக்கிரகத்தால் இந் நாட்டில் கூடிக் குடியிருப்பவர்கள், அன்புடனும் அருளுடனும் ஒத்து வாழ வேண்டின், சமய ஒழுக்க சமரசம் ஊன்றியவாழ்வில் மக்கள் அமைவது அவசியம்.

உலகவாழ்க்கை உண்மையில் இடைவிடாது நடைபெறும் ஒரு பெரும்போர். ஜீவியத்திற்காக, சம்பாத்தியத்திற்காக, மற்றவர்களுடன்

இணங்கியும் பிணங்கியும் வருவதில், "தீவினை இன்றி ஈட்டல்பொருள்" என்றவாறு, தீமையோடு வாழ்நாளெல்லாம் போராடியே வரவேண்டியுள்ளது; "ஞானவாள்" ஏந்தி செல்லவேண்டியுள்ளது. இது சமய ஒழுக்க அறிவாலும் சிரத்தையினாலும் விளையுமே அன்றி வேறுவகை ஆதாரம் இதற்கு இன்று.

இவ்விரு காரணங்களே போதுமானவை. சமய ஒழுக்க அறிவு அவசியம் என்பதற்கு இன்னும் அநேக காரணங்கள் உண்டு. அவைகளை எடுத்துரைக்கின் விரியும்.

கௌமார குருகுல முதியோர் கல்விச்சாலை.

இவ்வண்ணம் கிராம முதியோர்களுக்கு சுமார் 18, 20 வயதும், அதிகமும் ஆனவர்களுக்கு, உலக விவகாரம் ஒருவாறு அறியத்தலைப் பட்டவர்களுக்குப் பயன்படுமாறு **முதியோர் கிராமக்கல்வி வித்தியாசாலை** ஒன்று சென்ற சித்திரை (ஏப்ரல்) மாதம் **மன்னார்குடி கௌமார குருகுலத்தில்** நடைபெற்றது.

அப்போது (1) சமயம், ஒழுக்கம் (2) சுகாதாரம் (3) கிராமப் பொருள்நிலை (4) தமிழ்மொழி (5) தேச சரித்திரம், பூகோளம் (6) தேச பரிபாலனம் (7) பூதபௌதிக அறிவு. என ஏழுவகையாக வாழ்க்கை அறிவுத்துறைகளைப் பிரித்து பல பேரறிஞர்களால் கல்வி புகட்டப்பட்டது. அவ்வாக்குகளெல்லாம் அச்சிடப்பட்டு இவ்வித்தியா சாலைக்கு வந்த மாணவர்களுக்கு மனதில் நன்கு ஆழ்ந்து பதியுமாறு அவ்வப்போது கொடுக்கப்பட்டன. மற்றவர்களுக்கும் பயன்படுமாறு அவைகளை இங்கு ஒரு நூலாகத்திரட்டி வெளியிட்டுள்ளோம். இந்நூலின் பல ஆசிரியர்களுக்கும் கௌமார குருகுலத்தின் சார்பாக நான் நன்றி செலுத்துகிறேன்.

குறைபாட்டுக் கோருமிரக்கம்.

ஒவ்வொரு விஷயமும் பொதுவகையில் இங்கு கூறப்பட்டுள்ளதே அல்லாமல் விரிவாகவாவது ஆழ்ந்தாவது எடுத்துச்சொல்லப்படவில்லை. துவக்கத்தில் எளிதில் அறியவேண்டிய அளவே விளக்கப்பட்டுள்ளது. அவகாசம் போதாது, அதிக நெருக்கடியில், ஆசிரியர்களால்எழுதப் பட்டும் அச்சில் அடிக்கப்பட்டும் இத் தொகுதி சேர்க்கப்பட்டமையால் பல குறைகள் உள்ளன. அவைகளுக்கு நானே பொறுப்புள்ளவனே அன்றி ஆசிரியர்களாவது அச்சாலையாளர்களாவது உரித்தானவர்கள் அல்ல.

கிராமக்கல்வி நலம் பெற்று கிராமவாசிகள் நன்னிலை அடையுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக!

மன்னார்குடி
18—7—1932

க. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலம், மன்னார்குடி.

முதியோர் கல்வி நிலையம்.

சங்க நிகழ்ச்சிமுறைக் குறிப்பு.

1. முதியோர்கல்வி—யாது?

முதியோர்கல்வி வயது முதிர்ந்தவர்களுக்கு போதிக்கும் கல்வியாகும்; சாதாரணமாய் பள்ளிக்கூடங்களுக்குப் போகும் பிள்ளைகள், வாலிபர்கள் அல்லாதவற்கு என்றபடி. வயது முதிர்ந்தவர்கள் பற்பல வயதுள்ளவர்களாகவும் பலவித மனப் பாங்குடையவர்களாகவும் இருப்பார்களானதால் அது தனித் தனியாக ஒவ்வொருவருக்கும் தக்கபடியிருக்கவேண்டும்; சாதாரணப் பள்ளிக்கூடம்போல் ஒரே முறையில் அவர்களைப் போதிக்க முடியாது. அது வாழ்க்கையில் உடனே பயன்படக் கூடியதாக இருக்கவேண்டும்; எளிதானதாக இருக்கவேண்டும்; பலரும் தங்கள் தங்கள் தேவைக்குத் தக்கதாக உபயோகப் படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். தீவிர கௌமாரன் ஒவ்வொருவனும் தன்னைச் சுற்றியுள்ள உலக விஷயம் பொருள் ஒவ்வொன்றையும் பற்றிக் கொஞ்சமாவது அறிந்து கொள்ள ஆசைப்படுவான்; தான் நேரில் சம்பந்தப்பட்ட சில விஷயங்களைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்பு வான். முதியோர்கல்விமுறை எதுவும் இந்த தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டும்.

(2) முதியோர்களின் கல்வியானது உத்தியோகத்தைப் பெறுவதற்காக அல்ல; வித்துவான்களாகிக் கல்வி சாமர்த்தி யத்தினால் வாதம் செய்வதற்காகவும் அல்ல; கச்சேரிகளுக்குச் சென்று கக்ஷி ஆடுவதற்காகவும் அல்ல; திறந்த கண்ணுடன் பட்டப்பகலில் பாதையில் எவ்விதம் ஒருவன் நடந்து செல்லு வானோ அவ்விதமே முதியோர்கள் தங்கள் வாழ்வில் குடும்பத் தையும், குடித்தனத்தையும், தொழிலையும், ஜனசமூகத்தையும், தேசபரிபாலனத்தையும் சுயநலம் பொதுநலம் நன்கு விளங்கும் படி தெரிந்து நடத்துவதற்கான அறிவையும் ஒழுக்கத்தையும் தரும்படியான கல்வி எதுவோ அதுவே முதியோர் கல்வி யாகும். அது எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளும்படி செய்

வதுமாத்திரம் அல்ல; அறிவைப்புகட்டி சுய தைரியத்தை எழுப்புவதுமாகும். வெளிக்கட்டுப்பாடும் நிபந்தனைகளும் வற்புறுத்தலும் எவ்வளவு செய்தபோதிலும் அவ்வித அந்தரங்க உணர்ச்சியும் விருத்தியும் இல்லாவிட்டால், உண்மையான முன்னேற்றம் ஏற்படாது. இதனல் கிராமவாசிகளுக்கு இப்போது முதல் தேவையாக உள்ளது முதியோர் கல்வியே.

(3) முதியோர் கல்வி சிலருக்கே உரித்தான சிறப்பு எனுதபடி ஜனசமூகத்திலுள்ள யாவருக்குமே அறிவுபுகட்டுமாதலால் அதை சர்வஜனக் கல்வி எனவும், கிராமவாசிகளின் தேவைகளை நிறைவேற்றி அவர்களுடைய அபிவிருத்தியையும் ஆனந்தத்தையும் எழுப்புமாதலால் அதை கிராமக்கல்வி எனவும், கிராமாந்தரத்தில் உள்ள எளிதானதும் நிறைந்ததும் நேர்மையுமான நாகரீகத்தின் உருவமாக இருக்குமாதலால் அதை கிராமாந்தரக் கல்வி எனவும், இந்தியர்களின் இயற்கையான வாழ்க்கைக்கு அடிப்படையான முன்நோக்கங்களையும் ஈசுவரதத்துவங்களையும் நிலைநிறுத்தி முன்னுக்குக்கொண்டு வருமானதாலும் ஜனங்களின் தாய்மொழியிலேயே அக்கல்வி கற்றுக்கொடுக்கப்படுமானதாலும் அதை யாவற்றிற்கும் மேலாகத் தேசீயகல்வி எனவும் நாம் கூறுவோம்.

2. கௌமார குருகுலம் என்னும் பெயர்.

முதியோர் என்னும் பெயர் சிவில் சட்டப்படி 12 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கும், 14 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கும், முசல்மன் நியமப்படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் 15 வயதிற்குமேல் உபயோகிக்கப்படும். கௌமாரம் என்ற பதம் குமரன் என்பதைத் தழுவியது; குமரன் என்பதைத் தமிழில் 16 முதல் 22 வரை வயதுள்ளவர்களுக்குக் கூறுவோம்; குருகுலம் என்பது ஆசிரியர்களும் மாணவர்களும் கூடி வசித்து கல்விகற்கும் நிலையமாவது சாமான்னியமாய் யாவரும் அறிவர். ஆதலின் நமது முதியோர் கல்வி நிலையம் கௌமார குருகுலம் எனப் பெயர்பெற்றது.

3. மன்னார்குடி இடமும் தொண்டின் எல்லையும்.

மன்னார்குடியை ஒரு பட்டணம் என்பதைவிட சில கிராமங்கள் கூடியதொரு ஸ்தலமெனச் சொல்லல் பொருந்தும்; அது காவிரிப்பாசன நஞ்சைக்கிராமங்களுக்கும், மற்றை மேட்டாங்காடான புஞ்சை கிராமங்களுக்கும் இடையே உள்ளது. அதைச் சுற்றியே கள்ளர்களின் பல வகுப்பார்கள் வாழ்கிருர்கள். தஞ்சை ஜில்லா சிறந்த புத்திசாலித்தனத்திற்குப் பேர்

பெற்றதாக இருப்பினும், கள்ளர்களின் கல்வியின்மையை யாவரும் அறிவர். மன்னார்குடியைச்சுற்றி 12 மயில் நேர்தூரத்திற்குள்ளான கிராமங்களிலே கௌமார குருகுலக் கல்வித் தொண்டை இயற்றுவதென நமது நோக்கம். இந்த விஸ்தீரணத்தைக்காட்டும் ஒரு படமும், கௌமார குருகுலப் பூமியும் அதற்கு அருகாமையான கட்டிடங்கள், குளம், பெரும் ஆலமரச் சோலையும் அடங்கிய ஒரு படமும் இத்துடன் அச்சிடப்பட்டுள்ளது.

ஒவ்வோரு தாலுக்காவிலும் உள்ள கிராமங்கள்.

நேர் தூரம்	மன்னார்குடி	தஞ்சாவூர்	பாபநாசம்	நன்னிலம்	நாகப்பட்டணம்	திருத்துறை	பட்டுக்கோட்	மொத்தம்
0-4 ம.	23	—	—	—	—	—	—	23
4-8 ம.	68	—	—	5	—	—	6	79
8-12 ம.	46	8	26	34	2	10	14	140
மொ.	137	8	26	39	2	10	20	242

4. நமது கல்வி நிலையத்தின் நோக்கங்கள்.

(1) 1930-ஆு நவம்பர்மீ 23உ மேற்சொல்லிய குருகுலத்தின் அஸ்திபாரக்கல் நாட்டியபோது அதன் நோக்கம் இன்னதென்று கீழ்வருமாறு விவரிக்கப்பட்டது:—

“கிராம ஜனங்கள் இங்குவரவும், இங்கிருந்து உபாத்தியாயர்கள் கிராமங்களுக்குச்சென்று சிற்சில வாரங்கள் தங்கி தற்கால அறிவுத் துறைகளையெல்லாம் பரப்பியும், பழைய பெருங்கருத்துகளைப் புதுமுறைகளாற் போதித்தும், வயது முதிர்ந்தவர்க்குக் கல்வி புகட்டுவதற்கென்று இங்கே ஒரு ஸ்தாபனம் நிறுவ ஏற்பாடாகியிருக்கிறது. இந்த நோக்கத்தோடு வான நூல், உடல் நூல், பூகோள நூல், உயிர்நூல் முதலியவைகளைப்பற்றிய சில படங்களையும், வெவ்வேறு பொருள்களைப் பற்றிய சில சிறு புத்தகங்களையும், ஒரு நிழற்படக்காக்ஷி விளக்கையும் (மாஜிக்லான்டர்ன்), அதற்குவேண்டிய சில கண்ணாடிப் படங்களையும் சேகரித்து வேலை தொடங்கியிருக்கிறோம். மேற்படி படங்கள் பௌதிக அறிவு (சயன்சு) சம்மந்தமானவையும் மதசம்பந்தமானவையுமாம். அவைகளில் எழுபது படங்கள் இராமாயணக்கதை முழுவதையும் பற்றியவை வெவ்வேறு கிராமங்களிலிருந்தும் சில வயது முதிர்ந்தவர்கள் இங்கேவந்து 4, 8, அல்லது 12 மாதகாலம் தங்கியிருந்து, தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு வாழ்க்கை நடாத்தும் முறையைக் கற்றுக் கொண்டு பின் அதன்படி வாழுமாறு, பழக்கம், படிப்பு இவ்

விருவகையாலும் அறிந்துகொள்ளும்படி ஒரு பள்ளிக்கூடம் துவக்கவேண்டும் என்ற நோக்கமும் இருக்கிறது."

(2) பணவசதியுள்ளவரை வாசகசாலைகள், புத்தகசாலைகள், இராப்பள்ளிக்கூடங்கள் முதலியவைகளைப் புதியதாக ஏற்படுத்துதல், இப்படிப்பட்ட பழைய ஸ்தாபனங்களுக்கு உதவுதல், மதம், பௌதிகம், கைத்தொழில், உழவு, ஐக்கிய இயக்கம், முதலிய துறைகளிலே அறிவைப் பெருக்குதல், மற்றும் கிராம ஜனங்கள் தங்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையிலும் கிராமப் பொது வாழ்க்கையிலும் நாடோறும் நன்னோக்கமுடையவர்களாயும் நற்செய்கை யுடையவர்களாயும் எல்லா வகையினும் மேம்பாடு அடையும்படி இயன்ற முறைகளைக் கையாளுதல், ஆகிய நோக்கங்கள் எல்லாம் இங்கே சங்கற்பித்த ஏற்பாட்டில் அடங்கும்.

(3) மேற்படி ஏற்பாடு வயது முதிர்ந்தவர்க்குமட்டும் என்று வைத்துக்கொள்ளப்படாது; பகற் பள்ளிக்கூடங்களுக்குப் போக இயலாத ஏழு வயதிற்கு மேற்பட்ட இளம் பிள்ளைகளுக்கும் பயன்படலாம்.

(4) மேலே 4 (1)வது பாராவிற் சொன்ன பள்ளிக்கூட வேலையில், ஜனங்கள் எளிதில் பிரியப்படக்கூடிய உபந்நியாசங்கள் செய்வதும், நாலு மாதத்திற்குக் குறைவான கால அளவிலே படிக்கத்தக்க வகுப்புகள் நடத்துவதும் அடங்கும்.

(5) இந்த நிலையத்தின் நோக்கம் கல்விப் பயிற்சிமட்டுமே. இது கிஞ்சித்தும் இராஜீயத் தொண்டுடன் சம்மந்தம் அற்றது. கல்விப்பயிற்சி உண்மையும் பயனுள்ளதும் ஆகவேண்டுமானால், அது மனதைத் தெளிவிப்பதற்கும் ஊக்கம் உண்டாக்குவதற்கும், வாழ்க்கையின் எல்லாத்துறைகளையும் அளாவியிருக்க வேண்டும். ஆனால், அரச அதிகாரத்தைக் கைக்கொள்ளும் நோக்கம் எதற்காகவேனும் நோக்க பிரசாரமோ ஆர்ப்பரிப்போ இந்த ஏற்பாட்டில் அடங்காது. ஆகவே, அத்தகைய ராஜீய காரியங்களில் இந்த நிலையச்சொத்தில் ஒரு சிறிதும் பயன் படுத்தக்கூடாது என்று கண்டிப்பாய்த் தடுக்கப்படுகிறது.

5. இதுவரைத் தயார்செய்தது.

(1) இந்நிலையத்தை ஸ்தாபித்த இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை 1925 வருஷத்தில் ஒருவருஷ இரஜாவில் இருந்தபோது, இக்கல்வித் தொண்டை ஆற்றும்படி ஒரு மனக்கிளர்ச்சி தனக்கு உதயமானதாகவும், சர்வஜனக் கல்வியே

கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்கு முதல் ஆவசிகம் எனவும் அறிவைப் பரப்புவதே உயர்ந்த தொண்டு எனவும், தமக்குப் புலப்பட்டதாக எண்ணுகிருர்.

(2) அதன்மேல் "எல்லாருக்கும் இனமாகக் கல்வி கற்பிக்குமுறை" ஒன்றை அவ்வாண்டு ஏப்ரல்மீ 28உயில் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார் தலைமையில் சென்னை கோகேல் ஹாலில் இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை எடுத்து விளக்கியதின் பின் உயர்திருவாளர்கள் சர். தி. சதாசிவ ஐயர் அவர்கள், எஸ். முத்தையா முதலியார் அவர்கள், லேடி சந்திர சேகர ஐயர் அவர்கள், எஸ். சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் அம்முறையை விரித்துவிளக்கி ஆமோதித்தார்கள். அப்போது எல்லோருமாக கல்லூரி மாணவர்களைக் கோடை ஓய்வுகாலத்தில் தங்கள் தங்கள் கிராமங்களில் கல்வி இல்லாதவர்களுக்கு 6 வாரத்தில் படிப்பது, எழுதுவது, கணக்குப் போடுவது என்ற மூன்று முதல் கல்வியைப் போதித்து நமது நாட்டு கல்வியின்மையை ஒழிக்கும்படி வேண்டினார்கள். சில கிராமங்களில் இம்முறை கையாளப்பட்டது. அப்போது ஏற்பட்ட அனுபவத்தால் அவர் முதியோர் கல்வி முதல்வாசக புத்தகத்தை எழுதி வெளியிட்டார். சாதாரணக் குறைபாடுகளோடு கூடிய சில இராப்பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன.

(3) மன்னார்குடியில் 1931ஸ் அக்டோபர்மீ 18உக்குச் சரியான பிரசோற்பத்தி-ஸ் ஐப்பசிமீ 2உ ஒரு கிராமக் கல்வி மகாநாடு கூடியது. அப்போது சுமார் 30 கிராமங்களிலிருந்தும் 200 பேருக்குமேல் கிராமவாசிகள் வந்திருந்தனர். அப்போது கௌமார குருகுலக் கல்வித்திட்டங்கள் கிராமவாசிகளுக்கு எடுத்து விளக்கப்பட்டன. அதன் தொடர்பாக ஐப்பசிமீ 5உயிலிருந்து ஒரு சுற்றுப்பிரயாண புத்தகசாலைத் தொண்டு, இதற்கெனப் பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட இரட்டை மாட்டுவண்டியில், பக்கத்தில் உள்ள தட்டுகளில் புத்தகங்களுடனும் அடிப்பெட்டியில் கிராமபோன் நிழற்படக் காக்ஷி விளக்கு முதலியவற்றுடனும், ஆரம்பம் செய்யப்பட்டது.

(4) இராவ்சாகிபு சு. வி கனகசபைப் பிள்ளை 1932-ஸ் ஜனவரிமீ 27உ எழுதியதும், மன்னார்குடி சப்ரிஜிஸ்டர் ஆபீசில் 1932-வருஷத்திய 264 நெ. தஸ்தாவேஜாக தாக்கல் செய்யப்பட்டதுமான தரும சாசனத்தால் ஏற்பட்ட கொடையுடன் இக்கல்விநிலையம் நேர்மையும் சட்டப்படிக்குள்ளதுமான யாவருக்கும் உரிய ஒரு பொதுநிலையமாக ஸ்தாபிக்கப்பட்டது.

6 கிராம முன்னேற்றம்—நமது முன்நோக்குகள்.

(1) முதியோர்கல்வியின் முக்கிய நோக்கம் இந்தியாவில் என்னவென்ருல், கிராமங்களும், கிராமவாசிகளும் மொத்தமாக ஏகோபித்து முன்னேற்றம் அடைவதேயாகும். கீழ்மக்களும், தீண்டாதவரும், கல்வியீனர்களும் உயர்வது அவசியமே; ஆனல் மேன்மக்களும், நடுத்தரத்தவர்களும் தற்கால தேச வர்த்தமானத்திற்குத்தக உயர்ந்து இதயம் பூத்து இணங்கிக் கூடாவிட்டால், உண்மையாக முன்னேற்றம் இராது, நிலேத்து நில்லாது.

(2) ஜன சமூகத்தில் எந்த நிலேயில் இருந்தபோதிலுங் கூட, அறிந்தும் அறியாமலும் ஒவ்வொருவனும் தனனேச்சுற்றியிருக்கிறவர்களேப் பார்த்து அவர்களேப் பின்பற்றி வாழ்கிருன். இவ்விதமாக உயர்ந்தவர்கள் எவ்விதம் நடக்கிருர்களோ அதுவே மற்றவர்களுக்கு உதாரணமாக அமைகிறது. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" "யதாராஜா ததாபிரஜா" என்ற பழமொழிகளே நோக்குக. ஆதலின் உயர்ந்தோரையும் நடுத்தரத்தாரையும் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் தாங்கள் செய்யவேண்டிய கடமையை எடுத்துக்காட்டி எழுப்பவேண்டும். தாழ்ந்தவர்களுக்கும் படிக்க எழுத கணக்குப் போட சொல்லிக்கொடுப்பதுடன் தினசரி வாழ்க்கையில் அவசியமான பிரதம அறிவையும் ஊட்டவேண்டும்.

(3) இவ்விதமாகக் கிராம முன்னேற்றத்தைப் பற்றிய நமது முன்னேக்கு யாதெனில் தாழ்ந்தோருக்கு பிரதம அறிவை கொடுப்பதுடன் இப்புண்ணிய பூமியின் இயற்கை சுபாபமான வாழ்க்கையின் ஆஸ்திக அடிப்படையை நிலேநிறுத்தி உயர்த்துவதைத் தலேமேற்கொண்டு உயர்ந்தோரையும் நடுத்தரத்தாரையும் தற்கால ரீதியில் எது சரியென்று காணவும் அதன்படி நடக்கவும் எடுத்துக்காட்டுவதே

7. கிராமக்கிளேகளே அமைக்கும் முறை.

(1) கிராமக்கிளேகளே நமது தொண்டிற்கு அஸ்திவாரமாகும். இந்நிலேயத்தின் நோக்கங்களே நிறைவேற்ற ஒரு கிராமம், குக்கிராமம் அல்லது தெருவில் குறைந்தது 16 பேர்கள் சேர்ந்தால் அந்தக்கோஷ்டி ஒரு கிராமக்கிளேயாகும் அவர்களில் மூன்றுபேர்கள் படிக்கக் கொடுக்கும் புத்தகங்களேப்பாதுகாத்து அங்கத்தினர்களுக்குக் கொடுத்துவாங்கி இந்நிலேயத்திற்குத் திருப்பிக்கொடுப்பதற்கும், புத்தகங்கள் காணுமல்போயோ கெடுதலாகியோவிட்டால் அதற்கு விலே கொடுப்பதற்கும்

உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு எவ்விதமான சந்தாவும் இல்லை; இஷ்டமுள்ளவர்கள் நன்கொடையாகக் கொடுக்கப்படும் பொருள் ஏற்றுக்கொள்ளப்படும். இம்மூவரும் கிளைச்சபை நிர்வாக அமைச்சர்கள் ஆவர். இவ்விதம் 12-க்கு குறையாத கிளைச்சபைகள் ஒரு பிரதேசத்தில் ஏற்பட்டால், அவைகளைச் சேர்த்து ஒரு வட்டமாக்கி ஒரு உதவிக் காரியதரிசியை நியமித்து அவ்வட்டம் தலைமை ஆபீசுடன் கூட்டப்படும்.

(2) இவ்விதமான சிறு சிறு கிராமக்கிளைகள் கிராமத்தாருக்கு சௌகரியமாக இருக்கும். ஏனெனில் அடுத்து அடுத்து ஒரே இடத்தில் வாழ்வதால் கிளை அங்கத்தினர்கள் எச்சமயமும் சுலபமாகக் கூடிக்கலக்கலாம்; ஜாதி, மதம், கக்ஷிகள்போன்ற தடை இராது. ஒரு கிராமத்தில் பல கிளைகள் இருந்தால், அவைகள் எல்லாம் அமாவாசை அல்லது வேறு விசேஷ நாட்களில் எளிதில் கூடி தங்களுக்குள் ஒற்றுமை நேசம் பொது நோக்கம் முதலியவைகளை விருத்திசெய்யக்கூடும்.

8. தொண்டாற்றும் முறை.

(1) கல்வி கற்பிக்கவேண்டிய முதியோர்கள் குறைந்தது மூன்றுவகையாவர்:— (1) கொஞ்சமும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் (2) தாழ்ந்த வகுப்புகளில் கல்விகற்ற கொஞ்சம் படித்தவர்கள் (3) தாய் பாஷையாகிய தமிழில் சாதாரணமாக நன்முய் படித்தவர்கள்; ஆனால் தங்கள் வாழ்க்கையையும் தொழிலையும் விருத்திசெய்து கொள்ள முடியாதவர்கள்; சுத்த வாழ்வு சுகாதாரம் முதலியவைகளைப்பற்றி சுய அறிவு இல்லாதவர்கள்; தினசரி வாழ்க்கைகளைப்பற்றி ஏன், எப்படி நடக்கிறோம் என்று அறியாதவர்கள்; சொந்த, ஜனசமூக, பொது விஷய, குடும்ப விஷயங்களைப்பற்றியதில் இருபுறமும் உற்று நோக்க இயலாதவர்களாக இருப்பவர்கள்.

(2) முதல் சொல்லிய கொஞ்சமும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு கிராமத்திலேயே இராப் பள்ளிக்கூட மூலம் கற்றுக்கொடுக்கலாம். கார்லைல்என்ற பெரியார் சொல்லியவாறு "இக்காலத்தில் உண்மையான சர்வகலாசாலை யாதெனில் புத்தகசாலைகளே" ஆனதால், இரண்டாவதாகவும் மூன்றுவதாகவும் சொல்லியவர்களுக்கும் ஒருவாறு நமது சுற்றுப்பிரயாண புத்தகசாலை ஏற்பாட்டின் மூலமாய் அறிவு புகட்டலாம். ஆனால் மூன்றுவதாகச் சொல்லப்பட்டவர்களை செம்மை செய்யவேண்டுமானால் கல்வி அறிவு புகட்டவேண்டியதற்கான

சாதனங்கள் அமைந்த கல்வி நிலையத்திற்கு (நமது கல்விநிலையம் அவ்விதமாகத் தயாராகிவருகிறது.) வந்து, நல்ல அறிவு உயர்ந்த ஒழுக்கம் உடையவர்களுடன் பழகுவதினாலேயே அவ்விதம் செம்மை செய்ய இயலும்.

(3) முதியோர்கல்வியை விருத்திசெய்ய பல முறைகள் இருப்பினும், அடியில்கண்ட வகையளவில் நமது தொண்டை நாம் ஆற்றுவோம்:—

(i) சுற்றுப்பிரயாணப் புத்தகசாலைத் தொண்டு;— இது இதுவரையில் சில கிராமங்களில் நடைபெற்றுவருகிறது. நமது தொண்டின் எல்லைக்குட்பட்ட மன்னார்குடியைச் சுற்றி 12 மயில் நேர் தூரமுள்ள கிராமங்களுக்குக் கூடியவரையில் புத்தகங்கள் உள்ள அளவு இத்தொண்டை விருத்திசெய்து வருவது; இச்சுற்றுப்பிரயாணங்களில் கிராமபோன் பாடல்களைப்பாடி ஜனங்களைச்சேர்த்து உற்சாகம் செய்வது; நிழற்படங்களைக் காட்டி பொருளை விளக்குவது. பொதுஜன உபந்நியாசங்கள் செய்வதும் இத்தொண்டில் அடங்கியது.

(ii) வாசகசாலைகளை:— கிராமக் கிளைகளுடன் சேர்த்து திறப்பது. தினசரி, மாதாந்தப் பத்திரிகைகள் முதியோர் கல்வி வளர்ச்சிக்கு ஒரு பெரும் சக்தியென யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். முதியோர்களுக்கும் அவைகளைப்படிப்பது விருப்பம். கிராமக்கிளை அங்கத்தினர் இருவர் படிக்கத்தெரியாதவர்கள் அநேகர் கூடிசேர்ந்து கேட்கக்கூடிய ஒரு பொது இடத்தில் குறித்த காலத்தில் கூடிய மட்டும் அநேக நாட்களில் படிப்பதாக ஒப்புக்கொண்டால் கிராமங்களிலேயும் மற்ற இடங்களிலேயும் கிடைக்கும் பத்திரிகைகளைச்சேர்த்து கிராமக்கிளைகளுக்கு அனுப்பப்படும்.

(iii) கிளை புத்தகசாலைகள்:— ஒரு கிராமக்கிளை சபையார்கள் 6 மாதத்திற்கு ஒருமுறை குறைந்தது ரூ. 10 கொடுத்தால் அதைக்கொண்டு அவர்களுக்கு புத்தகங்கள் வாங்கிக்கொடுக்கப்படும். அப்புத்தகங்கள் அக்கிளைச்சபைக்கே சொந்தம். நாம் செய்வது என்னவென்றால் அவர்களுக்கு இஷ்டமானதும் தேவையானதுமான புத்தகங்களைத் தெரிந்தெடுத்து வாங்கிக் கொடுப்பதும், அவர்கள் அவைகளைப் படித்தபிறகு மற்றக் கிளைச்சங்கங்களுடைய புத்தகங்களை மாறி மாறி வழங்குவதே. இவ்வகையில் அதிகச்செலவின்றியில் ஒவ்வொரு கிளையும் அநேக புத்தகங்களைப் படிக்கலாம்.

(iv) இராப்பள்ளிக்கூடங்கள்:— இவைகள் கொஞ்சமும் எழுதப்படிக்கத்தெரியாதவர்களுக்கே பெரும்பாலும் தேவையாகும்; எழுதப்படிக்கத்தெரிந்தவர்களுக்கும் கொஞ்சம் பயன்படும். கிராமத்திலே படித்த வாலிபர்கள் ஒருவர் இருவர் இரவில் தருமத்திற்கென பாடஞ்சொல்லிக்கொடுக்க ஏற்றுக் கொள்ளவேண்டும்; அல்லது கிராமத்தார்கள் உபாத்தியாயருக்கான சம்பளம் ஏற்பாடுசெய்யவேண்டும். புத்தகங்கள் விளக்கு எழுதும் பெரும் கருப்புப்பலகை (பிளாக்போர்ட்) முதலிய, நிலையத்தில் பணம் இருப்பதற்குத்தக்கபடி கிராமத்திற்குத் தக்கபடி கிராமத்திற்கு உதவிசெய்யவும், அங்கு கல்வி கற்பிக்கு முறையைச் சீர்செய்து பள்ளிக்கூடத்தை விசாரிக்கவும் நாம் முயற்சிசெய்வோம். பள்ளிக்கூட இயக்கத்தில் கிராமத்தார்களுக்கு சுய நம்பிக்கையும் உற்சாக மெழுப்பி உதவி புரிவதல்லாதபடி, பள்ளிக்கூடத்தை நாம் நடத்துவதென்பது நமக்கு நோக்கமல்ல.

(v) சிறு காலக்கல்விச்சாலைகள்:— இவை இக்கல்வி நிலையஸ்தலத்தில் அவ்வப்போது நடைபெறும். விவசாயத்தொழிலிலிருந்து விடுமுறை கிடைக்கும் காலத்து கோடை அல்லது மழை காலங்களில் அநேகமாய் இவைகளை ஏற்பாடு செய்யலாம். கிராமக் கல்வியின் பல விஷயங்களைப் பற்றியும் அதற்குத் தகுந்த ஆசிரியர்களை சென்னையிலிருந்தும் மற்ற ஊர்களிலிருந்தும் கூட்டி கல்வி கற்பிக்கப்படும். கூடியமட்டும் படிக்கவரும் மாணவர்கள் இங்கே தங்கி சாப்பிட்டுக் கூடி வாழ்ந்து இருக்க வேண்டும். இத்தகைய சிலவுக்காகக் குறிப்பிட்ட தொகை அவர்கள் கட்டவேண்டும். அவ்வித தொகை கூடியவரை குறைந்ததாகவும் அநேகம் பேர்கள் சேரக்கூடியதாக இருக்கும்படிக்கும் நிச்சயிக்கப்படும்.

பகல் பள்ளிக்கூடங்களுக்குப் போகாத கிராம வாலிபர்களுக்கு 4, 8 மாதங்களுக்கான குடியிருப்புப் பள்ளிக்கூடங்களும் ஆலோசனையில் உள்ளன. கிராமங்களில் இன்னும் தொண்டாற்றி அநுபவம் வந்து போதுமான பணம் கையில் உள்ளபொழுதுதான் இவைகளை ஆரம்பிக்க யத்தனம் செய்யலாம்.

அத்தகைய வித்தியாசாலைகளில் சமயம், ஒழுக்கம், சுகாதாரம், சுத்தவாழ்வு, கிராமப்பொருள் நிலை, தேச சரித்திரம், பூகோளம், தமிழ்மொழி, தேசபரிபாலனம், பூதபௌதிக அறிவு, குடும்பக்கைத்தொழில், விவசாயம் முதலிய பாடங்கள் கூடியமட்டும் கண்ணுக்கு ருஜுவாகும் முறையிலும், மாணவர்கள் ஆசிரியர்களை தாராளமாகக்கேட்டு அறியும் வகையிலும்,

அவர்களுடன் கலந்து கூடி வாழும் விதத்திலும் சொல்லிக் கொடுக்கப்படும். அக்காலங்களில் தனிப்படவும் கூட்டமாகவும் கடவுளிடம் ஞானம் பக்தி மேலிடும்படியாகவும், உண்மையான வகையில் தினசரி வாழ்வும் ஒழுக்கமும் படியும்படியாகவும் ஆசிரமம் அல்லது குருகுல வாழ்வு வாழவேண்டும்.

(vi) குருகுலத்திற்கு வந்து போதல்:— கிராமவாசிகள் தங்களுக்கு ஓய்வு உள்ள சௌகரியமான காலங்களில் முன்னதாகத் தெரிவித்து சில நாட்கள் குருகுலத்திற்கு வந்து தங்கி புத்தகசாலையில் படித்து அங்குள்ளவர்களிடம் கேட்டு வேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். வேண்டிய விஷயங்கள் பூராவாகச் சொல்ல இயலாவிடினும் விசாரித்துக் கூடிய வரையில் சகாயம் செய்வோம்.

9. காரிய நிர்வாகம்.

(1) கீழ்க்கண்டபடி ஏற்படும் நிர்வாக சபையார் (எக்ஸிகியூடிவ் கமிட்டி) இக்கௌமார குருகுலக் கல்வி நிலையத்தின் வரவு செலவுகளுள்ளிட்ட எல்லாக் காரியங்களையும் நடத்தி வர வேண்டியது. இந்நிலையத்தின் சொத்துக்கள், அதற்கு வரும் நன்கொடைகள், கையொப்பங்கள், இதர வருமானங்கள் ஆகிய ஆஸ்தி யனைத்தும், அவற்றின் மூலம் உண்டாகும் பொருப்பு முழுவதும் மேற்படி சபையாருக்கே உரியவை.

(2) தலைவர் (பிரசிடெண்டு) என்ற நிலைமையில் நான், கௌமாரக்கல்வி நிலையத்தின் காரியதரிசி, மன்னார்குடி சமரச ஞான சபையின் காரியதரிசியோ புத்தகசாலையாளரோ ஒருவர், உள்ளூர் வக்கீல் ஒருவர், உள்ளூர் பள்ளிக்கூட ஆசிரியர்களில் இருவர், (இம்மூவரும் என்னாலும், என் பின் என் வார்சுகளாலும் குறிப்பிடப்படவேண்டும்.) இந்த ஏற்பாட்டின்படி வேலை செய்யும் கிராமக்கிளைத் தொகுதிகளின் குறிப்பிட்ட பிரதிநிதிகளிலிருந்து தேர்ந்தெடுத்த அறுவர், மொத்தமாய் ரூ. 250 ஏனும் அல்லது வருஷந்தோறும் ரூ. 25 ஏனும் நன்கொடை அளிப்பவர்களால் தேர்ந்தெடுத்த மூவர், ஆகப்பதினைந்து உறுப்பினர் நிர்வாக சபைக்கு இருக்கவேண்டும். உறுப்பினரில் இருவர் மிராசுதார்களாயும் ஒருவராவது பெண்பாலராயும் இருக்கவேண்டும். எனக்குப் பின்பு நன்கொடையாளரால் மேலே சொன்ன மூவருக்குப் பதில் நால்வர் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். உறுப்பினர் ஒரு தமிழ் வருஷத்திற்கு உத்தியோகம் வகிப்பர். ஒவ்வொரு புது வருஷமும் குறிப்பிடுதலும், தேர்தலும் நடக்கவேண்டும்.

(3) இதர நிர்வாக சபைகளுக்கு அடுத்த அதிகாரங்கள் இந்த நிர்வாக சபைக்கும் உண்டு ஒரு வருஷம் கிராமச்சேவை செய்து அதன்மூலம் வந்த அநுபவத்தை வைத்துத் தன் நடைமுறைக்கு வேண்டிய விதிகளை இச்சபை வகுத்துக்கொள்ள வேண்டியது. கிராம கிளைத்தொகுதிகள் இன்னும் திரண்டு ஒன்று சேரவேண்டும். இத்தொகுதிகள் சுமார் 12 ட்ஜனுவது சேரும் வரை அவைகளின் சார்பாக நிர்வாக சபையிலிருக்க வேண்டிய உறுப்பினரை நானே நியமிக்கவேண்டியது. அதன் பின் கிளைச்சபைகளால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

10. பொது.

(1) இந்நிலையக் காரியாதிகளுக்காக, ஒவ்வொரு வருஷமும் தமிழ் வருஷப்பிறப்பன்று துவங்கும். வருஷந்தோறும் முதன்மாசத்தில் முந்திய வருஷ அறிக்கைகளும் கணக்குகளும் முறைப்படத் தணிக்கையாகி அச்சடித்துப் பிரசுரமாகவேண்டும்; அடுத்த ஆண்டுக்கு வேலை திட்டமும், வரவுசெலவுத் திட்டமும் வகுத்துக்கொள்ளவும் வேண்டும். ஆங்கிரஸ வருஷப் பிறப்பன்று (1932 எப்ரல்) முதன்முதல் வேலை துவங்கும்.

(2) மேற்படி நிலையத்தின் வருமானம் மேற்குறித்த நோக்கங்களுக்காக மட்டுமே செலவாகவேண்டும். இந்நிலையக் காரியங்களுக்காக ஏற்பட்ட செலவுகளுக்காக வேனும் ஊழியத்துக்காக வேனும் உண்மையாய் நன்னம்பிக்கையுடன் கொடுபடுந்தொகைகளொழிய, இந்நிலைய உறுப்பினர்க்கோ, வேறு தனித்த நபருக்கோ, ஸ்தாபனத்துக்கோ இந்நிலையத்துப் பொருளிலிருந்து நேராக வேனும் மறைமுகமாக வேனும் ஒரு சிறிதும் கொடுக்கக்கூடாது.

(3) நூறு ரூபாயும் அதற்கு மேற்பட்டும் வரும் நன்கொடைத் தொகைகளைவைத்து, நன்கொடை செய்தவர்கள் விருப்பத்திற்கிணங்கவும் நிர்வாகசபையின் யுக்தானுசாரமாகவும், முதலைப் பெருக்கும் பொருட்டு ஒரு சேமத்தொகை சேர்க்கவேண்டும். இத்தொகையை நூறு ரூபாய் விலைக்கு மேற்பட்டு நிலம் வாங்குதல், கட்டடங்கட்டுதல் முதலிய சாஸ்வதச் சொத்துச் சேகரிப்புக்காகப் பயன்படுத்தவேண்டியது.

(4) இக்கல்வி நிலையத்தை ஸ்தாபித்த தருமசாசனத்தின் அடிப்படையான தத்துவங்களை அனுசரித்து அப்போதைக்கப்போது தேவையாகக் காண்கிறபடி நிர்வாகசபையார் சட்டதிட்டங்களை ஏற்படுத்துவார்கள்.

11. நிர்வாகசபை அங்கத்தினர்கள்

தலைவர்

திருவாளர்கள்

(1) இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
உதவி இஞ்சினீயர், பி. டபிள்யூ. டி., மன்னார்குடி.

உபத்தலைவர்

(2) இராவ்பகதூர் எஸ். பாஸ்கர ஐயர் பி. ஏ.,
பென்ஷன் சூப்பிரண்டிங் இஞ்சினீயர் பி. டபிள்யூ. டி.,
திருவாலங்காடு.

காரியதரிசி

(3) மா. இராமலிங்கம் பிள்ளை,
மோரியாசிரமம், மன்னார்குடி.

(4) ஆர். இராமகிருஷ்ண பிள்ளை, பி. ஏ.
பென்ஷன் சப்ரிஜிஸ்டிரார், சமரசஞான சபை,
புத்தகசாலை நிர்வாகம், மன்னார்குடி.

(5) எஸ். இரகுநாத ஐயர், வக்கீல் மன்னார்குடி,
பொக்கஷதார்.

(6) ரெவரென்ட் என். ஜி. பொன்னையா, பி. ஏ. எல். டி.
உதவித்தலைமை யாசிரியர், பின்டிலே கல்லூரி மன்னார்குடி.

(7) எஸ். வைத்திநாத ஐயர், பி. ஏ. எல். டி.,
தலைமை உபாத்தியாயர், தேசிய உயர்தரப்பாடசாலை.
மன்னார்குடி.

(8) ஜனப் பாவலர் எஸ். எம் முகம்மது யூசுப்சாகிபு,
பத்திராதிபர் ஷம்ஷுல் ஹுதா, மன்னார்குடி.

(9) க. காவேரியம்மாள், மோரியாசிரமம், மன்னார்குடி.

(10) வீ. கே. மீனாக்ஷிசுந்தரேச ஆலம்பிரியர்,
மிராசுதார், பருத்திக்கோட்டை.

மன்னார்குடி
31—3—1932

கையொப்பம்

சு. வி. கனகசபைப் பிள்ளை.
எஸ். பாஸ்கர அய்யர்.
மா. இராமலிங்கம் பிள்ளை.
ஆர். இராமகிருஷ்ண பிள்ளை.
எஸ். இரகுநாத ஐயர்.
என். ஜி. பொன்னையா.
எஸ். வைத்திநாத ஐயர்.
எஸ். எம். முகம்மது யூசுப் சாகிபு.
காவேரியம்மாள்.
வீ. கே. மீனாக்ஷிசுந்தரேச ஆலம்பிரியர்.

கௌமார குருகுலக் கல்வித் தொண்டின் எல்லை. படம் 1.



குறிப்பு:—(1) மூன்று வட்டங்களும் மன்னார்குடியிலிருந்து முறையே 4, 8, 12 மைல் தூரத்தில் உள்ளன.

(2) 12 மைல் தூரத்திற்குட்பட்ட விஸ்தீரணமே கௌமார குருகுலக் கல்வித் தொண்டின் எல்லை.



1. தாலுக்கா எல்லை.
2. ஜமீன் எல்லை.
3. ரயில் ரோட்டு
4. கப்பிரோட்டு.
5. மண்ரோட்டு.
6. வண்டிப்பாதை.
7. ஆறு.
8. வாய்க்கால்.
9. குளம்.

கௌமார குருகுல ஸ்தலம். படம் 2.

பின்டிலே கல்லூரி

விக்டோரியா கிளப்பு

சமரச ஞான சபை

தாலூகா போர்ட் ஆபீசு

கோவில்



கௌமார குருகுலம்

மோரியாசிரமம்

அம்மா குளம்

குறிப்பு:—(1) **கௌமார குருகுல** ஸ்தலம் வடக்கில் 87 அடியும், கிழக்கில் 298 அடியும், தெற்கில் 106 அடியும், மேற்கில் 284 அடியும், மொத்த விஸ்தீரணம் 64$\frac{3}{4}$ செண்டும் உள்ளது.

(2) **சமரசஞான சபையில்** ஒரு பொது ஜன புத்தகசாலை இருக்கிறது.

(3) **மோரியாசிரமம்** கௌமார குருகுலத்தலைவர் காரியதரிசி இருவர்களும் இருக்குமிடம்.

மன்னார்குடி கௌமார குருகுலத்தை யாவருக்கும் உரிய பொது நிலையமாக ஸ்தாபித்த தரும சாசனம்.

குறிப்பு:—மன்னார்குடி சப் ரிஜிஸ்டர் ஆபீசில் 1932ஹூ-த்து 264ம் நெ. பத்திரமாக ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது. ஆங்கிலத்தில் உள்ள அசல் பத்திரத்தின் மொழி பெயர்ப்பு பின் வருவது.

இறைவன் துணை.

தமிழ்மொழி தந்தவரென்றும், தமிழ் நிலத்துப் பழந் தலைவரென்றும் புகழ்பெற்ற அகத்தியமகா முனிவரது திருவருளை முன்னிட்டும், அவருடைய சிறந்த சிஷ்யரும் உடனுழைப்பவரு மான மோரிய மஹரிஷியின் திருவருளை முன்னிட்டும்,

கிராம ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் வயது முதிர்ந்தவர்க்குக் கல்வி கற்பிப்பதும் இப்போதைய நிலைமையிற் சிறந்த கருவி என்ற தெளிவுடனும், அறிவு குறைந்தவரைத் தேடிச்சென்று அறிவு தருவதும் யாவரும் உண்மை இன்ன தென்று உணரும்படி கற்பிப்பதுமே சிறந்த சேவை என்ற முழு நம்பிக்கையோடும்,

மன்னார்குடி சஞ்சீவித்தெரு மோரியாசிரமத்திலிருப்ப வரும், காலஞ் சென்ற சு. விஸ்வலிங்கம் பிள்ளையவர்கள் குமார ரும், ஹிந்துவும், சைவவேளாளரும், 52 வயதினரும், பி. டபிள்யூ. டி. அஸிஸ்டண்ட் இஞ்சினீயருமான ராவ்சாகிப் சு. வி. கனகசபை பிள்ளையாகிய நான்,

1930ஹூ என்னால் நிறுவப்பெற்றதும் மன்னார்குடியைப் பிரதான ஸ்தானமாகக் கொண்டதுமான கௌமாரகுருகுலத் தின் மூலமாக,

மன்னார்குடியிலும் சுற்றிப் பன்னிரண்டு மைல் தூரம் வட் டத்துக்குட்பட்ட கிராமங்களிலும் உள்ள வயது முதிர்ந்தவரிற் கல்விநலம் இல்லாதவர்க்கும் குறைந்தவர்க்கும், எளியவர்க்கும், சாதிமதபேதமின்றியும், ஆண் பெண் என்ற வேற்றுமையின்றி யும், இயன்றமட்டும் எல்லா முறைகளாலும் கல்விப் பயிற்சியை விருத்தி செய்வதற்காகவும் ஆதரவளிப்பதற்காகவும்,

இதன் (ஏ) பட்டியிற்கண்ட ரூ. 3500 பெறுமான ஸ்தாவர சொத்துக்கள், (பி) பட்டியிற்கண்ட ரூ. 3500 பெறுமான ஜங்கம சொத்துக்கள் (சி) பட்டியிற்கண்ட ரூ. 3000 ரொக்கம், ஆக ரூ. 10000 பதினாயிரத்தைப் பொறுத்து,

திடகாத்திரத்தோடும் நல்ல நினைவுடனும், எனது குடும்பத்தார் அனைவருடைய நிரந்தரமான சம்மதியோடும் ஒற்றுமையுடனும், என்னையும் என்வார்சு வகையராக்களையும் கட்டுப்படுத்தி, இந்த தரும சாசனம் எழுதிவைக்கிறேன்.

மேற்படி ரூ. 10000-த்தில் சுமார் ரூ. 600 போக மீதியனைத்தும் என்சுயார்ஜித சொத்துக்களிலிருந்து ஒதுக்கி வைத்தது. ஷை ரூ. 600-ம் பிறர் நன்கொடையாகவந்து (பி) பட்டியில்கண்ட ஜங்கம சொத்துக்களிற் சில வாங்குவதற்குப் பயன்பட்டிருக்கிறது. ஷை தொகையில் ரூ. 300 இப்போது சென்னையில் வசிப்பவரும், ரிட்டயர்டு சூப்பிரண்டெண்டிங் இஞ்சினீயருமான ராவ் பகதூர் எஸ். பாஸ்கரய்யரவர்கள் கொடுத்தருளியது.

2 (ஏ) 1930ஹு நவம்பர்மீ 23உ மேற்சொல்லிய குருகுலத்தின் அஸ்திபாரக்கல் நாட்டியபோது அதன் நோக்கம் இன்னதென்று கீழ்வருமாறு விவரிக்கப்பட்டது:—

“கிராம ஜனங்கள் இங்குவரவும், இங்கிருந்து உபாத்தியாயர்கள் கிராமங்களுக்குச்சென்று சிற்சில வாரங்கள் தங்கி தற்கால அறிவுத் துறைகளையெல்லாம் பரப்பியும், பழைய பெருங்கருத்துகளைப் புதுமுறைகளாற் போதித்தும், வயது முதிர்ந்தவர்க்குக் கல்வி புகட்டுவதற்கென்று இங்கே ஒருஸ்தாபனம் நிறுவ ஏற்பாடாகியிருக்கிறது. இந்த நோக்கத்தோடு வானநூல், உடல் நூல், பூகோள நூல், உயிர்நூல் முதலியவைகளைப்பற்றிய சில படங்களையும், வெவ்வேறு பொருள்களைப் பற்றிய சில சிறு புத்தகங்களையும், ஒரு நிழற்படக்காக்ஷி விளக்கையும் (மாஜிக்லான்டர்ன்), அதற்கு வேண்டிய சில கண்ணாடிப் படங்களையும் சேகரித்து வேலை தொடங்கியிருக்கிறோம். மேற்படி படங்களிற் பௌதிக அறிவு (சயன்சு) சம்மந்தமானவையும் மதசம்மந்தமானவையுமாம். அவைகளில் எழுபது படங்கள் இராமாயணக்கதை முழுவதையும்பற்றியவை. வெவ்வேறு கிராமங்களிலிருந்தும் சில வயது முதிர்ந்தவர்கள் இங்கே வந்து 4, 8, அல்லது 12 மாதகாலம் தங்கியிருந்து, தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு வாழ்க்கை நடாத்தும் முறையைக் கற்றுக்கொண்டு, பின் அதன்படி வாழுமாறு, பழக்கம், படிப்பு இவ்விருவகையாலும் அறிந்துகொள்ளும்படி ஒரு பள்ளிக்கூடம் துவக்கவேண்டும் என்ற நோக்கமும் இருக்கிறது.”

(பி) பணவசதியுள்ளவரை வாசகசாலைகள், புத்தகசாலைகள், இராப்பள்ளிக்கூடங்கள் முதலியவைகளைப் புதியதாக ஏற்படுத்துதல், இப்படிப்பட்ட பழைய ஸ்தாபனங்களுக்கு உதவுதல், மதம், பௌதிகம், கைத்தொழில், உழவு ஐக்கிய இயக்கம், முதலிய துறைகளிலே அறிவைப் பெருக்குதல், மற்றும் கிராம ஜனங்கள் தங்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையிலும் கிராமப் பொது வாழ்க்கையிலும் நாடோறும் நன்னோக்கமுடையவர்களாயும் நற்செய்கையுடையவர்களாயும் எல்லா வகையினும் மேம்படும்படி இயன்ற முறைகளைக் கையாளுதல், ஆகிய நோக்கங்கள் எல்லாம் இங்கே சங்கற்பித்த ஏற்பாட்டில் அடங்கும்.

(சி) மேற்படி ஏற்பாடு வயது முதிர்ந்தவர்க்குமட்டும் என்று வைத்துக்கொள்ளப்படாது: பகற் பள்ளிக்கூடங்களுக்குப் போக இயலாத ஏழு வயதிற்கு மேற்பட்ட இளம் பிள்ளைகளுக்கும் பயன்படலாம்

(டி) மேலே 2 (ஏ) பாராவிற் சொன்ன பள்ளிக்கூட வேலையில், ஜனங்கள் எளிதில் பிரியப்படக்கூடிய உபந்நியாசங்கள் செய்வதும், நாலு மாதத்திற்குக் குறைவான கால அளவிலே படிக்கத்தக்க வகுப்புகள் நடத்துவதும் அடங்கும்.

(இ) இந்த நிலையத்தின் நோக்கம் கல்விப்பயிற்சிமட்டுமே. இது கிஞ்சித்தும் இராஜீயத் தொண்டுடன் சம்மந்தம் அற்றது. கல்விப்பயிற்சி உண்மையும் பயனுள்ளதும் ஆகவேண்டுமானால் அது மனதைத் தெளிவிப்பதற்கும் ஊக்கம் உண்டாக்குவதற்கும், வாழ்க்கையின் எல்லாத்துறைகளையும் அளாவியிருக்க வேண்டும். ஆனால், அரச அதிகாரத்தைக் கைக்கொள்ளும் நோக்கம் எதற்காகவேனும் நோக்க பிரசாரமோ ஆர்ப்பரிப்போ இந்த ஏற்பாட்டில் அடங்காது. ஆகவே, அத்தகைய ராஜீய காரியங்களில் இந்தத் தருமச் சொத்தில் ஒரு சிறிதும் பயன்படுத்தக்கூடாது என்று கண்டிப்பாய்த் தடுக்கிறேன்.

(யப்.) மேலே குறித்த நோக்கங்கங்களில் ஒன்றாகிய கிராமப் புத்தகசாலைச்சேவை 1931ளு அக்டோபர்மீ 21உ முதல் துவங்கி, அதெற்கென்று ஆக்கிய ஒரு இரட்டைமாட்டு வண்டி மூலம் நடந்துவருகிறது.

3. (ஏ) கீழ்க்கண்டபடி ஏற்படும் நிர்வாக சபையார் (எக்ஸிகியூடிவ் கமிட்டி) இக்கௌமார குருகுலக் கல்வி நிலையத்தின் வரவு செலவுகளுள்ளிட்ட எல்லாக் காரியங்களையும் நடத்தி வரவேண்டியது. இந்நிலையத்தின் சொத்துக்கள், அதற்கு வரும்

நன்கொடைகள், கையொப்பங்கள், இதர வருமானங்கள் ஆகிய ஆஸ்தியனைத்தும், அவற்றின் மூலம் உண்டாகும் பொறுப்பு முழுவதும் ஷெ சபையாருக்கே உரியவை.

(பி) தலைவர் (பிரசிடெண்டு) என்ற நிலைமையில் நான், கௌமாரக்கல்வி நிலையத்தின் காரியதரிசி, மன்னார்குடி சமரச ஞான சபையின் காரியதரிசியோ புத்தகசாலையாளரோ ஒருவர், உள்ளூர் வக்கீல் ஒருவர், உள்ளூர் பள்ளிக்கூட ஆசிரியர்களில் இருவர், (இம்மூவரும் என்னாலும், என் பின் என் வார்சுகளாலும் குறிப்பிடப்படவேண்டும்), இந்த ஏற்பாட்டின்படி வேலை செய்யும் கிராமக்கிளைத் தொகுதிகளின் குறிப்பிட்ட பிரதிநிதிகளிலிருந்து தேர்ந்தெடுத்த அறுவர் மொத்தமாய் ரூ 250 எனும் அல்லது வருஷந்தோறும் ரூ 25 எனும் நன்கொடை அளிப்பவர்களால் தேர்ந்தெடுத்த மூவர், ஆகப்பதினைந்து உறுப்பினர் நிர்வாக சபைக்கு இருக்கவேண்டும். உறுப்பினரில் இருவர் மிராசுதார்களாயும் ஒருவராவது பெண்பாலாயும் இருக்கவேண்டும். எனக்குப் பின்பு நன்கொடையாளரால் மேலே சொன்ன மூவருக்குப் பதில் நால்வர் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். உறுப்பினர் ஒரு தமிழ் வருஷத்திற்கு உத்தியோகம் வகிப்பர். ஒவ்வொரு புது வருஷமும் குறிப்பிடுதலும், தேர்தலும் நடக்கவேண்டும்.

(சி) இதர நிர்வாக சபைகளுக்கு அடுத்த அதிகாரங்கள் இந்த நிர்வாக சபைக்கும் உண்டு. ஒரு வருஷம் கிராமச்சேவை செய்து அதன்மூலம் வந்த அநுபவத்தை வைத்துத் தன் நடைமுறைக்கு வேண்டிய விதிகளை இச்சபை வகுத்துக்கொள்ள வேண்டியது. கிராம கிளைத்தொகுதிகள் இன்னும் திரண்டு ஒன்று சேரவேண்டும். இத்தொகுதிகள் சுமார் 12 டஜனுவது சேரும்வரை அவைகளின் சார்பாக நிர்வாக சபையிலிருக்க வேண்டிய உறுப்பினரை நானே நியமிக்கவேண்டியது. அதன் பின் கிளைச்சபைகளால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இங்கே கிராமத்தொகுதி என்று குறிப்பிட்டது நமது கௌமார குருகுலக்கல்வி நிலையத்தின் நோக்கங்களுக்காக ஒன்று சேர்ந்து பாடுபடுபவர் பதினுறுக்குக் குறையாதபேர் கூடிய ஒரு கூட்டமாகும். ஒரு கிராமத்திலோ பட்டணத்திலோ ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகள் இருக்கலாம்.

(டி) இந்தக் கௌமார குருகுலக்கல்வி நிலையத்தின் காரியதரிசியும் என் மாப்பிள்ளையுமான மா. இராமலிங்கம்பிள்ளையவர்களும், சமரசஞான சபைப் புத்தகசாலையாளர் ஆர். இராமகிருஷ்ண பிள்ளையவர்களும், வக்கீல் எஸ். இரகுநாதய்யரவர்களும், பிண்டிலே காலேஜ் வைஸ் பிரின்ஸிபால் ரெவரண்டு

என். ஜி. பொன்னையா அவர்களும், நேஷனல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் எஸ். வைத்தினாதையரவர்களும், "ஷம்ஸுல் ஹுதா" பத்திரிகாசிரியர் ஜனாப், எஸ். எம். முகம்மது யூசுப் பாவலரவர்களும், எனது மனைவி காவேரி யம்மாளும், நானும் ஆகிய இவர்கள் இப்போதைக்கு நிர்வாகசபை யுறுப்பினராக இருக்கவேண்டும்; எஸ். இரகுனாதையரவர்கள் பொக்கிஷதாராக இருப்பார். நிலையம் விருத்தியாக ஆக இதர உறுப்பினர் சேர்க்கப்படுவர்.

(இ) நிர்வாக சபையில் இரண்டு இடங்கள் என் குடும்பத்தினர்க்கும், அவர்கள் வார்சுகளுக்கும், அவர்களிடம் ஒப்படையேற்போர்களுக்கும் (அஸ்ஸைனீ) அவர்களால் குறிப்பிடப்பட்டவர்களுக்கும் ஒதுக்கிவைக்க வேண்டும்.

(யப்) ஷை நிலையத்தின் வருமானம் மேற்குறித்த நோக்கங்களுக்காக மட்டுமே செலவாகவேண்டும். இந்நிலையக்காரியங்களுக்காக ஏற்பட்ட செலவுகளுக்காக வேனும் ஊழியத்துக்காக வேனும் உண்மையாய் நன்னம்பிக்கையுடன் கொடுபடுந் தொகைகளொழிய, இந்நிலைய உறுப்பினர்க்கோ, வேறு தனித்தவருக்கோ, ஸ்தாபனத்துக்கோ இந்நிலையத்துப் பொருளிலிருந்து நேராக வேனும் மறைமுகமாக வேனும் ஒருசிறிதும் கொடுக்கக்கூடாது.

4 இந்நிலையக் காரியாதிகளுக்காக ஒவ்வொரு வருஷமும், தமிழ் வருஷப்பிறப்பன்று துவங்கும். வருஷந்தோறும் முதன் மாசத்தில் முந்திய வருஷ அறிக்கைகளும் கணக்குகளும் முறைப்படத் தணிக்கையாகி அச்சடித்துப் பிரசுரமாகவேண்டும்; அடுத்தஆண்டுக்கு வேலைத்திட்டமும், வரவு செலவுத் திட்டமும் வகுத்துக்கொள்ளவும் வேண்டும். ஆங்கிரஸ வருஷப் பிறப்பன்று (1932 எப்ரல்) முதன்முதல் வேலை துவங்கும்.

5 இந்த தருமத்துக்காக நான் எற்படுத்தியிருக்கும் ரொக்க முதலைச் சாதாரணச் செலவுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. நூறு ரூபாயும் அதற்கு மேற்பட்டும் வரும் நன் கொடைத் தொகைகளைவைத்து, நன்கொடை செய்தவர்கள் விருப்பத்திற்கிணங்கவும் நிர்வாகசபையின் யுக்தானுசாரமாகவும், முதலைப் பெருக்கும் பொருட்டு ஒரு சேமத்தொகை சேர்க்கவேண்டும். இத்தொகையை நூறு ரூபாய் விலைக்கு மேற்பட்டு நிலம் வாங்குதல், கட்டடங்கட்டுதல் முதலிய சாஸ்வதச் சொத்துச் சேகரிப்புக்காகப் பயன்படுத்தவேண்டியது.

6 மேலே 2 (இ) 3 (இ) பாராக்களில் கண்ட நிபந்தனைகளையேனும், இந்நிலையத்தின் வேலைகளையேனும், நோக்கத்தையேனும், குறைக்கவோ, குறுக்கவோ, முக்கியாம்சத்தில் மாற்ற

வோ இல்லாமல், இந்த சாசனத்தின் ஷரத்துக்களோடு, ஏறுதல் மாறுதல் செய்தும், விட்டதை ஒட்டியும், விதிகளும் திட்டங்களும் அவ்வப்போது நிர்வாக சபையார் வகுத்து அச்சுப்போட்டுப் பிரசுரம் செய்துகொள்ளவேண்டியது.

இந்தப்பக்கத்திலும் முன் ஐந்து பக்கங்களிலுமாக டைப் அடித்திருக்கும் இந்த சாஸனமும் இதோடு சேர்ந்திருக்கும் ஏ. பி. சி. ஷெடியூல்களும் 29—1—32 அன்று சமரசஞான சபையில் வைத்துக் கீழ் ஒப்பமிட்டிருக்கும் சாக்ஷிகளுக்கு முன்பு கையெழுத்துச் செய்திருக்கிறேன்.

சு. வி. கனகசபைப் பிள்ளை,
27—1—32.

சாக்ஷிகள்:—

மா. இராமலிங்கம் பிள்ளை
காவேரியம்மாள்
பார்வதியம்மாள்
எஸ். கே. பார்த்தசாரதி ஐயங்கார்
ஆர். ராமகிருஷ்ண பிள்ளை.
வி. எஸ். விஸ்வநாதய்யர்
முகம்மது யூசுப் பாவலர்
ஜி. ஆர். சுப்பிரமணிய ஐயர்
எஸ். இரகுநாதய்யர்

ஏ. பட்டி—ஸ்தாவர சொத்துக்கள்.

1. இராமையா முதலியார் வகையருவால் ரூ. 500—0—0க்கும்
இராமு முதலியார் ஷை ரூ. 166–10—8க்கும்
வயித்திலிங்க முதலியார் ஷை ரூ. 166–10—8க்கும்
சுப்பையா முதலியார் ஷை ரூ. 166–10—8க்கும்

ஆக ரூ. 1000—0—0-க்கு

முறையே, மன்னார்குடி சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் 457, 460, 459, 458ஆம் நெ. பத்திரங்கள் மூலமாய் 1929ம் வருஷம் மார்ச்சு மீ 17உ என்பேருக்குக் கிரயமாயிருக்கிற, மன்னார்குடி டவுன் 2-வது வார்டு, 43ம் நெ. பிளாக் சர்வே 2760ம் நம்பரில் 1, 2 சப்டிவிஷன், $64\frac{3}{4}$ செண்டு விஸ்தீர்ணமுள்ள மனை.

2. உபாத்தியாயர் விடுதி அடிமட்ட அளவு $35' \times 16\frac{1}{4}'$ மதிப்பு ... ... ரூ. 1200—0—0
3. கௌமார குருகுலப் 'பொருட்காட்சி சாலை— அடிமட்ட அளவு $26' \times 12\frac{3}{4}'$ ... ... ரூ. 920—0—0
4. கூரைக்குச்சு ... ... ரூ. 150—0—0
5. கிணறு ... ... ரூ. 150—0—0
6. மா, மாதுளை, ஆரஞ்சு, தென்னைகளும் வேலியும் ரூ. 50—0—0
7. பிரதானக் கட்டிடத்தின் அஸ்திபாரக் கற்கட்டு ரூ. 30—0—0

ஆக மொத்தம் ரூ 3500—0—0

பி. பட்டி—ஜங்கம சோத்துக்கள்.

1. புத்தக வண்டியும், நன்னெறிப் படங்கள் எழுதியது உள்பட ரூ. 200—0—0
2(ஏ) தமிழ்க் கையச்சுப்பொறி (டைப் மிஷின்) 1க்கு 350—0—0
(பி) ஆங்கிலக் கையச்சுப்பொறி (அண்டர்வுட்) 1க்கு 250—0—0
(சி) ஜெஸ்டெட்னெர் டியூப்ளிகேடர் (பிரதியெடுக்குங் கருவி) 1க்கு ரூ. 400—0—0
(டி) ஷெ மிஷின்களுக்காக அரை வைத்த மேஜை 1க்கு ரூ. 30—0—0
(இ) டைப் அடிக்கிறவர் உட்காரும் ஸ்டூல் 1க்கு ரூ. 5—0—0

ஆக ரூ. 1235—0—0

3. புத்தக அலமாரி 2க்கு, ஒன்று ரூபா 30 வீதம் ரூ, 60—0—0
4. சாய்ப்பு மேஜை (தேவதாரு) 10க்கு, ஒன்று ரூபா 2 வீதம் 20—0—0
5.(ஏ) நிழற்படக்காக்ஷி விளக்கு (மாஜிக்லாண்டர்ன்)—அதற்கு அஸிட்டெலீயன்வாயு உண்டாக்குங் கருவிகள் 2, பெட்டி முதலியவையுடன் ரூ. 250—0—0
(பி) நிழற்படக்காக்ஷி விளக்கு—மண்ணெண்ணெய் விளக்குடனும் பெட்டியுடனும் ரூ. 50—0—0
(சி) நிழற்படக் கண்ணாடிகள்:—

(ஏ) **சமயம்:—**

இராமாயணம்	71
இந்துசமய தெய்வங்கள்	37
புத்தசமய தெய்வங்கள்	13
பொதுவும், தத்துவசாஸ்திர வகையும்	39
ஆக	160

(பி) **பௌதிகப்** (சயன்சு)

உடல்நூல்	24
சுகவழி	12
பூகோளம்	33
பொது	24
ஆக	93

(சி) சிற்பம்:—

இந்து	38
பௌத்தம்	24
இஸ்லாம்	16
எகிப்தம்	33
ஆக	111

(டி) கல்வி:—

அரிவரியும் வார்த்தைகளும்	39

(இ) பொது:—

பெரியோர்கள்	47
உடற்கூறும் யோகசக்கரங்களும்	27
பலவகை	21
ஆக	95

ஆக மொத்தம் 160 + 93 + 111 + 39 + 95 = 498ல் சுமார் 130 வர்ணப்படங்கள்.—இவைகளின் மதிப்பு ரூ. 625—0—0

(டி) ஷை படங்கள் வைக்கும் தோற்
பெட்டி 2க்கு ரூ. 6—0—0
தேக்கம் பெட்டி பெரிது 1க்கு ரூ. 4—0—0
தேக்கம்பெட்டி சின்னது 6க்கு ரூ.12—0—0

ஆக ரூ. 22—0—0

6(ஏ) கிராமபோன் (லியோபோன்) ரூ. 45—0—0
(பி) ஷை தட்டுகள் 25க்கு ரூ. 60—0—0

7. அட்டைகளும் படங்களும்:—

ஆரோக்கியமும் நன்னெறியும்	17
பிராணிவர்க்கம்	10
கிராமவாழ்க்கை	4
தாவரவர்க்கம்	8
மனித உடற்கூறு	8
வான நூல்	7
பூகோள நூல்	8

இயற்கைத் தோற்றங்கள்	12
அரிவரி	2

ஆக 76க்கு ரூ. 150—0—0

8. **மாதிரிகள்:—**

இடமானம்	16
பலகைக் கவராசம்	2
பௌதிகம்	4
திசையறி கருவி	1
வர்ணத்தட்டு	7
சூடளவி	1
பூதக்கண்ணாடி	1

ஆக 32க்கு ரூ. 30—0—0

9. **புத்தகங்கள்:—**

சமயம்	122	சித்திரம்	3
பெரியோர் வரலாறு	118	பொது அறிவு	14
நாவலும் கதையும்	80	பலவகை	25
பாடப் புத்தகங்கள்	34	மருந்து	2
பூகோள நூல்	30	ஆரோக்கியம்	3
சரித்திரம்	19	சங்கீதம்	2
இயற்கைப்பாடம்	10	பல்வகைக் கருவி நூல்	7
நன்னெறி (எதிக்ஸ்)	37	கைத்தொழில்	5
அரசியலமைப்பு	8	அரசியல் நூல்	18
இலக்கிய இலக்கணம்	35	சீர்திருத்தம்	8
உழவு	5	ஆராய்ச்சி	11
கணக்கு	4		

ஆக 600க்கு ரூ. 280—0—0

10. **அடிக்கடி பார்க்க உதவும் குறிப்பான் புத்தகங்கள்:—**

(1) புக் ஆப் நாலெட்ஜ் (அறிவுக்களஞ்சியம்) 10 பாகம் ரூ. 170—0—0

(2) அவுட்லைன் ஆவ் நாலெட்ஜ் (அறிவெல்லை) 20 பாகம் ரூ. 100—0—0

(3) இந்திய சிற்பம்—3 பாகம் ரூ. 60—0—0

(4) நவீனத்தச்சு—8 பாகம் ரூ. 60—0—0

(5) நவீனக் கட்டடங்கள்—6 பாகம் ரூ. 50—0—0

(6) சிற்பம் (ஐ. வி. எஸ். புத்தகசாலை)—9 பாகம்ரூ. 30—0—0

(7) டேனிஷ்போக் ஹைஸ்கூல், கிராமப் புனருத்தாரணம், கிராமக்கல்வி, சுகமும் நீண்ட ஆயுளும், கோழி வகையரு வளர்ப்பு தேனீ வளர்ப்பு 30—0—0

ஆக ரூ. 500—0—0

11. வயது முதிர்ந்தோர் பாடப்புத்தகங்கள் 1ம் நெ. 1900 பிரதிகள் வயது முதிர்ந்தோர் எழுதிப்பழக உறுப்பெழுத்துப் புத்தகங்கள்—2200 பிரதிகள் ரூ. 173—0—0

ஆக மொத்தம் ரூ. 3500—0—0

சி. பட்டி—ரோக்க நன்கொடை.

கருப்புக்கிளார் வி. கோபாலசாமித் தேவர் வகையராவால் என்பேருக்கு ரூ. 15000க்கு 1930ம்ஹு பிப்ரவரிமீ 3உ எழுதி, ஆதிச்சபுரம் சப்ரிஜிஸ்டர் ஆபீசில் 1930ம்ஹு-த்து 89ம் நெ. பத்திரமாக ரிஜிஸ்தராயிருக்கிற அடமானக்கடன் பத்திர அசலில் ஒரு பாகம் ரூ. 3000—0—0

சு. வி. கனகசபைப் பிள்ளை,
27—1—32.

சாக்ஷிகள்:—

மா. இராமலிங்கம் பிள்ளை
காவேரியம்மாள்
பார்வதியம்மாள்
எஸ். கே. பார்த்தசாரதி ஐயங்கார்
வி. எஸ். விஸ்வநாதையர்
முகம்மது யூசுப் பாவலர்
ஜி. ஆர். சுப்பிரமணிய ஐயர்
எஸ். இரகுநாதையர்
ஆர். இராமகிருஷ்ண பிள்ளை.

கௌமார குருகுலப் பொருட்காக்ஷி சாலே.



எதிர்-பக்க பார்வை.



உன்பக்க உயரப் பார்வை.



தளவரிசைமட்டம்.

கௌமார குருகுல உபாத்தியாயர் வீடு.



எதிர் பக்க பார்வை



உள்பக்க உயரப் பார்வை.



தளவரிசை மட்டம்.

கௌமார குருகுல சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டி.



எதிர் பார்வை.



பக்க பார்வை.

சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டியில் புஸ்தக விநியோகம்.



மேலவாசல். பிரசோற்பத்தி ஐப்பசிமூ

இறைவன் துணை.

கௌமார குருகுலம்—மன்னார்குடி,

கிராமக் கல்வித் தொண்டு.

பிரசோற்பத்தி-ஷூ ஐப்பசிமீ (18-10-31) முதல் மாசிமீ (12-4-32) முடிய நடந்த தொண்டின் விபரம்.

குறிப்பு:— கிராமங்களில் இக் கௌமார குருகுலத்திற்கு கிளைச் சங்கங்களை அமைப்பதற்கான சட்டதிட்டங்களை 8-வது பக்கத்தில் பார்க்கவும்.

ஆரம்பம்:— அண்ணாமலை சர்வ கலாசாலை தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையின் கீழ் **கிராமக் கல்வி மகாநாடு** ஒன்று ஐப்பசி-மீ 2௳ **மன்னார்குடி கௌமார குருகுலத்தில்** கூடியது. அச்சமயம் 30-க்கு மேற்பட்ட கிராமங்களிலிருந்து 200-க்கு அதிகமான கிராமவாசிகள் கூடினர். அப்போது கௌமார குருகுலத்தின் கிராமக் கல்வித் தொண்டு பல பெரியோர்களின் உபந்நியாசங்களுடனும் ஆசீர்வாதத்துடனும் ஆரம்பம் செய்யப்பட்டது.

முதல் முதல் மேலவாசல் கிராமத்திற்கு, இதற்கெனப் புதிதாகச் செய்யப்பட்ட அழகான இரட்டைமாட்டு வண்டியில் புத்தகங்கள், படங்கள், கிராமபோன் முதலிய கல்விக்கான சாதனங்களுடன் கௌமார குருகுலத் தலைவர் திரு. இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளையும் சென்னை புத்தகசாலை சபைக் காரியதரிசி திரு. எஸ். ஆர். இரங்கநாத ஐயர் எம். ஏ., எல். டி., அவர்கள் முதலிய சிலர் மன்னார்குடி கௌமார குருகுலத்தினின்றும் சென்று உபந்நியாசங்கள் செய்து புத்தகங்களைக் கிராமத்தில் வைத்து பலரும் படித்துத் திரும்பக் கொடுக்கும்படி கொடுத்துவந்தனர்.

2 **காரியதரிசி:**— இக் கௌமார குருகுலக் காரியதரிசி திருவாளர் மா. இராமலிங்கம் பிள்ளை திருவனந்தபுரம் இலாக்கா மார்த்தாண்டம் என்ற கிராமத்தில் கிராம முன்னேற்ற காரியங்கள் நடப்பதைப்போய் பார்த்துப் படித்தவர். அவர் விலாசம்:— மன்னார்குடி அம்மாக்குளத்திற்கு அருகில் மோரியாசிரமம். சஞ்சீவித்தெரு.

3 **தொண்டின்வகை:**— இத்தொண்டு இப்போது 2 வகையில் நடத்தப்பட்டுவருகிறது. (1) கிராமக்கிளை சபைகள் மூலம் இலவசமாக எல்லாரும் படித்து திருப்பிக்கொடுக்கும்படி புத்தகங்களைக்கொடுத்தல் (2) கிராமபோன், நிழற்படக் காக்ஷிமூலம் பொதுஜனங்கள் யாவரும் கேட்டுப்பார்த்து சந்தோஷப்படும்படி உபந்நியாசங்கள் செய்தல்.

மன்னார்குடிப் பட்டணத்தைச்சுற்றி 12 மயில் தூரத்தில் உள்ள கிராமங்களிலேயே இத்தொண்டு நடத்துவதாக ஏற்பாடு. ஆயினும் அதற்கு அப்புறம் உள்ள இரண்டொரு கிராமங்களில் இச்சேவை செய்துள்ளோம்.

ஆரம்பத்தில் கிராமக் கல்வித் தொண்டு வண்டி சகல சாமான்களுடனும் போய் கிராமபோன் சங்கீதம் நடந்து, நிழற்படங்காட்டப்பட்டு, புத்தகங்கள் கொடுக்கப்படுகிறது. பிறகு மோட்டார்காரில் சில தடவை புத்தகங்கள் கொண்டுபோய் கொடுக்கப்படுகின்றன. கிராமத்தார் அநேகமாய் எல்லா நடைகளுக்கும் வண்டிபோவதற்கு தங்கள் மாட்டை அனுப்பியுள்ளார்கள்.

4 **சுற்றுப்பிரயாண புத்தகசாலை:**— இது நமது தொண்டின் எல்லைக்குள் உள்ள மொத்தம் 242 கிராமங்களில், 52 கிராமங்களுக்குச் சென்று திரும்பியுள்ளது. இந்த 6 மாதங்களுக்குள் முடிவில் கண்ட பட்டிகைப்படி 64 கிராமக் கிளைச் சபைகளை ஏற்படுத்தி, 134 தடவை அவ்விடங்களுக்குச்சென்று 1673 புத்தகங்கள் வழங்கிவந்துள்ளது. இப்புத்தகங்களைப் படித்தவர்களுள் பெரும்பாலும் கள்ளர், அகம்படியராவர்; சிலர் நாயுடு முதலியோர்; அநேகர் பிராமணர்கள்.

5 **புத்தகங்கள்:**— சுலபமாய் படிக்கக்கூடிய பெரிய எழுத்தில் அச்சிட்ட சிறிய புத்தகங்களே அதிகம். நாவல்களையே படிக்க அதிகமாய் விரும்புகிறார்கள். சரித்திரக் கதைகளும் பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும் கதைகளைப்போல் சுலபமாய் படிக்க ஆசைப்படுவார்களானதாலும் இவைகளைப்படிப்பது அதிக பிரயோஜனமானதாலும், இப்புத்தகங்கள் நாவல்களைவிட ஒன்றரைமடங்கு உள்ளன. சமயமத சம்பந்தமான புத்தகங்கள் தாராளமாக இருக்கிறது. சுகாதாரம் பொது அறிவு சம்பந்தமான புத்தகங்கள் பல உள்ளன. எந்த எந்த இடங்களில் புத்தகங்கள் அதிகம் வழங்கப்பட்டுவருகின்றனவோ அங்கே எல்லாம் சீட்டாட்டம் குறைவுபட்டுள்ளது என அறிகிறோம்.

ஐப்பசி மாதத்தில் ஆரம்பித்தபோது 280 புத்தகங்களே கையில் இருந்தன. இவை போதாமையால் ஜனவரி மாதத்தில் 600 எண்ணிக்கை வரையிலும், இப்போது 1274 வரையிலும் சேகரிக்கப்பட்டுள்ளன. புத்தகங்களை இனமாகக்கொடுத்தவர்கள் எல்லாருக்கும் எங்கள் வந்தனம். சென்னை புத்தகசாலை சபையார் 85 புதிய புத்தகங்கள் கொடுத்ததும், பூவனூர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் 100-க்கு மேற்பட்ட புத்தகங்கள் கொடுத்ததும் மறக்கப்பாலதல்ல. நாம் கொடுக்கும் புத்தகங்கள் கிராமத்தில் 3, 4, வாரம் இருந்தபின்பே திரும்பி வாங்கிக்கொள்ளப்படுகின்றன.

6 **உபந்நியாசங்கள்:**— கிராமத்தில் மாலை 6-30 மணிக்குமேல் ஜனங்கள் வயல்களிலிருந்து திரும்பிவந்த சமயத்தில், கிராமபோன் சங்கீதம் பாடல்கள் பாடப்படும். அப்போது சிறியவர்கள், பெரியவர்கள், ஆண்கள் பெண்கள்வந்து சுற்றி உட்கார்ந்து கேட்பார்கள். இவ்விதம் சுமார் அரை மணி முக்கால் மணி ஆனபின் நிழற்படம் காட்டப்படும். நமது இந்து சமய முறையில் பிள்ளையார் படம் முதலில் காட்டி கடவுள் வாழ்த்து கூறப்படும். பிறகு இராமாயணக்கதைப் படங்களை 10, 12 காட்டி அவைகளில் இருக்கும் நல்லொழுக்க முறைகள் விளக்கப்படும். பிறகு 10, 12 படங்களை நமது உடல்கூறைப்பற்றியும் சுகாதாரத்தைப்பற்றியும் காட்டி ஆரோக்கியவாழ்வின் அவசியம் வற்புறுத்தப்படும். பூகோளம், பெரியோர்கள் முதலிய பின் காட்டப்படும். சில சமயங்களில் பொது அறிவைப்பற்றிய சொற்பொழிவும் செய்து சுமார் 9, 10 மணிக்கு முடிவுபெறும். இவ்விதம் உபந்நியாசங்கள் 28 நிகழ்ந்தன. ஜனாப் பாவலர் சி. மீ. முகம்மது யூசுப்சாகிபு அவர்களும், வடுவூர் கிராமாந்தர வைத்திய சாலை டாக்டர் திரு. கெ. கல்யாணராம ஐயர் அவர்களும் மற்றவர்களும் இதற்கு உதவி செய்துள்ளனர். அவர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனம்.

7 **தருமஸ்தாபனம்:**— இக்கல்வி நிலயம் நிலைபெற்று பொதுஜனங்களுக்கு உரிமையாகும்படி இதை அமைத்த திரு. இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை இதற்காக 66 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமி அதில் உள்ள கட்டடங்கள் முதலிய ரூ 3500 பொருமானமான அசையாப்பொருளையும், புத்தகங்கள் நிழற்படவிளக்கு படக்கண்ணுடிகள் கிராமபோன் டயிப் அடிக்கும் யந்திரங்கள் முதலியவை ரூ 3500 பொருமானமான அசையும் பொருள்களையும் ரூ 3000 ரொக்கத்தையும் ஆக ரூ 10000த்தை இக்கல்வி தருமத்திற்கென எழுதி ரிஜிஸ்டர் செய்து அதை விசாரிக்க ஒரு கமிட்டியும் ஏற்பாடு செய்துள்ளார். இந்த தஸ்தாவேஜின் நகலை 13-ம் பக்கத்தில் பார்க்கவும்.

8 **தொண்டு விபரப்பட்டிகை:**— கிராமக்கிளைகளின் பெயர்களும் அங்கு நடைபெற்ற தொண்டின் விபரமும் அடியிற்கண்ட பட்டியில் காண்க.

மன்னார்குடியைச் சுற்றி நேரே 12 மயில் தூரத்திலுள்ள கிராமவாசிகள் அனைவரும் உற்சாகம்பூண்டு இக் **கௌமார தருநலத்தின்** கல்வி நலத்தை அடையுமாறு இறைவன் அருள்செய்வாராக!

மன்னார்குடி
19—4—1932

மா. இராமலிங்கம் பிள்ளை,
காரியதரிசி.

கௌமாரா குருகுலக் கிராமக் கல்வித்தொண்டின் விபரப்பட்டிகை:—

நெ.	கிராமப் பெயரும் கிளைகளும்.	தாலூக்கா	தூரம் மைல்	ஜாதி	போன தடவை	புத்தகம் கொடுத்தது	நிழற் படக் காக்ஷி	ஜனக் கூட்டம்
1	மூவர்கோட்டை	ம	13	கள்ளர்	6	57		
2	வடுவூர் அக்ரகாரம் வடக்கு வீதி	ம	10	பிராம	1	6		
3	,, மேலத்தெரு I	ம	10	,,	4	71		
4	,, மேலத்தெரு II	ம	10	,,	5	47		
5	,, தெற்குத்தெரு I	ம	10	,,	3	27		
6	,, தெற்குத்தெரு II	ம	10	,,	3	18		
7	வடுவூர் தென்பாதி I	ம	11	கள்ளர்	5	70	1	} 200
8	,, II	ம	11	,,	3	37		
9	புதுக்கோட்டை	ம	9	,,	1	20	1	100
10	வடுவூர் வடபாதி வன்னியர் தெரு	ம	11	,,	4	52		
11	,, மேல்பாதி	ம	11	,,	4	56	1	} 50
12	,, வடபாதி	ம	11	,,	4	49		
13	,, மேலக்குடிக்காடு	ம	12	,,	2	25		
14	எடங்காங்கோட்டை மேலையூர்	ம	9	,,	5	110	1	50
15	,, கீழையூர்	ம	7	,,	3	60	1	60
16	பருத்திக்கோட்டை	ம	8	,,	3	43		
17	காரக்கோட்டை	ம	4	,,	1	6	1	40
18	செருமங்கலம்	ம	3	,,	2	12	1	100
19	மேலவாசல்	ம	3	அகம்	3	48	2	100-100
20	வெட்டிக்காடு	ம	35	கலப்பு	1	24	2	350
21	தேவங்குடி	ம	5	நாயடு	3	65		100-100
22	கண்டமங்கலம்	ம	6	கள்ளர்	2	38	1	300
23	நெம்மேலி	ம	4	வன்னி	3	39		
24	தென்பரை	ம	9	கலப்பு	1	1	1	75
25	வடுவூர் வடபாதி பள்ளிக்கூடம்	ம	11	கலப்பு	2	20		
26	பூவனூர்	ம	8	கலட்பு	1	29	1	100
27	,, அக்கிரகாரம்	ம	8	பிராம	1	18	1	80
28	வடுவூர் ஆடிச்சேரி	ம	9	கள்ளர்	1	15		
29	பொதக்குடி	ம	8	முஸ்லி	2	48	1	300
30	ஒரத்தூர்	ம	9	அகம்.	1	20	1	50
31	வையகளத்தூர்	ம	12	பிராம	1	17	1	200
32	நீடாமங்கலம்	ம	9	கலப்பு	1	30	1	400
33	முல்லவாசல் வடக்குத்தெரு	ம	12	கள்ளர்	1	16		
34	,, தெற்குத்தெரு	ம	12	,,	1	17	1	} 100
35	,, அக்கிரகாரம்	ம	12	பிராம	1	8		

36	பெரம்பூர்		ம	13	பிராம	1	17	1	100
37	ரிஷியூர்		ம	15	கலப்பு	1	15	1	150
38	ஆலங்குடி		பா	14	கலப்பு	1	14	1	80
39	பண்ணிமங்கலம்		ம	12	கள்ளர்	1	18		} 200
40	எருமைப்படுகை		பா	12	,,	1	14	1	
41	கோரையார் தலைப்பு		ம	11	கலப்பு	1	19	1	50
42	அருந்தவபுரம்		பா	14	கள்ளர்	1	17		
43	மூர்த்தியம்பாள்புரம்	I	த	14	கலப்பு	1	15	1	} 200
44	,,	II	த	14	,,	1	13		
45	கம்பயநத்தம்	I	பா	15	கள்ளர்	1	17	1	} 100
46	,,	II	பா	15	,,	1	10		
47	செய்வாசல் தென்பாதி		த	11	,,	1	10		
48	,,		த	11	,,	1	6		
49	அன்னவாசல்		ம	9	,,	1	10		
50	மகாதேவபட்டணம்		ம	6	கலப்பு	1	12		
51	அத்திக்கடை		ம	10	முஸ்	1	20	1	200
52	அபிவிர்த்தீஸ்வரம்		ந	14	,,	1	15		
53	நல்லூர்		ம	10	அகம்	1	15	1	} 100
54	வடச்குவாட்டார்		ம	10	,,	1	18		
55	ஈசனக்குடி		ம	11	,,	1	22	1	150
56	தளிக்கோட்டை		ம	11	,,	1	15		
57	முக்குளம்		ம	10	கள்ளர்	1	15		
58	ஆலங்கோட்டை		ம	4	அகம்	1	15	1	60
59	திருப்பாலக்குடி		ம	5	,,	1	20	1	200
60	சமயங் குடிக்காடு		ப	13	கள்ளர்	1	12		
61	ஒவாலிக்குடி		ம	11	அகம்,	1	12	1	350
62	கருவாக்குறிச்சி		ம	10	கள்ளர்	1	20		
63	மண்ணுக்குமுண்டான்		ம	15	அகம்	1	20	1	} 100
64	பெருவிடமருதூர்		ம	15	,,	1	18		
	மொத்தம்...					134	1673	35	

ம. மன்னார்குடி தாலூகா.

ப. பட்டுக்கோட்டை தாலூகா.

ந. நன்னிலம் தாலூகா.

பா. பாபநாசம் தாலூகா.

த. தஞ்சாவூர் தாலூகா.

கௌமார குருகுல சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டி



உள்பார்வை.

PLAN AT SEAT LEVEL



உட்காருகிற மட்டம்

கௌமார குருகுல சுற்றுப்பிரயாண புத்தகசாலை வண்டி.



எதிர்பார்வை.

இறைவன் துணை.

கௌமார குருகுலம், மன்னார்குடி.

கிராமக் கல்வி
முதியோர் வித்தியாசாலை.

ஆங்கீரஸ-ஸு சித்திரைமீ 9உ முதல் 21உ வரை.

21—4—1932உ முதல் 3—5—1932 வரை.

வித்தியாசாலைத் திறப்பு.

ஆங்கீரஸ ஆண்டு சித்திரை மாதம் 9ம் தேதி நடுப்பகலில், ஒவ்வொரு மதத்தினரும் தம் தம் பிரார்த்தனைகளை ஓதி முடிவில் யாவரும் கூடி துதி செய்து எளிய முறையில் கடவுளின் அனுக்கிரகத்தைவேண்டி உயர்திரு இராவ்பகதூர் கெ. வி. சேஷய்யங்கார், எம். எ., பி. எல்., அவர்களால் கிராமக் கல்வி முதியோர் வித்தியாசாலை துவக்கப்பட்டது.

மாணவர்கள்.

வித்தியாசாலை சித்திரைமீ 9உ முதல் 21உ வரை நடந்தது. 45 மாணவர்கள் கல்வி கற்றனர். அவர்களில் 6 பேர் தவிற மற்றவர்கள் எல்லாம் குருகுலத்திலே சாப்பிட்டுக்கூடி வாழ்ந்தனர்; 8 பேர் ஸ்திரீகள். குருகுலத்தில் தங்கி வாழ்ந்தவர்கள் ரூ 8-ம், வெளியிலிருந்து வந்து படித்தவர்கள் ரூ 4ம் கொடுத்தார்கள். 2 பேர் கிறிஸ்தவர்கள், 3 பேர் முஸ்லீம்கள், பாக்கி 40 பேர் இந்துக்கள். இந்துக்களில் 7 பிராமணர், 7 வேளாளர், 5 நாயுடு, 8 கள்ளர், 8 அகம்படியர், 1 செட்டியார், 2 தேசிகர், 2 முதலியார் இருந்தனர். சிதம்பரத்திலிருந்து வந்த மாணவர் ஒருவர் போக பாக்கிப்பேர் எல்லாம் தஞ்சை ஜில்லா வாசிகளே.—தாலுக்காவாரி பிரித்தால், அறந்தாங்கி 1, பட்டுக்கோட்டை 6, கும்பகோணம் 1, மன்னார்குடி 36, பேர்கள் ஆகும். 11 பேர்கள் தவிற பாக்கி மாணவர்கள் ஒழுங்காக எல்லா நாளும் வித்தியாசாலைக்கு வந்து படித்தனர். ஒருவர் பென்ஷன் உத்தியோகஸ்தர்; அவர்களுக்கு வயது 14 முதல் 53 வரை இருந்தது. அவர்களின் சராசரி வயது 24.

இவர்களை அன்றி வெளி ஜனங்கள் 6 பேர்களும் உபந்நியாசங்களுக்குக் கூடியமட்டும் ஒழுங்காய் தினம் வந்தனர். வகுப்புகளில் மாணவர்கள் கூசாமல் கேள்விகேட்டு கல்விகற்கும்படி, மற்றவர்களை இஷ்டப்படி வரவிடவில்லை.

புதக்குடி முஸ்லீம் சங்கம், தஞ்சை சத்திரம் இலாக்கா, தேவங்குடி கிராம சபை, நீடாமங்கலம் கூட்டுறவு சங்கம் முதலிய கிராம சங்கங்கள் பணம்கொடுத்து 10 மாணவர்களைப் படிக்க அனுப்பினர்.

பாடங்களும், படக்காக்ஷிகளும்.

இங்கு கற்பிக்கப்பட்ட கல்வி ஒருவனைத்தன் வாழ்க்கை தக்க வாழ்க்கையாக ஆகும்படி செய்வதற்கான வகையில் அமைக்கப்பட்டது. கிராமவாசிகளுக்கு தற்காலத்தில் தங்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பலதுறை அறிவும், விரிவாகச்சொல்லாதபடி தங்களுக்கே உற்சாகம் உண்டாகி தாங்களே கற்க முயற்சி செய்யும் வண்ணம் தொகையாகவும் வகையாகவும் எடுத்து விளக்கப்பட்டது. பாடங்கள் தமிழிலேயே போதிக்கப்பட்டன என சொல்ல அவசியமில்லை. பின்வரும் அட்டவணையிலிருந்து எந்த எந்த விஷயங்களைப்பற்றி எத்தனை பாடங்களும் காக்ஷிகளும் நடந்தனவென அறியலாம்.

	பாடங்கள்	காக்ஷிகள்
1. சமயமும் ஒழுக்கமும், பல சமய மத தத்துவங்களும் நீதிகளும் உள்பட	14	1
2. சுகாதாரம், உணவு, தேக ஆரோக்கியம், உடற்.பயிற்சி, கைமருந்துகள், முதலிய	10	2
3. கிராமப் பொருள்நிலை, விவசாயம் குடும்பச்சிக்கனம், குடும்ப வாழ்க்கை முறை, குடும்பக் கணக்கு, நில அளவு உள்பட	8	1
4. தமிழ் மொழி, புஸ்தகசாலைகள் தமிழ்நூல் பாகங்கள் சேர்ந்து	8	—
5. தேச சரித்திரம், பூகோளம், பண்டைத்தமிழர்கள் சரிதமுள்பட	8	—
6. தேச பரிபாலனம், விசேஷமாகக் கூட்டுறவு, பஞ்சாயத்து, தாலுக்காபோர்டு சேர்ந்து	10	1
7. பூதபௌதிக அறிவு, மழை வான சாஸ்திரம் உள்பட.	9	2
மொத்தம்	67	7

மாலை உபந்நியாசங்களுக்கும், இரவு நிழற்படக்காக்ஷிகளுக்கும் சர்வ ஜனங்களும் வந்தார்கள். சித்திரைமீ 16௳ ஆண்டு விழாவன்று 600 பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தனர்.

ஆண்டுவிழா.

இம்முதியோர் கல்வி இயக்கத்தின் எழாம் ஆண்டுவிழா சித்திரைமீ 16௳ தமிழ்ப்பேராசிரியர் பிரம்மஸ்ரீ மகாமகோ

கிராமக்கல்வி முதியோர் வித்தியாசாலை.



காலை தினசரிப் பிரார்த்தனை.

காலை தினசரி உடற்பயிற்சி.

கிராமக்கல்வி முதியோர் வித்தியாசாலை.



தினசரி மாலை திறந்தவெளியில் உபந்நியாசம்.

விபசாயப்பொருட்காக்ஷி மோட்டார்.

பாத்தியாய உ. வே. சாமினாத ஐய்யர் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் டென்மார்க்கு தேசத்திலிருந்து கூடலூர் வாலிபக் கிறிஸ்தவ சங்க பொதுக்காரியதரிசி ரெவரண்ட் சி. ரென்ட்ராவ், பி. எ., பி. டி., முன் சென்னை சர்க்கார் மந்திரியாக இருந்த எஸ். முத்தையா முதலியார் பி. எ., பி. எல்., கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் தி. வி. உமாமகேசுவரன் பிள்ளை, பி.எ., பி எல்., பென்ஷன் ஜில்லா ரிஜிஸ்டிரார், டி.எஸ். சபாபதிப் பிள்ளை, பி. எ., நீ. கந்தசாமிப் பிள்ளை, எம். ஆர்., எ. எஸ்., என்ற திருவாளர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ஆசிரியர்கள்.

இவர்களன்றி நல்லறிவாளர்கள் திருவாளர்கள் எ. ரெங்கசாமி ஐயர், பி. எ, பி. எல்., (மதுரை) எம் எஸ். சபேச ஐயர் எம். எ., எல். டி., (கிறிஸ்தவர் காலேஜ், சென்னை.) எம். பாலசுப்பிரமணிய முதலியார் பி. எ, பில்., (சென்னை) இந்திய சேவையாளர் சபையைச்சார்ந்த வி. வெங்கட சுப்பையர், பி. எ., கெ ஜி. சிவசுவாமி ஐயர் பி. எ., இருவர், இவ்வூர் பின்ட்லே காலேஜ் தலைமை ஆசிரியர் ரெவரெண்ட் ஆர். ஸ்மெயில்ஸ், உப தலைமை ஆசிரியர் ரெவரெண்ட் என். ஜி. பொன்னையா இருவரும், தேசிய உயர்தரப்பாடசாலை தலைமை உபாத்தியாயர் எஸ் வைத்தினாத ஐயர், பி. எ., எல். டி., முதலியோர் கல்வி போதித்தனர். ஆசிரியர் அனைவரும் இக் கல்விச்சாலைக்கு தங்கள் சிரமம்பாராது கல்விகற்பித்து உதவிபுரிந்ததன்றி பெரும்பாலும் தங்கள் கைப்பணம் செலவுசெய்து இங்கு வந்து போயினர். கூடியவரை கண்ணுக்குக்காட்டி மனதில்படும்படியான வகையிலேயே கல்வி போதிக்கப்பட்டது. நமது பஞ்சாங்கப்படி நக்ஷத்திரங்கள் வானத்தில் காட்டப்பட்டன. பௌதிகரசாயன சாஸ்திரப்பரிக்ஷைகள் பின்ட்லேகாலேஜில் செய்து காட்டப்பட்டன. ஜில்லா ஸ்கௌட்மாஸ்டர் திரு. ஜெ. ஐ. முத்தையா மாணவர்களுக்கு உடற்பயிற்சி போதித்தனர்.

விசேஷ காரியங்கள்.

அநேகமாய் ஒவ்வொரு நாளிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து தெளிவாக மறைவின்றி பல விஷயங்களைப் பற்றியும் சம்பாஷணை செய்ததில் ஆர்வமும் அறிவும் அடைந்ததுமன்றி நெருங்கிய நண்பும் பெற்றனர்.

சொல்லிக்கொடுக்கப்பட்ட விஷயங்களை வீட்டில் சென்று தொடர்ந்து விடாமல் படிக்குமாறு, உபந்நியாசங்களின் சுருக்கம் அச்சிடப்பட்டு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவ் வித்தியாசாலைக்குவர இயலாதவர்களுக்குப் பயன்படுமாறு இவ்வுபந்நியாசங்களைச் சேர்த்து ஒருபுத்தகமாய் வெளியிடப்படும்.

மற்றது மாணவர்கள் வைஷ்ணவசைவ ஜைன ஆலயங்கள், கிறிஸ்தவக்கோவில், முஸ்லீம் மசூதிகளுக்குச் சென்று அங்கு கடவுளை வணங்கும் முறையைக் கண்டறிந்தனர். அன்றியும் முனிசிபல் ஆயுர்வேத ஆஸ்பத்திரி, சர்க்கார் மேல் நாட்டு முறை ஆஸ்பத்திரி, கால்நடை ஆஸ்பத்திரியையும் தரிசித்து அங்கு நடைபெறும் சிகிச்சை முறைகளையும் அறிந்தனர். தாலுக்காக்கச்சேரி, நெசவுசாலையில் நடைபெறும் காரியங்களையும் கண்டார்கள். மேற்சொல்லிய ஸ்தலங்களுக்கு எல்லாம் மாணவர்கள் சென்றபோது அங்கு தலைமை வகித்த அதிகாரிகளும் மதத்தலைவர்களும் மாணவர்களை விருப்புடன் ஏற்று யாவற்றையும் தெளிவாகக் காட்டி விளக்கினர். விவசாயப் பொருட்காக்ஷி மோட்டார் வண்டி சித்திரைமீ 17, 18உகளில் வந்து மாணவர்களுக்கும், ஜனங்களுக்கும் விவசாய விஷயங்களைப் போதித்தது.

முறை ஏற்படுத்திக்கொண்டு மாணவர்கள் சிலர் காலாகாலத்தில் வகுப்புக்கு சாப்பாட்டுக்கு வருவதையும் மற்ற சௌகரியங்களையும் கவனித்தார்கள்.

தினசரி காரியமுறை.

மாணவர்கள் காலை 4-45 மணிக்கு எழுந்து பல்துலக்கி 5-45 மணிக்கு கடவுளை வணங்கிப் பின்னர் 15 நிமிஷம் உடற்பயிற்சி செய்தனர். பிறகு ஸ்நானம் செய்து 7-30க்கு காலைப் பலகாரமோ கஞ்சியோ சாப்பிட்டனர். 8 மணிமுதல் 11-30 வரை மூன்று பாடங்கள் நடைபெற்றன. மத்தியானம் 12 மணிக்கு சாப்பாடு கழிந்து கொஞ்சம் களைதீர்ந்து மாலை 2-30க்கு மாணவர்களும் ஆசிரியர்களும்கூடி அன்றைய பாடத்தைப்பற்றி சம்பாஷித்தனர். 3-45க்கு கொஞ்சம் நீர்மோர் குடித்து தாக சாந்தி செய்து கொண்டார்கள். 4 மணிமுதல் 6-30 வரை இரண்டு உபந்நியாசங்கள் நடைபெறும். இரண்டாவது உபந்நியாசத்திற்கு சர்வ ஜனங்களும் வருவார்கள். இராத்திரி சாப்பாடு இரவு 7-45க்கு நடந்தது. பின் நிழற்படக்காக்ஷி வானத்தில் நக்ஷத்திரம் பார்ப்பது முதலிய நிகழ்ந்தன. சில தினங்களில் இவை சாப்பாட்டுக்கு முன்னும் நடந்தன. இரண்டொரு நாட்கள்தவிற மற்ற தினங்களில் எல்லாம் 9-30 மணிக்கு சகலமும் முடிந்து நித்திரை செய்யப்போனார்கள்.

முடிவுரை.

அனுபந்தம் 1ல் மாணவர்களின் விபரமும், அனுபந்தம் 2ல் வரவு செலவு விபரமும் கண்டுகொள்க.

நன்கொடை கொடுத்த யாவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைக் கூறுகிறோம். இவ்வித்தியாசாலை இங்கு இதுவரை நடைபெறுதது ஒரு புதியதெனினும் இது நன்கு நடைபெறும்படி அருள்செய்த இறைவனைப் போற்றுவோமாக!

சஞ்சிவித்தெரு, மன்னார்குடி, 28–6–32. | சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர்.

அநுபந்தம் 1.

முதியோர் கிராமக்கல்வி வித்தியாசாலை மாணவர்கள்.

ஆங்கிரஸ-௵ சித்திரை-மீ

நெ.	பெயர்.	வயது	ஆணா பெண்ணா	ஜாதி	தொழில்	கிராமம்	தாலுக்கா
1	எஸ். நடராஜ முதலியார்	23	ஆண்	கள்ளர்	மிராசு.	மூவர்கோ	மன்னார்.
2	கெ. ஸந்தானகிருஷ்ணன்	20	,,	அகம்.	கண்ட்.	மன்னார்.	,,
3	வி. பாலசுப்பிரமணியம்	27	,,	,,	உபாத்.	மேலபுத்.	,,
4	எம். சிவசங்கரன்	21	,,	கள்ளர்	மிராசு.	வடு. தெ.	,,
5	வி. பழனிவேலு	22	,,	அகம்.	,,	ஈசனக்.	,,
6	ஆர். பிச்சையா பிள்ளை	20	,,	வெள்.	கண்ட்.	வடுவூர்	,,
7	கெ. ஆர். கெ. ஜெகதாம்பாள்	18	பெண்	பிரா.	—	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
8	கெ. கோபால முதலியார்	20	ஆண்	முதலி.	மிராசு.	பூவனார்	மன்னார்.
9	வி. கோவிந்தராஜுலு நாயுடு	34	,,	நாயுடு	உபாத்.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
10	எ. கிருஷ்ணமூர்த்தி	19	,,	கிறிஸ்.	மாணாக்கர்	நீடாமங்.	மன்னார்.
11	எஸ். மாணிக்கம்	14	,,	அகம்.	,,	,,	,,
12	ஜி. தீனதயாளு நாயுடு	20	,,	நாயுடு	மிராசு.	தேவங்.	,,
13	ஆர். பார்த்தசாரதி நாயுடு	23	,,	,,	,,	,,	,,
14	வி. கோமதி	24	பெண்	பிரா.	—	வெட்டிக்.	பட்டுக்.
15	கெ. வரலக்ஷ்மி	19	,,	,,	—	,,	,,
16	கெ. அழகிரிசாமி பிள்ளை	26	ஆண்	கள்ளர்	கண். எ.	,,	,,
17	எஸ். நாராயணசாமி நாயுடு	27	,,	நாயுடு	,,	,,	,,
18	எ. லக்ஷ்மண முதலியார்	19	,,	முதலி.	,,	,,	,,
19	வி. அப்பாஸாமி பிள்ளை	28	,,	வெள்.	,,	மரபாதி	மன்னார்.
20	டி. சுப்ப ராவ்	20	,,	நாயுடு	—	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
21	கெ. நடராஜ கண்டியர்	22	,,	கள்ளர்	மிராசு.	வடபாதி	மன்னார்.
22	எ. ஷண்முகசுந்திரத் தேவர்	19	,,	அகம்.	,,	பெருவிட.	,,
23	ஆர். என். கே. காளிமுத்துத் தேவர்	21	,,	,,	—	கூத்தா.	அரந்தாங்.
24	க. காவேரி அம்மாள்	40	பெண்	வெள்.	—	மன்னார்.	மன்னார்.
25	ரா. பார்வதி அம்மாள்	15	,,	,,	—	,,	,,
26	எஸ். ஸோமாஸ்கந்த தேசிகர்	30	ஆண்	தேசிகர்	மிராசு.	பருத்திக்.	மன்னார்.
27	ஞானாம்பாள் ஸ்டிபன்ஸ்	47	பெண்	கிறிஸ்.	பெ. உ.	நீடாமங்.	,,
28	என். ராமச்சந்திர ராவ்	20	ஆண்	பிரா.	—	நட்டுவன்.	,,
29	பத்மாவினி அம்மாள்	50	பெண்	,,	—	எத்தக்குடி	,,
30	எஸ். ராகவாச்சாரி	53	ஆண்	,,	ரி. ஸ்டா.	,,	,,
31	எம். ஆர். தேவதாஸ்	14	,,	,,	—	,,	,,
32	என். எ. குஞ்சிதபாதம்	17	,,	வெள்.	மாணாக்கர்	சிதம்பரம்	சிதம்பரம்

ஒ	பெயர்.	வயது	ஆணு பெண்ணு	ஜாதி	தொழில்	கிராமம்	தாலூக்கா
33	எம். எஸ். பிச்சையா தேசிகர்	35	ஆண்	தேசிகர்	பிரஸ் மா.	திருவி.	கும்பகோ.
34	ஆர். சீனிவாசன்	18	,,	அகம்.	மிராசு.	மண்ணு.	மன்னர்.
35	எஸ். வத்ஸலோசனு	14	பெண்	கிறிஸ்.	—	நீடாமங்.	,,
36	என். தங்கவேலு வன்னியர்	22	ஆண்	கள்ளர்	மிராசு.	வடு. மே.	,,
37	கெ. சிவஞ்ஞான சாளுவர்	24	,,	,,	,,	இ மேல.	,,
38	எஸ். ராமய்யா கண்டியர்	22	,,	,,	,,	வெட்டிக்.	பட்டுக்.
39	எம். சீனிவாச வன்னியர்	22	,,	,,	,,	வடு. மே.	மன்னர்.
40	ஆர். திருநாவுக்கரசுபிள்ளை	19	,,	அகம்.	மாணுக்கர்	மன்னர்.	,,
41	ஜி. இரத்தினசாமி பிள்ளை	19	,,	வெள்.	—	,,	,,
42	ஒ. எஸ். மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை	35	,,	,,	மிராசு	ஒரத்தூர்.	,,
43	எ.எ. மஹமது அப்துல்லா	20	,,	மஹம.	,,	புதக்குடி	,,
44	எஸ். என். மஹமது ஷெரீப்	35	,,	,,	,,	,,	,,
45	எ அப்துல் அஜீஸ்	15	,,	,,	,,	மன்னர்.	மன்னர்.

அநுபந்தம் 2.

வரவு செலவு.

வரவு	ரூ	செலவு	ரூ
1. ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுரை ஆதீன நன்கொடை 5 தவசுப் பிள்ளைகள் மதிப்பு	150	1. சாப்பாட்டுச்சிலவு	323
2. சாமான் பல பெரியோர்களின் நன்கொடை, கும்பகோணம் மகா-ா-ஸ்ரீ கே. ஆர். ரகுநாதராயர் கொடுத்த 15 கல அரிசியுள்பட மதிப்பு	208	2. திருவாவடுதுரை தவசு பிள்ளைகள்	170
3. ரொக்கரூபாய் நன்கொடை.	120	3. பிராமண தவசுபிள்ளை மற்ற கூலிகள்	35
4. மாணவர்களின் கட்டணம்	292	4. சில்லரைச்சிலவு புஷ்பம் தாம்பூலம்	22
5. போட்டோபட விற்பனை	16	5. சாப்பாட்டுக்கொட்டகை	20
		6. ரயில் சிலவு	89
		7. போட்டோபடம் பிடிக்க	67
		8. நோட்டீசுகள் அச்சடித்தது	60
மொத்தம் ரூ	786	மொத்தம் ரூ	786

குறிப்பு:— உபந்நியாசங்கள் அச்சடித்த செலவுகள் இதில் சேரவில்லை. உபந்நியாசங்கள் புத்தகங்களாக வெளியிடப்படுமானதால் அவை புத்தகக்கணக்கில் வரும்.

இறைவன் துணை.

மன்னார்குடி

கௌமார குருகுல வாழ்த்து.

ஆசிரியர்:— திரு. கி. வா. ஜகந்நாதையர்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.)

1. இக்காலத் திந்தியநன் னாட்டினிலே கல்விநிலை
இழிந்த தென்றே
மிக்கார்கள் பலர்கூறி விளக்குகின்றார் பிறநாட்டார்
வீறு பெற்றுத்
தக்காங்கு கலைவளர்ச்சி பெறுகின்றார் எனக்கேட்டும்
தளர்கின் றேமால்
எக்காலம் கலைவளர்ச்சி யுறுமிங்கே அக்காலம்
எழுச்சி பெற்றேம்.

2. கல்விவளர்க் கின்றதொரு பெருந்தொண்டே காதலித்துக்
கவினுஞ் சிற்றூர்
பல்விதத்தும் முன்னேற்றம் உறவேண்டி நல்லொழுக்கப்
பண்பு நிற்ப
நல்விதத்தில் முயற்சிசெய்மன் னார்குடியிற் கௌமார
நாமங் கொண்ட
வெல்விதத்துக் குருகுலத்தார் விளைக்கின்றார் பேரறத்தை
வீறு கொண்டே.

3. நல்லறிஞர் பலரையொருங் குறச்செய்து மற்றவர்தம்
நாவன் மைசேர்
பல்லறிவார் பொருளுரைகள் சொலச்செய்து மாணக்கர்
பலரும் இன்பம்
ஒல்லும்வகை பெறவருளும் கௌமார குருகுலத்தின்
ஊற்றங் கண்டால்
புல்லறிவு நீங்குமினி நல்லறிவு வளருமெனப்
பூரிப் பேமால்.

4. எந்நாளும் கலைவிருத்தி மிகச்செய்து பேரறங்கள்
இயற்றி யார்க்கும்
இன்னாத நீக்குவித்தே இனியனவே உய்த்தறிவே
எங்கும் வாய்ப்ப
நன்னாவ லவர்உறவு கொண்டுபுகழ் வளர்த்தரிய
நன்மை கூட்டி
மன்னார்வக் கௌமார குருகுலமாம் கோயிலென்றும்
வாழி வாழி.

ஆசிரியர்:— பாவலர் சி. மீ. முகம்மது யூசுப் ஸாஹிப்,
மன்னார்குடி.

(அறுசீராசிரியம்)

பாரினிலே பலபேர்கள் பயனில்லாச் செலவுசெய்யப்
பார்த்தோம் இந்த
ஊரினிலே கௌமார குருகுலமென்றோர் சபையை
உண்டுபண்ணிப்
பேரினிலே உயர்ந்தோர்கள் தாழ்ந்தோர்கள் ஆண்பெண்ணும்
பேதம் நீக்கிச்
சீரினிலே பலகலையும் புகட்டுகின்றார் அச்சபையைச்
சேர்வீர் அன்றே.

(ஆனந்தக் களிப்பு)

கௌமார குருகுலத் தன்மை—நேரில்
கண்டே யுரைக்கின்றேம் கதிபெறும் நன்மை (கௌமார)

(சரணங்கள்)

1. ஒற்றுமை யாவர்க்கும் உண்டு—இங்கே
ஓதவந் தால்வருந் தானாகத் தொண்டு
கற்றுணர்ந் தோர்களைக் கண்டு—சேர்ந்து
கலைகள் உணரலாம் கருத்துடன் கொண்டு (கௌமார)

2. ஜாதி மதபேதம் நீக்கி—யாருஞ்
சமமெனுங் கொள்கையால் வேற்றுமைப் போக்கி
நீதி யெனுங்கொடி தூக்கி—நிதம்
நின்று வணங்கலாம் நிமலனை நோக்கி (கௌமார)

3. வேதக் கருத்துக்கள் சேர்த்து—மேலும்
விஞ்ஞான சாஸ்திரம் அனைத்தையும் பார்த்து
மாதக் கணக்குள்ளே தீர்த்து—ஊர்க்கு
மாணவர் செல்ல வகைசெய்தார் சேர்த்து (கௌமார)

4. கைம்மாறு என்னசெய் வோமே—நம்மின்
கௌமார குருகுலம் செய்தற்கு யாமே
பொய்ம்மாறு போக்கிடு வோமே—நல்ல
புண்ணியஞ் செய்து புகழ்விளைப் போமே (கௌமார)

5. கௌமார குருகுலம் ஓங்க—அங்கு
கல்வி பயின்றிடும் மாணவர் ஓங்க
தவமான வணக்கங்கள் ஓங்க—யார்க்கும்
தானான இறையவன் தண்ணருள் ஓங்க (கௌமார)

இறைவன் துணை.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

1-வது பகுதி.

முதற்பாகம்:— சமயமும் ஒழுக்கமும்.

பொருளடக்கம்.

குறிப்பு:— பாட எண்ணிக்கைகளை அடியில்கண்டபடி திருத்திக்கொள்ளவும்.

பாடங்கள்		பக்கங்கள்.
1	**சர்வ சமயப் பிரார்த்தனைகள்:**— பல பெரியார் வாக்கு.	6
2	**தினசரிப் பிரார்த்தனை:**— ,,	14
3	**சைவ சமயம்:**— திரு. எம். பாலசுப்பிரமணிய முதலியார் பி. எ., பி. எல்., "சித்தாந்தம்" பத்திராசிரியர், ஹைகோர்ட் வக்கீல், சென்னை.	8
4	**வைணவ சமயம்:**— திரு. எஸ். கே. பார்த்தசாரதி ஐயங்கார் பி எ., பி. எல்., டிஸ்டிரிக்ட் முன்ஸிப், மன்னார்குடி.	4
4(1)	**வைணவ சமயம்:**—திரு. கே. எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார் எம்.எ.,பி.எல்., ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர், மன்னார்குடி.	8
5	**கிறிஸ்து சமயம்:**— ரெவரன்ட், என். ஜி. பொன்னையா பி. எ., எல். டி., உதவித் தலைவர், பின்ட்லே காலேஜ், மன்னார்குடி.	4
6	**இஸ்லாத்தின் தத்துவம்:**— ஜனாப். பாவலர், சி. மீ. முகம்மது யூசுப் சாஹிப் "ஷம்ஸுல் ஹுதா" பத்திராசிரியர், மன்னார்குடி.	10
7	**சமூகத் தொண்டிற்கு ஆஸ்திக ஆதாரம்.**— திரு. இராவ்பகதூர் கே. வி. சேஷ ஐயங்கார் எம். எ., பி. எல்., ஹைகோர்ட் வக்கீல் "பாரத தர்மம்" பத்திராசிரியர், சென்னை.	5
8	**தற்காலத்திற்கு அவசியமான ஒழுக்கம்:**–திரு. சி. சுப்பிரமணிய பாரதியார் வாக்கினின்றும், திரு ஆர். திருநாவுக்கரசு பிள்ளையால் திரட்டப்பட்டது.	8

பாடங்கள் பக்கங்கள்.

9 **ஆன்ம வளர்ச்சி:—** திரு. இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை, உதவி இஞ்சினியர், தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி. 8

10 **ஸ்தூல சூக்ஷ்ம காரண தேகங்கள்:—** திரு. எ. ரெங்கசாமி அய்யர் பி. ஏ., பி. எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை. 7

11 **மதியும் விதியும்:—** ௸ 8

12 **இக்காலச் சமயக்கிளர்ச்சிகள்:—** திரு. கெ. வி. சேஷ ஐயங்கார் எம். ஏ., பி. எல்., ஹைகோர்ட் வக்கீல், சென்னை. 6

13 **சூரிய நமஸ்காரம்:—** திரு. இராவ்சாகிப் சு. வி. கனகசபைப் பிள்ளை, கௌமார குருகுலத் தலைவர், மன்னார்குடி. 11

14 **வாழ்க்கையின் ஒழுக்கம்:—** ரெவரன்ட் ஆர். ஸ்மெயில்ஸ் எம். ஏ., மிஸ்ஸஸ் ஸ்மெயில்ஸ் துரைசானி பி.எ. பின்டிலே கல்லூரி தலைவரும் ஆசிரியரும். மன்னார்குடி. 4

படங்கள்.

		பக்கம்.
ஆன்ம விளக்கம் —	ஆன்ம வளர்ச்சி	3
சமரச சன்மார்க்கம் —	இக்காலச் சமயக்கிளர்ச்சிகள்	1
சூரிய நமஸ்கார நிலைகள் —	சூரிய நமஸ்காரம்	8

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 1.

சர்வ சமயப் பிரார்த்தனைகள்

ஆசிரியர்:—பல பெரியார்.

ஹிந்து—ஸனாதனம்.

ஓம் ஸஹஸ்ர சிர்ஷாபுருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்
ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா அத்யதிஷ்டத்தசாங்குலம்
புருஷ ஏவேதம் ஸர்வம் யத்பூதம் யச்ச பவ்யம்
உதாம்ருதத்வஸ்யேசான: யதந்நேநாதிரோஹதி
ஏதாவாநஸ்ய மஹிமா அதோ ஜ்யாயாம்ச்ச புருஷ:
பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம் ருதம் திவி

ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபி ஸர்வபூதாந்தராத்மா
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷி சேதா கேவலோ நிர்குணச்ச
ஏகோவசி நிஷ்க்ரியாணும் பஹூனும் ஏகம் பீஜம் பஹுதாய: கரோதி
தமாத்மஸ்தம் யேஅனுபச்யந்தி தீரா: தேஷாம் ஸுகம் சாஸ்வதம் நேதரேஷாம்

ஓம் தச்சம்யோராவ்ருணிமஹே காதும்யக்ஞாய காதும் யக்ஞபதயே
தைவீ ஸ்வஸ்திரஸ்துந: ஸ்வஸ்திர்மானுஷேப்ய:
ஊர்த்வம் ஜிகாது பேஷஜம். சம்நோஅஸ்து த்விபதே
சம் சதுஷ்பதே

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாமதேவா:
பத்ரம் பச்யேமாக்ஷபிர்ய ஜத்ரா:
ஸ்திரை ரங்கைஸ் துஷ்டுவாம், ஸஸ் தனூபி:
வ்யசெம தேவஹிதம் யதாயு:

ஸ்வஸ்தி நஇந்தரோ வ்ருத்தஸ்ரவா:
ஸ்வஸ்திந: பூஷா விச்வவேதா: ஸ்வஸ்தி நஸ்
தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: ஸ்வஸ்தி நோ ப்ரஹஸ்பதிர்
ததாது

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

புத்தமதப் பிரார்த்தனை

நமோ தஸ்ஸ பகவதோ அரகதோ சம்மாசம்புத்தஸ்ஸ
நமோ தஸ்ஸ பகவதோ அரகதோ சம்மாசம்புத்தஸ்ஸ
நமோ தஸ்ஸ பகவதோ அரகதோ சம்மாசம்புத்தஸ்ஸ

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

துதியம்பி புத்தம் சரணம் கச்சாமி
துதியம்பி தம்மம் சரணம் கச்சாமி
துதியம்பி சங்கம் சரணம் கச்சாமி

ததியம்பி புத்தம் சரணம் கச்சாமி
ததியம்பி தம்மம் சரணம் கச்சாமி
ததியம்பி சங்கம் சரணம் கச்சாமி

பாணாதிபதே வீரமணி சிகாபதம் சமாதியாமி
ஆதின்னாதான வீரமணி சிகாபதம் சமாதியாமி
காமேசு மிச்சாசார வீரமணி சிகாபதம் சமாதியாமி
மூஸாவாத வீரமணி சிகாபதம் சமாதியாமி
ஸுரா மேராய மஜ்ஜா பம்மா தத்தான வீரமணி சிகா
பதம் சமாதியாமி

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

கிறிஸ்தவப் பிரார்த்தனை.

எல்லா இருதயங்களையும் எல்லா விருப்பங்களையும் எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ ஞானமுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூர்வும் உமது

பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணி அருளும்.—ஆமேன்.

இஸ்லாம் பிரார்த்தனை.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
அல் ஹம்து லில்லா ஹி ரப்பில் ஆலமீன்
அர்ரஹ்மா னிர்ரஹீம்
மாலிக்கி யௌமித் தீன்
இய்யாக்க நஅபுது வ இய்யாக்க நஸ்த்த ஈன்
இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்த்தகீம்
ஸிராத்தல்லதீன அன் அம்த அலைஹிம் கைரில்
மக்லூபி அலைஹிம்
வலல் லால்லீன். ஆமீன்.

ஹிந்து—திராவிடம்.

திருவே என்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணில்
கருமணியே மணி யாடுபாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதன் துறை உறையும் அமரர் ஏறே.

—தேவாரம்.

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவைதவிரயான் போய் இந்திர லோகமாளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

—திருமாலை

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதுஎன்று அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

—திருவாசகம்.

பெருகியபேரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை யென்கணவர் திருப்பேர் புகலென் கின்றாய்
அருகர்புத்தராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவனென்பேன்
பருகு சதாசிவமென்பேன் சத்தி சிவமென்பேன்
பரமமென்பேன் பிரம மென்பேன் பரப்பிரமமென்
துருவு சுத்தபிரமமென்பேன் துரிய நிறைவென்பேன்
சுத்தசிவ மென்பனிவை சித்துவிளையாட்டே
—திருஅருட்பா

யாவரும் சொல்லக்கூடிய பிரார்த்தனை.

அணுத்தொறுங் கரந்தே: நிறைந்தில குயிரே!
ஆருயிர் தோறுங் கரந்திலங் கொளியே!
அனைத்தையும் ஒன்று யணைக்கும் உள் அன்பே!
நின்னுடன் தானும் ஒன்றென உணரும்
அத்தன் மையினால், தானும், மற்றெவரும்
ஒன்றே யென்னு முண்மை உணர்கவே.
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஹிந்துமதப் பிரார்த்தனையின் பொருள்

விராட் புருஷன் ஆயிரம் தலைகளையுடையவர். ஆயிரம் கண்களை யுடையவர். ஆயிரம் பாதங்களையுடையவர். கோளரூபமான பூமியை உள்ளும்புறமும் வியாபித்தும் பத்துஅங்குல பரிமாணபாகத்தை அதிக்கிரமித்தும் அவர் உளர். எதுசென்று போனவோ, எதுவரப்போகிறதோ, எது இப்போதத்தியதோ (அந்த) சகலங்களும் (சகல—பிரபஞ்சங்களும்) விராட்புருஷனே. பின்னும் மோட்சத்திற்கு பிரபுவான (இந்தவிராட் புருஷன்) அன்ன—நிமித்தத்திற்காக ஸ்வகீய அவஸ்தையை அதிக்கிரமித்து காரியஜகத் அவஸ்தையைக் கிரஹிக்கிறார். பூத, பவிஷ்யவர்த்தமான ரூபஜகத்துக்கள் இந்த விராட்புருஷனுடைய மஹிமை. பரமாத்ம—புருஷன் விராட் புருஷனைக்காட்டிலும் அதீதன் சகல பூதங்களும் (முக்காலத்தின் பிரவாக ஜீவரூப சமூகங்களும்) இந்த விராட் புருஷனுடைய நாலிலொரு

பாகம் (சுவல்ப-பாகம்) அவருடைய மிச்சமான மூன்று (அதிக) பாகம் ஸ்வயம் பிரகாசஸ்வரூபத்தில் அழிவற்றதாய் இருக்கிறது.

அவர் ஒரே கடவுள் சர்வ பூதங்களிலும் மறைந்து நிற்பவர்; எங்கும் வியாபகர்; ஸமஸ்த ஜீவராசிகளின் அந்தராத்மா கர்மங்களின் அத்யக்ஷர்; சகல பூதங்களில் வஸிப்பவர்; ஹ்ருதயஸாக்ஷி; குணரஹிதர் பக்தியால், வச்யப்படுபவர்; பலவித கிரியை ஈச்வரார்ப்பண நிஷ்கிரியை இவைகளின்வித்து. எந்த திடஸ்தர்கள் அவரை ஆத்மஸ்தனக அறிகிறார்களோ அவர்களுக்கே நித்யானந்தம்; இதராளுக்கு அது இல்லை.

தேக சுகத்துக்கும் மன அமைதிக்கும் அந்த ஆனந்தத்தை நாங்கள்விரும்புகிறோம்; யக்ஞகாரியவழியையும் யக்ஞபதியின் மார்க்கத்தையும் நாங்கள் கோருகிறோம்; எங்களுக்கு தைவீக சாச்வதமங்களம் உண்டாவதாக. மனித வர்க்கங்களுக்கு மங்களம் பொழிவதாக; சுகம், மேலும் மேலும் பொங்குவதாக; எங்களுக்கும் இருகால்பட்சி ராசிக்கும் மங்களம்; நாற்கால் பிராணிவர்க்கத்திற்கும் மங்களம்.

ஓ தேவதைகளே, நன்மை—ஹிதங்களை எங்கள் காதுகளால் கேட்போமாக; ஓ யக்ஞரக்ஷகர்களே, நன்மை—வஸ்துக்களை எங்கள் கண்களால் பார்ப்போமாக; பலமான அவயவங்களமைந்து களிப்பையுண்டாக்கும்; எங்களது திவ்ய சரீரத்தைக் கொண்டு தேவர்களுக்கு ஹிதமாக ஜீவவாழ்க்கையை நடத்துவோமாக; தொன்றுதொட்டு மஹிமைபொருந்திய இந்திரர் நம்மை அனுக்ரஹிப்பாராக; எல்லாம் அறிந்த பூஷான் நம்மை உயர்த்துவாராக; சத்ருஹந்தாவாகிய தார்க்ஷயர் நம்மை ரக்ஷிப்பாராக; ப்ரஹஸ்பதி நமக்கு க்ஷேமமளிப்பாராக.

ஓம் சாந்தமேற்பட; சாந்தமுண்டாக; சாந்தத்தில் மூழ்க.

புத்தமத பிரார்த்தனையின் பொருள்.

பரிபூரண ஞானியும் பரிசுத்தருமான புத்தபகவானுக்கு நமஸ்காரம்

பரிபூரண ஞானியும் பரிசுத்தருமான புத்தபகவானுக்கு நமஸ்காரம்

பரிபூரண ஞானியும் பரிசுத்தருமான புத்தபகவானுக்கு நமஸ்காரம்

புத்தரிடம் சரண மடைகிறேன்
தருமத்திடம் சரண மடைகிறேன்
சங்கத்திடம் சரண மடைகிறேன்
இரண்டாம்முறை புத்தரிடம் சரண மடைகிறேன்
இரண்டாம்முறை தருமத்திடம் சரண மடைகிறேன்
இரண்டாம்முறை சங்கத்திடம் சரண மடைகிறேன்
மூன்றும்முறை புத்தரிடம் சரண மடைகிறேன்
மூன்றும்முறை தருமத்திடம் சரண மடைகிறேன்
மூன்றும்முறை சங்கத்திடம் சரண மடைகிறேன்
எவ்வுயிரையும் கொல்லுவதில்லை என உறுதிமொழி கூறுகிறேன்
ஒன்றையும் அபகரிக்கும் எண்ணத்துடன் தீண்டுகிறதில்லை என உறுதிமொழி கூறுகிறேன்
காமகரமான தீய செயல் ஒன்றும் செய்யவில்லை என உறுதிமொழி கூறுகிறேன்
பொய் புகலேன் என உறுதிமொழி கூறுகிறேன்
போதைவஸ்து ஒன்றையும் உபயோகிக்கமாட்டேன் என உறுதிமொழி கூறுகிறேன்

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

இஸ்லாம் பிரார்த்தனையின் பொருள்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனது திருநாமத்தால் (இதை ஆரம்பிக்கின்றோம்.)

புகழ் யாவும் இறைவனுக்கே; (அவன்) படைப்புக்கள் யாவையும் (படைத்து) ரக்ஷித்தருள்பவன். அளவிடற்கரிய அருளாளன், ஒப்பில்லாத அன்புடையோன், நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி (அவனேயாவன். ஆதலின்,) இறைவனே! யாங்கள் உன்னையே வணங்குகின்றோம்; மேலும் உன்னிடமே உதவி தேடுகின்றோம். நீ எங்களை நேரான வழியில் சிராக நடத்துவாயாக. (அந்த வழியானது) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்கள் சென்ற வழியே யாகும். (அன்றி) உன் கோபத்திற்கு உள்ளானவர்களோ நெறி தவறினவர்களோ சென்ற வழியல்ல.

ஆமீன்.

[பாரதி பிரஸ், மன்னார்குடி.]

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும்.

தினசரிப் பிரார்த்தனை.

பல பெரியார் வாக்கு.

தினசரிப் பிரார்த்தனைக்காக சில செய்யுட்கள் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், தாயுமானவர்பாடல், திருவருட்பா முதலிய நமது தமிழ் நாட்டுப் பெரியார்களின் வாக்குகளினின்றும் பொருக்கி எடுக்கப்பட்டுள்ளன.

இத்துடன் தினம் பகவத்கீதையினின்றும் சில சுலோகங்கள் தமிழில் எளிய நடையில் உள்ளதும் சேர்க்கப்பட்டிருக்கிறன.

இவைகள் அடியிற்கண்ட 6 தலைப்பில் வகுக்கப்பட்டுள்ளன:— (1) கடவுள் அறிவு, (2) பக்தி, (3) இயற்கை முக்குணம், (4) மனித சம்பத்து, (5) பூஜை, தபசு, தானம், (6) அடைக்கலம்.

பிரார்த்தனை செய்வது, மனம் வாக்கு காயம் மூன்றும் ஒற்றுமையாகி அடங்கி கடவுளிடத்து பதிந்து உருகி நிறைந்து நிற்பதேயாகும்.

காரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

இரண்டு கைகளையும் மார்பினிடம் குவித்து தோத்திரம் செய்யுங்காலத்து உள்ளம் மகிழ்ச்சி அடைகிறதும், இரண்டு கைகளையும் தலையின்மேல் குவித்து வாய்விட்டு ஓங்கித் துதி செய்யுங்கால் பக்தி வெளிமுகமாக மூர்த்தியிடம் பாய்வதும் அனுபவமாகும்.

தேன்படிக்கும் அமுதாம் உந்திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குஉயிராம்
தான்படிக்கும் அனுபவம்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.

குறிப்பு:—தேன்படிக்கும் தேன்படிந்த, நிறைந்த, படிப்பது. (1) நாக்கினாலும், (2) சதையினாலும், (3) உள்ளத்தினாலும், (4) உயிரி (ஆத்மாவி)னாலும், (5) உயிருக்கு உயிரி(கடவுளி)னாலும், (6) அனுபவத்தினாலும் என்றார்.

இதுவே உண்மைப் பிரார்த்தனையின் முறை.

திருப்பள்ளி எழுச்சி.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரு மறியார்
இதுவவன் றிருவுரு இவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (1)

(திருவாசகம்)

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடை யார்சுழி குழல்பிழிந் துதறித்
துகிலுரித் தேறினர் சூழ்புன லரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளிஉன் னடியார்க்கு
ஆட்படுத் தாய்பள்ளி யெழுந்தரு ளாயே. (2)

(நாலாயிரப் பிரபந்தம்)

பொழுது விடிந்தது என்னுள்ளம் என்கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கியது எங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாம்
சொல்லுதல் வேண்டும்என் வல்லசற் குருவே
முழுதுமா னென்என ஆகமவேத முறைக ளெலாம்
மொழிகின்ற முன்ன வனே
எழுதுதல் அரிய சீரருட் பெருஞ்சோதி
என் தந்தையே பள்ளி எழுந்தருள் வாயே. (3)

(திருஅருட்பா)

வாழ்த்து.

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. (1)

ஆழிபுடைசூ ழுலகம்யாவும் நலம் மேவ!
அறத்துறை புகுந்துயிர்கள் அன்புவெள்ளம் மூழ்க!
பாழில் அலைவேனுடைய பந்தனைகள் சிந்த
பரிந்தருள் சுரந்தமை நிரந்தரமும் வாழ்க! (2)

(நாலாயிரப்பிரபந்தம்)

முதல் நாள்

கடவுள் அறிவு.

—:o:—

திருப்பள்ளி எழுச்சி.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல் லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கி னிற்
றட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெது மேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற்கி சைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்கு வாம். (தாயுமானவர்)

எல்லா வித்தைகளுக்கும் இது அரசு. சூக்ஷ்மதத்துவங்களுள் உயர்ந்தது. இவ்வித்தை தூய்மை வாய்ந்தது. உத்தமமானது, பிரத்தியக்ஷ அனுபவத்தில் அறியத்தக்கது, அறநெறியைக் காட்டுவது, நடவடிக்கையில் கொண்டுவர சுலபமானது, அழியாப்பலனைக் கொடுக்கவல்லது. (1)

எனது கண்ணுக்குக்காணாத சொரூபத்தால் இவ்வுலக முழுதும் நிரம்பி இருக்கின்றது. எல்லாப் பிராணிகளுக்கும் நானே ஆதாரம், எனக்கு அவைகள் ஆதாரமல்ல. (2)

எவ்வாறு எல்லா விடங்களிலும் சஞ்சரிக்கும் காற்று ஆகாயத்தில் என்று மிருக்கிறதோ, அவ்வாறே பிராணிகளனைத்தும் என்னிடம் நிலை பெற்றிருக்கின்றன. இதை அறிவாய். (3)

கற்பத்தின் முடிவில் பிராணிகளெல்லாம் என்னிடம் லயமாகின்றன; அடுத்த கற்பத்தின் ஆரம்பத்தில் மறுபடியும் நான் அவைகளை உண்டாக்குகின்றேன். (4)

எனது மாயையின் பலத்தால் தம்தம் இயற்கையைப் பின் பற்றி நடக்கும் உயிர்களின் சமூகம் முழுமையும் நான் அடிக்கடி சிருஷ்டி செய்கிறேன். (5)

இக்கர்மங்கள் என்னைக் கட்டுப்படுத்த மாட்டா. ஏனெனில் அவைகளிடம் நான் நடுநிலைமை வகித்தும், சமானமாகவும் பற்றின் றியு மிருக்கின்றேன். (6)

இவ்வுலகத்தின் தந்தை நான்; தாயும் நான்; தாங்குபவன் நான்; பாட்டன் நான்; அறியத் தகுந்தவன் நான்; தூய ஓங்கா ரம் நான்; ருக் வேதம், யஜூர்வேதம், சாமவேதம் இம்மூன்றும் நானே. (7)

இவ்வுலகின் கதி நான்; இதன் போஷகன் நான்; இறைவன் நான்; சாக்ஷி நான்; இருப்பிடம் நான்; நாடும்பதம் நான்; நன்மை செய்பவன் நான்; ஆக்குவதற்கும் அழிப்பதற்கும் காரணம் நான்; இதன் நிலைநான்; களஞ்சியம் நான்; இதன் அழியாவித்தும் நானே.

சாவில்லாமை நான்; சாவும் நான்; இருப்பனவும் இல்லாத னவும் நானே. (9)

வேறொன்றையும் கருதாது என்னையே சிந்தித்து வழிபடுவோ ராகி, எக்காலமும் என்னிடத்தே வசிக்கும் யோகிகளின் யோக க்ஷேமத்தை நானே ஏற்றுக்கொள்ளுகின்றேன். (10)

(கீதை)

முனியனே நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே என்கள்வா
தனியேனு ருயிரே என்தலை மிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும்மாயஞ் செய்யேல் என்னையே.

(நாலாயிரப்பிரபந்தம்)

வாழ்த்து.

இரண்டாம் நாள்.

பக்தி.

திருப்பள்ளி எழுச்சி.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன் தன்கண்ணிணை
 நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
 மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர
வந்தெனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த இச்சை மாலமுதப்
 பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனையமேனித் தனிச்சுடரே!
 இரண்டு மிலித் தனிய னேற்கே.

(திருவாசகம்)

வீண் ஆசைகளை விரும்புவோர், உதவாக் கர்மங்களைப்புரிவோர், பயனில்லா ஞானத்தை நாடுவோர்—, ஆகிய மூடர்கள் மோகத்தில் அழுத்தும் ராக்ஷஸ—அசுர—இயற்கையை அடைகின்றனர். (1)

இதற்கு மாறாக மகாத்மாக்கள் தெய்வீக இயற்கையைச் சார்ந்து என்னைப் பிராணிகளின் ஆதி காரணமென்றும் நாசமற்றவனென்றும் உணர்ந்து சஞ்சலமின்றி ஒரே நிலையில் இருந்துகொண்டு என்னைப் பூஜிக்கின்றனர். (2)

அவர்கள் திடமுள்ள கொள்கையுடையவர்கள். ஓயாமல் விடா முயற்சியுடன் என்னைப் போற்றுகின்றனர். பக்தியுடன் என்னை வணங்குகின்றனர். தினந்தோறும் என்னைத் தியானித்து வழிபடுகின்றனர். (3)

தேவதைகளை வழிபடுவோர் தேவலோகத்தை அடைவார்; முன்னோர்களை வழிபடுவோர் பிதுர்லோகத்தைச் சேருவர்; பூதங்களையும், பிரேதங்களையும் பூஜிப்பவர் அவைகளின் உலகங்களை அடைவார்கள்; என்னை வழிபடுவோர் என்னையே சேருவார்கள். ()

இலை, பூ, கனி நீர்; இவற்றில் எதையேனும் பக்தியை முன்னிட்டுத் தளரா முயற்சியுடன் அளிப்பரேல், பக்தியால் அளிக்கப்பட்ட அப்பொருள்களை நான் ஏற்றுக்கொள்வேன். (5)

ஆதலால் நீ செய்வதையும், உண்பதையும், தானமளிப்பதையும், தவம் புரிவதையும், எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணம் செய்யக்கடவாய். (6)

இவ்வாறு செய்வதால் நல்ல அல்லது தீய பலனைப் பயக்கும். கர்மபந்தங்களிலிருந்து விடுபட்டு, பலனைத் துறத்தலால் சமத்துவ புத்தி பெற்று, ஜன்மம் மரணம் இவைகளிலிருந்து விடுதலையடைந்து என்னைச் சேருவாய். (7)

கொடிய தீ வழி செல்லுவோனும் என்னை ஓர் வழி நின்று பக்தி செய்வானாகில் அவன் சாதுவானென்று உணரவேண்டும். ஏனெனில் இப்பொழுது அவனது இச்சைகள் நல்வழி நிற்கின்றன.

அவன் சீக்கிரத்தில் தர்மாத்மாவாகிறான். இடைவிடாத சாந்தியைப் பெறுகிறான். எனது பக்தன் ஒருபொழுதும் நாசமடையான் என ஐயமற அறியக்கடவாய். (8)

தீய குலத்தில் பிறந்தோரும், மாதர்களும், வைசியர்களும், கடை வருணத்தார்களும், என்னிடம் சரண்புகுந்து பரம கதியை அடைவார்கள். (9)

என்னிடம் உன் மனதை நிலை நிறுத்து, எனது பக்தனாயிரு; என்னை வணங்கு; இவ்வாறு செய்வாயாகில் என்னைச் சரணமடைந்து உன் ஆத்மாவை என்னுடன் பிணைத்து என்னையே கூடுவாய். (10)

(கீதை)

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்படு துயராயின வெல்லாம்
நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதா யினுமாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணாவென்னும் நாமம்,

(பெரிய திருமொழி)

வாழ்த்து,

மூன்றும் நாள்

இயற்கை முக்குணம்.

——:o:——

திருப்பள்ளி எழுச்சி.

வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மொடு
அவர்தரும் கலவியேகருதி
ஓடினேன்ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

(நாலாயிரப்பிரபந்தம்.)

ஞானங்களில் உத்தமமான எந்த ஞானத்தை அனுபவித்து முனிவர்கள் உடல் நீங்கியதும் பரமபதத்தை அடைகின்றனரோ அதை உனக்கு மறுமுறை கூறுவேன். (1)

இந்த ஞானத்தைச் சார்ந்து, என் தன்மை பெற்றோர் உற்பத்தி காலத்தில் மறுபிறப்பு எடுப்பதில்லை. பிரளய காலத்தில் துன்பத்தை அனுபவிக்கவும் வேண்டியிராது (2)

சத்து. ரஜஸ், தமோகுணங்கள் பிருகிருதியினின்று தோன்றுவன. அவை உடல் தாங்கி நிற்கும். அழிவில்லா ஜீவனை தேகத்துள் இணைத்துக் கட்டுகின்றன. (3)

இவற்றுள் சத்துவகுணம் மாசற்றதானதால் ஒளியுள்ளதும் ஆரோக்கியத்தைக் கொடுப்பதுமாக விருக்கின்றது. ஆதலால் ஜீவனை இன்பத்தாலும் ஞானத்தாலும் பந்தப்படுத்துகின்றது. (4)

ரஜோகுணம் இச்சைவடிவானதால் ஆசைக்கும், பற்றுதலுக்கும் மூலமாகின்றது. ஜீவனை கர்ம பாசத்தால் கட்டுகின்றது. (5)

தமோகுணம் அறிவீனத்தாலுண்டாவது. அதுஉடல் தாங்கும் ஜீவனை மோகத்தில் வீழ்த்தி அவனைக் கவனமற்றவனாகவும், சோம்பேறியாகவும் செய்து நித்திரையின் பாசத்தால் அவனை பந்தப்படுத்துகின்றது. (6)

சத்துவகுணமோ ஆத்மாவை. சாந்தி, சுகம், இவைகளிடம் பற்றுள்ளதாகச் செய்கின்றது. ரஜோகுணம் கர்மத்திலும், தமோ குணம் ஞானத்தை மறைத்து மோகத்திலும், பற்றை உண்டுபண் ணுகின்றன. (7)

புலன்கள் வாயிலாக உடலில் ஒளியும், அறிவும் ஓங்கும் பொழுது சத்துவ குணத்தின் பெருக்கை உணரவேண்டும். (8)

ரஜோகுணம் விருத்தியடையும் சமயத்தில் லோபம், பிர விருத்தி, கர்மங்களின் துவக்கம், சாந்தமின்மை, இச்சை இவைகள் உதிக்கின்றன. (9)

தமோகுணம் பெருகும் காலத்தில் அறிவில்லாமை, மந்தம் கவனமில்லாமை, மயக்கம் முதலியவை உண்டாகின்றன. (10)

சாத்விக மனிதன் மேலே போகிறான். ராஜஸ புருஷன் நடுவே நிற்கிறான், கடையோனான தாமசகுண முடையுவன் அதோகதி யடைகிறான். (11)

தேகத்தின் சேர்க்கையால் உதிக்கும் இம்மூன்று குணங்களை யும் கடந்து உடல் படைத்தோன் பிறப்பு, இறப்பு மூப்பு, இவை களிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைகிறான். (12)

(கீதை.)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

(திருவாசகம்.)

வாழ்த்து.

நான்காம் நாள்

மனித சம்பத்து

—:0:—

திருப்பள்ளி எழுச்சி.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியை யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(திருவாசகம்.)

இவ்வுலகில் தெய்வீகமென்றும், அசுரத்தன்மை யுள்ளதென்றும் இருவித சிருஷ்டி விபரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (1)

பயமில்லாமை, உள்ளத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிறைபெற்றிருத்தல், தானம், இந்திரிய நிக்கிரகம், யக்ஞம், வேதாத்தியயனம், தவம், நேர்மை, அஹிம்சை, சத்தியம், ஆத்திரப்படாமை, தியாகம், சாந்தி, பிறர்பால் குறைகூறாதிருத்தல், உயிர்கள்பால் கருணை, சிற்றின்ப ஆசையில்லாமை, மேன்மை, மரியாதை சஞ்சலப்படாதிருத்தல், தேசு, பொறுமை, உறுதி, சுத்தம், துரோகம் செய்யாதிருத்தல், அபிமானமில்லாமை—இக்குணங்கள் தெய்வீக சம்பத்துடன் பிறந்தோனிடம் காணப்படுகின்றன. (2, 3, 4)

டம்பம், கர்வம், அபிமானம், கோபம், பாருஷ்யம், மூடத்தனம் இவை அசுர சம்பத்துடன் ஜன்ம மெடுப்பவனிடம் தோன்றுகின்றன. (5)

அசுரத்தன்மையுள்ளவர் செய்யக்கூடிய கார்யங்களையும், செய்யத் தகாதவைகளையும் அறியார். அவ்வாறே அவர்களுக்கு சுத்தம், ஆசாரம், சத்தியம் ஒன்றுமில்லை. (6)

இந்த உலகம் அசத்தியமானது, ஆதார மற்றது. கடவுள் இல்லாததென்று அவர் கூறுவர். காமமொன்றே மனிதன் உண்டாவ

தற்குக் காரணம் என்றும் சொல்லுவர். சிற்றின்ப அனுபவத்தைத் தவிர்த்து இதற்கு வேறு ஏது, என்ன இருக்கமுடியும் என்று எண்ணுவர். (7)

பிரளய காலம்வரை முடிவடையாத கவலைக் கடலில் மூழ்கி, மிகவும் சிற்றின்பப் பிரியர்களாய், 'வாழ்க்கையின் பயன்போகம்' என்று நிச்சயித்தவராய், நூற்றுக்கணக்கான ஆசைகளின் வலையில கப்பட்டு, காமத்தாலும், குரோதத்தாலும் ஆழ்த்தப்பட்டு விஷய போகத்திற்காக தீயவழிகளில் செல்வம் சேர்க்க அவர்கள் விரும்புகின்றனர். (8)

ஆத்மாவை நாசம்செய்து நரகத்தில் வீழ்த்துவதற்கு காமம், குரோதம், லோபமாகிய இம்மூன்று குணங்களும் மூவித வாயில்களாகின்றன. ஆதலால் இம்மூன்றையும் மனிதன் அறவே ஒழிக்க வேண்டும். (9)

இம்மூன்று நரக வாயில்களுக்கப்பால் தூரத்தில் இருக்கும் புருஷர்கள் தங்கள் ஆத்மாக்களின் நன்மையைத் தேடி, பரம பதத்தை அடைகின்றனர். (10)

(கீதை.)

வேதநூற் பிராயம்நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றதிற் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே

(திருமாலை.)

வாழ்த்து.

ஐந்தாம் நாள்

பூஜை, தபசு, தானம்,

——:o:——

திருப்பள்ளி எழுச்சி

மறந்திகழும் மனமொழித்து வஞ்சமாற்றி
ஐம்புலன்களடக்கியிடர்ப் பாரத்துன்பம்
துறந்து இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறந்திகழும் மனத்தவர் தங்கதியைப் பொன்னி
யணியரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்
நிறந்திகழும் மாயோனைக்கண்டு என்கண்கள்
நீர்மல்க வென்றுகொலோ நிற்கும்நாளே.

(பெருமாள் திருமொழி.)

எல்லோருடைய சிரத்தையும் தம்தம் இயற்கையை அனுசரித்தே இருக்கும். ஒவ்வொரு மனிதனிடத்தும் சிறிதளவேனும் சிரத்தை இருந்தே தீரும். ஒருவனுடைய சிரத்தை எவ்வித மிருக்கிறதோ அவன் அவ்விதமேயாகின்றான். (1)

சாத்துவிக ஜனங்கள் தேவர்களை வழிபடுவார்கள். ராஜஸ மனிதர் யக்ஷர்களையும், ராக்ஷஸர்களையும் பூஜிப்பார்கள். தாமஸ புருஷர்களோ பூதங்களையும், பிரேதங்களையும் தொழுவார்கள். (2)

டம்பமும், அகங்காரமும் நிறைந்த மனிதர் காமத்தாலும், ஆசையாலும் தூண்டப்பட்டு சாஸ்திர விதிகளைக் கவனியாது கோரமான தவம்புரிகின்றனர். அம்மூடர் தங்கள் உடலில் இருக்கும் ஐந்து மகா பூதங்களையும், உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் என்னையும் கிலேசப்படுத்துகின்றனர். இவர்கள் அசுரத்தன்மை வாய்ந்தவர்களென்று உணர்வாய். (3)

தேவர், பிராமணர், குரு, ஞானி இவர்களை வழிபடுதல், தூய்மை, நேர்மை. பிர்ம்மசர்யம், அஹிம்சை இவை சரீரத்தின் தவமென்று உபதேசிக்கப்படுகின்றன. (5)

பிறருக்குத் துன்பம் விளைவிக்காமை, உண்மை, அன்பு இன்மொழி, அறநூல்களை ஆராய்தல்—இவைகளை வாக்கின் தவமென்று கூறுவர். (5)

மன மலர்ச்சி, மகிழ்ச்சி, மௌனம், புலனடக்குதல், மனோபாவங்களின் பரிசுத்தத் தன்மை இவை மனத்தின் தவமென்று சொல்லப்படும். (6)

கொடுப்பது உசிதமென்று எண்ணி, பதிலுபகாரத்தை எதிர்பார்க்காமல், தேசம், காலம், தகுதி முதலியவற்றை ஆராய்ந்து கொடுக்கப்படும் தானம் சாத்வீக தானமாகும். (7)

பிரதி உபகாரத்தை விரும்பியோ, பலனை உத்தேசித்தோ, மனவருத்தத்துடன் கொடுக்கப்படும் தானம் ராஜஸ தானமாகும். ()

தேசம், காலம், பாத்திரன் ஆகிய ஒன்றையும் சிந்தியாது அவமரியாதை செய்து அருவருப்புடன் கொடுக்கப்படும் தானம் தாமஸமாகும். (9)

யக்ஞம் தானம், தவம், இதர காரியங்கள், எதுவும் சிரத்தையின்றி இயற்றப்படின் 'அஸத்' என்று கூறப்படும். அது இம்மையிலும் பயன்படாது. மறுமையிலும் உதவாது. (10)

(கீதை.)

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ
வேண்டுமயன்மாற் கரியோய்நீ வேண்டிஎன்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீயா தருள்செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும்பரிசொன் றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே.

(திருவாசகம்.)

வாழ்த்து.

ஆறும் நாள்.

அடைக்கலம்.

—:o:—

திருப்பள்ளி எழுச்சி.

எனக்கென்ச் செயல் வேறிலை ; யாவுமிங் கொருநின்
தனக் கெனத்தகும் ; உடல்பொருள் ஆவியும் தந்தேன் ;
மனத் தகத்துள அழுக்கெலாம் மாற்றி, எம்பிரான் ! நீ
நினைத்தது எப்படி அப்படி அருளுதல் நீதம்.

(தாயுமானவர்.)

எல்லாக் கர்மங்களும் தோஷமுள்ளவை, ஆதலால் அவைகளைத் துறப்பதே நலமென்று பல மேதாவிகள் உரைக்கின்றனர். யக்ஞம், தானம், தவம், இம்மூவகைக் கர்மங்களையும் விடாமல் செய்யவேண்டுமென்று வேறு பலர் சொல்லுகின்றனர். (1)

யக்ஞ, தான, தவ கர்மங்களைத் துறக்கலாகாது. அவைகளைச் செய்தே தீரவேண்டும். அறிஞரை யக்ஞம், தானம், தவம் இம்மூன்றும் தூயப்படுத்துவன. (2)

இக்கர்மங்களைப் பற்றின்றி, பலனை விரும்பாது புரிதல்வேண்டுமென்பது எனது முடிவான உத்தம சித்தாந்தம். (3)

கடமையான காரியங்களைத் துறத்தல் நியாயமல்ல. மதிமயக்கமுற்று அவைகளை விட்டுவிடின், அத்தியாகம் தாமஸமென்று கருதப்படவேண்டும். (4)

துக்கத்தைக் கொடுப்பது, உடலுக்குக் கஷ்டத்தை விளைவிப்பது, என்ற பயத்தால் செய்யாமல் விலகுவது ராஜஸ தியாகமாகும் இதனால் உண்மையான தியாகத்தின் பயன்கிட்டாது. (5)

கடமை என்று நினைத்து, அவசியமான கர்மங்களைப் பற்றின்றி, பலனைத் துறந்து, செய்வதே சாத்விக தியாகமென்று உணரவேண்டும். (6)

பலத்தில் ஆசையின்றி, விருப்பு வெறுப்பு ஒழித்து புருஷன் தன் கடமையென்று செய்யும் கர்மம் சாத்விகமாகும். (7)

போகத்தை விரும்பி, 'நான் செய்கிறேன்' என்ற அபிமானத்துடன் அதிக ஆயாசத்துடன் செய்யும் கார்யம் ராஜஸ கர்மமெனப்படும். (8)

கர்மத்தின் பரிணமத்தை ஆலோசிக்காமல் அதனாலுண்டாகும் தீங்கு, ஹிம்சை முதலியவற்றை ஆராய்ந்து தனது ஆற்றலையும் கவனியாது மதிமயக்கத்தால் மனிதன் கர்மம் செய்வானாயின் அக்கர்மம் தாமஸமென்று கூறப்படும். (9)

எல்லாவற்றிலும் பரம ரகஸ்யமான மற்றுமோர் வசனத்தையும் கேள். நீ எனக்கு மிகவும் அன்பன். ஆதலால் உனது நன்மையை நாடி உனக்குச் சொல்லுகின்றேன். (10)

மனத்தை என்பால் நாட்டு; என்னிடம் பக்தி செய்; என் பொருட்டு யக்ஞத்தை இயற்று; அப்பொழுது நீ என்னையே சேருவாய். இது எனது வாக்குறுதி எனக் கொள்வாய். நீ எனக்கினியன். (11)

எல்லா தர்மங்களையும் துறந்து, என்னை ஒருவனையே சரணமடை, நான் உனது தீவினைகளனைத்தையும் போக்கி உன்னை விடுவிக்கின்றேன். துயரப்படாதே. (12)

(கீதை.)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமென் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

(திருவாசகம்.)

வாழ்த்து.

ஸ்ரீ பிரஹத்சுந்தரகுசாம்பிகா பிரஸ், திருவிடைமருதூர்.

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 4.

ஸ்ரீ:

வைணவ சமயம்.

ஆசிரியர்:— ஸ்ரீமான் எஸ். கே. பார்த்தஸாரதி, பி. ஏ., பி. எல்., டிஸ்டிரிக்ட் முன்ஸிப், மன்னார்குடி.

கடவுளை அடைந்து நாம் உஜ்ஜீவித்து முக்த நிலை யடைவதற்குச் சாதனமானவையே மதங்கள். அவ்வித மதங்கள் வெளிப் பார்வையில் முரண்படுவதாகத் தோன்றினும், தாயுமானவர் "ஆறு சமயங்கள் தோறும் வேறு வேறாய் நின்று ஆடும் உன் திருவினை யாவ ரறிவர்" என்று கூறியபடி கடவுளே ஒவ்வொரு மதத்திலும் இருக்கின்றார். கீதையில் 'எவ்வழியில் நீங்கள் வந்தாலும் அவ்வழியில் இருந்து உங்களை ஏற்றுக் கொள்கிறேன்' என்று பகவான் மாற்றம் இருக்கிறது. அவ்வித மதங்களில் விசேஷமான ஒன்று வைணவம்.

கடவுளை அடைவதென்றால் கடவுள் தன்மையைப் பொருந்துதல். அவ்வித குணங்களைக் கூட்டுவதே ஒரு மதத்தின் வேலை. "சாதுர்வர்ணம் மயா சிருஷ்டம் குண கர்ம விபாக:" "அந்தணர் என்போர் சான்றாண்மை பூண்டொழுகலால்", என்றபடி. ஆகையால், வைணவன் என்பவன் யார் என்று விசாரிப்போம். (விஷ்ணுபுராணம்—யமகிங்கர ஸம்வாதம்—காந்தியடிகள் 'வைஷ்ணவ ஜனதோ'):

சொல்வன் வைஷ்ணவன் யாரெனக் கேளாய்
சோர்ந்தவர் பீடையை அறிவானே
எல்லோர் தம் துக்கத்தை தீர்ப்பவ னாயினும்
எள் ளளவும் கர்வம் அடையானே
மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே
சொன் மன முட லதில் சுத்தம தானவன்
சோதி யுடல் மக்கள் என்போனே.

பாவனப் பார்வை ஸமத்வ முற்று
பர ஸ்திரீயைத் தாயெனப் பணிவானே
நாவினுல் பொய் மொழி நவிலவு மாட்டான்
நொந்தும் பிறர் செல்வம் வேண்டானே
மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனத்தில் வைராக்கிய முறுவோனே
ஓயாமல் தேவனை உள்ளம் நினைந்திட
ஓதி உன்னி மன முருகுவோனே

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலு மில்லாத கனவானே
பாமரர் தேர்ந்திட பற்பல கருமமும்
பகவனின் தொண் டெனச் செய்வோனே.

விஷ்ணு பக்தனுகிய வைஷ்ணவனை வர்ணிக்கிறேன். எவன் பிறருடைய துக்கத்தை யறிந்து அவருக்கு உபகாரம் செய்த போதிலும், தான் செய்ததாக மனதில் கர்வங் கொள்ள மாட்டானே, எவன் உலகிலுள்ள எல்லோரையும் ஸமமாகப் பார்ப்பானே, அவர்களை யெல்லாம் பகவானுடைய சரீரமென் றறிந்து வணங்குவானே, எவன் பிறர்களுடைய பொருள் ஸ்திரீ முத லியவற்றில் ஆசை வைக்க மாட்டானே, எவன் தன்னுடைய மனம் வாக்கு காயம் மூன்றையும் அடக்கி யாள்கின்றானே, எவன் பகவானுடைய பெயரைக் கேட்டதுமே பக்தி பர வசனுகி விடுகின்றானே, எவன் தன்னை அவருடைய கருவி யாகக் கருதி எல்லா கருமங்களையும் அவருக்குக் கைங்கர்ய மாகவே செய்கின்றானே, அவனே வைஷ்ணவனுவான். பல சரீரங்களை யடையும் ஜீவனுக்கு மனித தேகம் கிடைப்பது கஷ்டம். அவ் விதமான பல ஜன்மங்கள் எடுத்த பிறகே வாஸு தேவனை பஜித்து எல்லாம் வாஸுதேவன் என் றறியும் விஷ்ணு பக்தனுக முடியும். அவ்வித விஷ்ணு பக்தனுவதற்கு நான் என்னுடைய காயம், வாக்கு, மனது, இந்திரியங்கள், புத்தி முதலியவைகளால் என்னென்ன செய்தாலும், என்ன உண்டா லும், என்ன யாகம் செய்தாலும், என்ன தானம் செய்தாலும், என்ன தபஸ் செய்தாலும, எல்லாவற்றையும் பரம் பொரு ளாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும்.

நான் சிறந்த விஷ்ணு பக்தனைப் பாகவத உத்தமனாக வேண்டுமானால் எல்லாப் பிராணிகளிடத்தும், வஸ்துக்களிடத்தும், பகவான் இருக்கின்றார் என்று அறிந்து, எல்லோரையும் ஸமமாகப் பாவித்து, என்னுடைய தேகத்தின் ஜன்மத்தாலும் கர்மத்தாலும் வர்ணாச்ரமங்களாலும் ஜாதியாலும், "நான்" என்ற அஹங்காரம் கொள்ளாமல், ஒருவரிடத்திலும் த்வேஷமில்லாமல், எல்லோருக்கும் மித்ரனாய், கருணையோடு கூடி, கெடுதி செய்பவர்களிடத்தும் பொறுமையையும் ப்ரீதியையுங் காட்டி, துக்கத்திலும் ஸந்தோஷத்திலும் ஸம நினைவுடையவனாய், கோபம் முதலியன இல்லாது, ஆனந்த மூர்த்தியாய், மனதை ஒரு வழிப் படுத்தி, என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும்.—ப்ரபத்திமார்க்கம்—"ஸர்வதர்மான்" என்ற சுலோகம் பார்க்க.

மோக்ஷத்தில் சரீர இன்பங்கள் நுகர்வதில்லை; மனோ ஆனந்தம் கொள்வதும் மாத்திரம் இல்லை.—நாம் மானிடத் தன்மை நீங்கி கடவுள் தன்மையாதல். விஷ்ணு உலகத்தை ரக்ஷிப்பதால் நாமும் அத்தொழிலில் சேர்கிறோம் இப்பொழுது முதல் பெண்கள் பிள்ளைகளாகிய நாம் அவருடன் கூட்டாளிகளாகிறோம். வேலை செய்யச் செய்ய மேலான வேலை கிடைக்கிறது. வேலைக்குப் பலன் வேலையே. கைங்கர்யமே வைணவனுடைய குணம், பெருமை, முக்தி, ஆனந்தம்.— "ஓம் நமோ நாராயணாய."

எனக்கெனச் செயல் வேறிலை யாவு மிங்கொரு நின்
றனக்கெனத்தகு முடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்தகத்துள வழுக்கெலா மாற்றி யெம்பிரானீ
நினைத்ததெப்படி யப்படி யருளுத னீதம்.

உளவ றிந்தெலாநின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவி லானந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
களவுநாயினேற் கிவ்வண்ண மமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையிங் காரொடும் புகலுவேன் றக்கோய்.

"என்னுயிரும் என்னுடலும் என்பொருளும் யானே
யிசைந்து கொடுத்திட வாங்கிவிட்டதன் பின் மகிழ்ந்தே
தன்னுயிரும் தன்னுடலும் தன்பொருளும் எனக்கேதந்து
கலந்தென்னைப் புணர்ந்த தனித்த பெருஞ்சுடரே".

ஒரு ஜன்மம் மாத்திரம உண்டு என்னும் மதங்களிலும் (Grace) காருண்யம் (கிருபை) உண்டு என்று கூறியிருப்பினும், அக் கிருபை பக்ஷபாதத்தின் தன்மையதாகிறது. பல பிறப்பும் பிறந்து அப் பிறப்புகளில் கெட்டன செய்தும், ஜீவன் மனம் வருந்தி வேண்ட, கடவுள் கிருபை காட்டி ஜீவனை ரக்ஷிப்பதுவே விசேஷம். நாம் ஒரு அங்குலம் நகர அவர் ஒரு கெஜம் ஓடி வருவார். அக் குணத்தையே உவமைப்படுத்தி 'லக்ஷ்மி' என்று கூறியுள்ளது.

ஸ்திரீகள் மோக்ஷமடைவது ஸுலபம்; சூத்திரர்கள் மோக்ஷமடைவது ஸுலபம். ஏனெனில் கைங்கர்ய குணமும் தொழிலும் அவர்களிடம் உள்ளன. "கலி:ஸாது, ஸ்திரீ:ஸாது, சூத்திர:ஸாது". பல பிறப்புகளின் பின் வைணவத்வம் வந்து "வாஸுதேவ: ஸர்வம்" என்றறிந்து கிங்கரனாகிறான்: "கடவுள் ஆலயத்தைத் தாங்கும் தூண்களாகின்றான்" ("Pillars in the temple of my Lord"). கடவுளுடன் ஒன்றுவது தன்மையிலும் வேலையிலும். கடவுளுடன் பாகஸ்தர்களாய் அவர் ராஜ்யத்தில் உரிமை யுடையவர்களாய் உண்மை 'மகன்' ஆகிறோம். ராமலிங்க ஸ்வாமிகள் 'திருவருட்பா'வில் "சிருட்டிமுதல் ஐந்தொழில் நான் செய்ய எனக்கு அருள் புரிந்தாய்" என்கிறார். "புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்ப்பொருளினையுணர்த்தி யெல்லாம் ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதி நீ யென் பிள்ளையாதலாலே யிவ்வேலை புரிக என்று இட்டனன்."

ஜாதி, குலம், முதலிய வித்யாஸமின்றி எல்லோர்க்கும் ஸம்மதமான மதம் இம்மதம் ஆகையால் இதுவே உலக மதம், கடவுளின் முக்ய லீலை மதம். எல்லோருமே இம் மதத்தின் தத்வத்தை அனுஷ்டித்து பகவான் அருளால் எளிதில் நற் பதவி யடையலாம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 7.

சமூகத் தொண்டிற்கு ஆஸ்திக[*] ஆதாரம்.

ஆசிரியர்:— இராவ்பகதூர் கே. வி. சேஷய்யங்கார், எம்.ஏ., பி.எல்,
ஹைகோர்ட் வக்கீல், பாரத தர்மம், பத்திராசிரியர், சென்னை.

நாம் எதை மதமென்று சொல்லுகிறோமோ அதுதான் மனுஷ வாழ்க்கையின் சாஸ்திரமாகும். மனிதனுடைய மனவாக்குக்காயம் அடங்கிய முழு இயற்கையை அறிவதும், ஒரு மனுஷன் மற்ற மனுஷர்களுடனும் தன்னைச்சுற்றி உள்ளவைகளுடனும் எப்படி நடந்துகொள்ளுவது என்பதை அறிவதும் தன்னுடைய வளர்ச்சி முறைகளை அறிவதும் மதமாகும். உலகத்திலுள்ள சகல சமய மதங்களிலெல்லாம் இது நிறைந்திருக்கிறது; ஆதலால் அவை மனித வாழ்க்கைக்கு உபயோகம் உள்ளதாய் இருக்கின்றன; ஆதலால் அவை இயற்கைத்தோற்றங்களையும் சக்தி குணங்களையும் மனிதனுடைய அபிவிருத்திக்குப்பொருத்தமாக எடுத்துக்காட்டுகின்றன; ஆதலால் நமது ஆன்மாக்கள் விளங்குவதற்கான அகன்ற பாதைகளை வகுக்கின்றன, காட்டுகின்றன. சில மதங்கள் மனிதன் ஒரே ஜன்மம் எடுத்து பின் எல்லாக்காலத்திற்கும் வேறொரு உலகில் வசிக்கிறான் என்ற அடிப்படையைக்கொண்டு தங்கள் மதாசாரங்களையும் கொள்கைகளையும் ஏற்படுத்தும்; வேறு சில மதங்கள் மனிதன் கணக்கில்லாத பல ஜன்மங்கள் எடுத்தும் அந்த ஜன்மங்களுக்கு இடையில் மற்ற உலகங்களில் வசித்துப் பின் திரும்பி பூலோகத்தில் பிறக்கிறான் என்ற ஆதாரத்தின் மேல் தங்கள் தருமங்களை நிலைநிறுத்தும், சில மதங்கள் உலக நடப்பையும் சக்திகளையும் மூர்த்திகளாக உருவகம் செய்து வழிபடும்; வேறு சில மதங்கள் அவைகளை மூர்த்திகரம் செய்யாமல் தத்துவங்களாகக் கொள்ளும். எவ்விதமாகவாவது ஒருவகையில், ஒவ்வொருவரும் எல்லைக்குட்பட்ட பொறுப்பையுடையவர்கள்என எல்லா மதங்களும் ஒப்புக்கொள்ளும்; அன்றியும் மதங்களெல்லாம் மனிதன் உலகவாழ்க்கையில் நீதியாய் வாழ வேண்டுமென்ற சட்டத்தை ஏற்றுக்கொள்ளுகின்றன. மனிதன் உலக விவகாரத்தில் சுயேச்சையுடன் தன் அறிவுக்கும் அவாவுக்கும் எட்டியபடி நடந்துகொள்ளவும், அதனால் ஏற்படும்

---

[*] ஆஸ்திகம் என்பது கடவுள் ஒருவர் உண்டென்று நம்புவது. எந்த மதமானாலும்சரி எந்தப் பெயரானாலும்சரி. கடவுள் என்பதும் தேவதைகள் தேவர்கள் என்பதும் வேறு.

சுகதுக்கங்களை வகிக்கும் பொறுப்பையும் எல்லா மதங்களும் ஒவ்வொரு ஜீவனுக்கும் அளிக்கின்றன. அன்றியும் ஒவ்வொரு வரும் உயர்ந்த நிலையை அடைவதற்கே சமயமதங்களெல்லாம் முயற்சி செய்கின்றன. வரப்போகும் வேறொரு ஜன்மத்திலோ அல்லது மரணத்திற்குப் பிந்திய வேறு உலக வாழ்விலோதான் நன்ருய் இருப்பதற்கு, இச்சென்மத்தில் இவ்வுலகில் தருமமோ தியாகமோ செய்வது அவசியம். தனக்கு அனுகூலம் லாபம் என்ற ஆதாரத்தின்மேல் மனிதனுடைய வாழ்க்கைமுறைகளை மதங்கள் கட்டளையிடும், பிரபஞ்சம் நடை பெறுவதைப் பற்றி எல்லா மதங்களும் ஒரு நிச்சயமான ஈசுவர ஆக்ஞை இருப் பதை ஒப்புக்கொள்ளுகிருர்கள்; அவ்வித பிரபஞ்ச விகாச முறையை நடத்துவதற்கு சக்திகளும் அதிகாரங்களும் மூர்த்தி களும் பூரண உதவிசெய்து வருகின்றன எனவும் ஒப்புக்கொள் ளுகிருர்கள்.

இந்த எளியதும் பொதுப்படையுமானதான கருத்துக் களுக்குள் கணக்குவழக்கில்லாத பேதாபேதங்கள் உள்ள சில்லரை விஷயங்கள் இருக்கின்றன. மனிதர் ஒவ்வொரு வருக்கும் அபிவிருத்தி மார்க்கம் அவர் அவர்களுக்குத்தக்கபடி மாறுகிறது என எண்ணுவதில் அதிக பிசகில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் அது தோன்றிய காலம், இடம், ஜாதி, என்ற சம்பவங்களையும் பொருத்து பெரும் வித்தியாசங்கள் இருக்கின் றன. ஆயினும் அவைகளெல்லாம், மனிதர்களை நல்வாழ்வு வாழ வழிகாட்டும்; அவைகளெல்லாம் தங்கள் கட்டளைப்படி நடப் பவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும், இவ்வுலகிலும் மற்ற உலகங்களிலும் நன்மையைப்பயக்க எண்ணுகின்றன. மனுஷர் தங்களுடைய சுயநலத்தைப் பொருத்தாலும்சரி, இல்லாவிட்டால் உலக பொதுநலத்தை அனுசரித்தாவது, மனித வளர்ச்சியைப்பற்றிய முறையை மதங்களெல்லாம் சொல்லும். அவைகளேல்லாம் மனிதர்களை நலத்திற்கும் ஒருவர் மற்றவர்களோடு இணங்குவதற்கும் எத்தனிக்கும், அவைக ளெல்லாம் சூக்ஷ்மமானவகையில் நமக்குப் புலப்படாத அரிய சித்திகளை எழுப்பும் வகைகளை உடையது. ஒவ்வொரு மதத் திலும் தெய்வீகத்தன்மையைப்பற்றிய சாஸ்திரங்களும், தெய்வ சக்தியைக்கொண்டு மனிதனுக்கு நன்மையைச் செய்யக்கூடிய சடங்குகளும், மனிதர்கள் நடந்து கொள்ளவேண்டியதற்கான நீதிதருமவிதிகளும் இருக்கின்றன.

மற்ற மதங்களுக்கும் இந்துமதத்திற்கும் எடுத்துக் காட் டக்கூடிய சிறப்பு என்னவென்ருல், இந்து மதத்தின் எண்ணங் களும் போதனைகளும் மற்ற முறைகளைவிட விரிவாகவும் ஆழ்ந் தும் இருக்கிறது. மனுஷன் அல்லாத மற்ற ஜீவராசிகளின்

விகாசத்தையும் அது கூறும். மறுமையோடு கூடின ஒரு பிறப்பைச்சொல்லும் மற்ற முறைகளுக்கும் அப்பால் இந்துமதம் செல்லுகிறது. மனிதனின் அந்தரங்க அமைப்பு பலவகையில் ஆக்கப்பட்ட சிக்கலானது எனவும், அதனுல் மனிதருக்குள் பலவகை பேதாபேதம் இருக்கிறதெனவும் அது ஒப்புக்கொள்ளுகிறது. எல்லா ஜனங்களுக்கும் அபிவிருத்தியாவதற்கு பொது விதிகளை விதித்தபோதிலும், தீவிரமாய் அபிவிருத்தியாக விரும்புபவர்களுக்கு விசேஷ விதிகளையும் விதிக்கிறது. பிரபஞ்ச நடப்பை உட்புகுந்து ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து அதன் மூலம் தினசரிவாழ்க்கையைப் பாகுபாடு செய்யத்தக்க பொதுவான வகையிலும் விரிவான வகையிலும் இந்துமதம் சொல்லும் முறைகள் வேறு எம்முறைகளுக்கும் சிறந்தது.

ஆயினும் மற்ற மதங்களோடு ஒப்ப மறுமையையும் மறுபிறப்புக்களையும் அதிகமாக வற்புறுத்தினதின் பயனுக, இம்மையையும் இங்குள்ள பூவுலக நிலைகளையும் உபேக்ஷிக்கும்படி செய்துவிட்டது; இது காலக்கிரமத்தில் எழுந்த கஷ்ட நஷ்டங்களையும் விபரீதங்களையும் நமக்குப் புலப்படாதபடி நமது காக்ஷியை மறைத்துவிட்டது. நமது பூலோக நிலைகளை மேலுக்கு மேலும் நன்மையாகும்படி இடைவிடாது மாற்றுவதற்கான திடசித்தத்தை எழுப்புவதற்குப்பதிலாக, மேலும் மேலும் கெட்டுப்போகும்படி தனக்கெனச் செயலற்ற ஆற்றில் மிதக்கும் கட்டையைப்போல நம்மை இது செய்துவிட்டது. நமது கஷ்டங்களையும் நஷ்டங்களையும் புத்திபூர்வமாய் காரண காரியத்துடன் ஆலோசித்து அறிந்து அவைகளை நிவர்த்திசெய்ய விடாதபடி, விதிவசம் இப்படி வந்ததெனவும் இவைகளை மாற்ற முடியாதெனவும் மனிதர்களை எண்ணச்செய்து, அவர்களிடம் மதசம்பந்தமான வாழ்க்கைக்கும் அவசியமான புதியதாய் ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்கான தூண்டுதல், ஊக்கம் உற்சாகம், தீரம் முதலிய உணர்ச்சிகளை இது அழித்துவிட்டது. இது வாழ்க்கையை முழுதிலும் ஒரு எட்டுச்சுரைக்காயாகச் செய்துவிட்டது. நீண்டகாலமாகப் பொருள்நிலையிலும் ஜன சமூகத்திலும் ஏற்பட்ட பெரும் மாறுதல்களை அடியோடே அலக்ஷியம் செய்துவிட்டது. மறுமைக்குப் பிரதான்னியம் கொடுத்ததினுல், அழிவதற்கு விதிக்கப்பட்டுள்ள துக்ககரமான உலகிலிருந்து தான் பிழைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு தப்பு எண்ணத்தை எழுப்பி, உலகைத் துறந்து போகவும் தான் மாத்திரம் தப்பிக்கும்படியான விரும்பத்தகாத தான ஒரு ஆசையை மனிதருக்கு உண்டுபண்ணியது.

தற்காலத்தில் மற்றவைகளைவிட நமக்குத் தேவையானது யாதெனில், நமது திருஷ்டியை மறுமையின்மேல் அதிக

மாகச் செலுத்தாமல் இம்மையில் கவனிக்கும்படி செய்யவேண்டியதுதான்; இவ்விதம் திருஷ்டியைத் திருப்புவது மிகவும் அத்தியாவசியமாகிவிட்டது; ஏனெனில் நாம் காலக்கிரமத்தில் நழுவி விழுந்திருக்கும் தற்காலஸ்திதி சகிக்கமுடியவில்லை; கடவுளுக்கு நாம் செயயும் வேண்டுதல்களும் மந்திரங்களும் தந்திரங்களும் சிரிப்புக்கு இடமாகிவிட்டன. சுத்தமும் ஆரோக்கியமும் பயிற்ச்சியுமான நல்வாழ்க்கை சர்வஜனங்களுக்கும் பாத்தியமுள்ளதெனவும், அவ்வித வாழ்க்கையை யாவரும் அடையும்படி முயற்சிசெய்வது கடவுளுக்கு சம்மதமான சமயமுயற்சி எனவும் அவைகளுக்கான சிரத்தையையும் நம்பிக்கையையும் நமது உள்ளத்தில் நாம் பயிற்சிசெய்யவேண்டிய நாள் வந்துவிட்டது. இதனால் நாம் நம்முடைய மதத்தில் உள்ள மற்ற உயர்ந்த விசேஷங்களை விட்டுவிடுவதென்றல்ல; இந்து மதமும் இந்துக்களும் பிரத்தியேகமாகப்போற்றும் மறுமைப் பயன்களை இழந்துவிடுவதென்றல்ல; இந்துக்கள் அனைவரும் தீவிரமாய் விரும்பும் முடிவான முத்திநிலையை மறப்பதல்ல.

இதற்குமாறாக, பூலோக காரியங்களை ஒழுங்குபட திருத்திக்கொள்ளுவது சமயத்தின் மதத்தின் முதற்கடமையாகும். அஸ்திபாரமாக இருக்கும் குறைபாடான பூலோக வாழ்க்கையின் மேல் தகுதியான ஆன்மவாழ்க்கையை அமைக்க முடியாது. மனித ஜீவர்கள் ஒழுங்காய் வரக்கூடிய சௌகரியங்களைச் செய்வது முக்கியமாக ஒரு ஆன்ம முயற்சியே; அன்றியும் அது கடவுளை அடையும் மார்க்கமுமாகும். ஏனெனில் ஆன்மவாழ்வு இம்மையையும் மறுமையையும் தன்னில் அடக்கும்; பூலோக வாழ்வையும் இதர லோகவாழ்வுகளையும் கொண்டது அது. அவ்வித முயற்சியில் உண்டாகும் உழைப்பும் யோசனைகளும், தியாகமும், அதனால் ஏற்படும் சிரமமும், பக்தியும், விடாமுயற்சியும், அது உற்பவிக்கும் மனிதர்களிடத்து நிறைந்த அன்பும், அதில் ஆழ்ந்து உள்ள சத்தியமே ஜயிக்குமென்ற விசுவாசமும், எல்லாங்கூடி சிறந்ததொரு ஜனசமூகம் புதிதாய் உதிப்பதற்கான பிரத்தியேகமானதொரு தபசாகும். நமது பூலோக கஷ்டமெல்லாம் கண்ணுக்குக்காணப்படாத சக்திகளாலும் சித்திகளாலும் தீரவேண்டுமென எண்ணி நம்புகிறதுமானவும், பல நூற்றுண்டுகளாக பரம்பரையாக ஒப்புக்கொள்ளப்பட்டு நமது குடும்ப யோகக்ஷேமத்திற்கு பல தேவதைகளை பூஜித்துவரும் இந்நாட்டில், ஜனசமூக சேவைக்கென நன்மைக்கென எழும் தீவிர முயற்சி எதற்கும் தட்டுத்தடையும் அவையடக்கமும் அவசியமில்லை. மனிதர்களுக்குச் சேவைசெய்தால் அது கடவுளுக்கே சேவைசெய்வதாகும்.

இந்நாட்டில் இப்போது தோன்றும் பல இயக்கங்களில், கௌமாரகுருகுல இயக்கம் சிறந்தவொன்று. ஆண்களும் பெண்களும், தினசரி சிரமம் எடுத்துக்கொண்டும், அற்பணம் செய்துகொண்டதுமான வாழ்க்கையுடனும் அதற்கு உதவி புரிகிறார்கள். அவர்களின் ஆலோசனையும் பிரார்த்தனையும், அவர்களது தியாகமும் உழைப்பும் பல மைல்தூரம் இதைச் சுற்றியுள்ள கிராமவாசிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் எழுப்பி யுள்ளது. அவ்வூக்கமும் உற்சாகமும் மற்றவர்களிடமும் இன்னமும் பரவுகிறது. அவர்கள் உழைப்பைப்பார்த்து மற்ற வர்களும் உழைக்க ஆரம்பிக்கிறார்கள்; கூடவும் ஒத்துழைக்கி றார்கள். நாம் விரும்புவது யாது? இவ்வியக்கம் ஒரு பெரிய ஜனசமூகத்தொண்டிற்கு ஆரம்பமாகும்; இந்நிலையம் உண்மை யில் மலைச்சிகரத்தில் பிரகாசிக்கும் ஒரு தீபமாகும்.

நண்பர்களே! 12 மணிக்கு நல்லது ஒரு நேரத்தில் இங்குக் கூடியுள்ளோம். நல்லது ஒரு காரியத்திற்காகச்சேர்ந் துள்ளோம். சர்வமதப் பிரார்த்தனையில் எழுந்த சர்வமத தேவர்களுடைய அனுக்கிரகத்துடன் இங்கு கூடியுள்ளோம். ஆதலால் அவர்களுடைய சக்தியுடனும் உதவியுடனும், அவர் களுடைய தலைமையிலும் ஆசியுடனும் ஆரம்பமாகும் இவ்வியக் கம் வருஷத்திற்கு வருஷம் பலமாகி திடமாகி வளரும் என எண்ணுவது மிகையாகுமோ?

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.

—தாயுமானவர்.

உயிர்களெலாம் தெய்வ மன்றிப் பிறவொன்றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்!

—பாரதியார்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஆகா;
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே.

—திருமந்திரம்.

குறிப்பு:— படம்—துணிக்கொடி. பகவன்—கடவுள். நடமாடக் கோவில்—நடக்கின்ற சரீரமாகிய கோவில். கோவிலில் இருக்கும் சாமிக்கு ஒன்றைக்கொடுத்தால் நமது சரீரத்துள் இருக்கும் சாமிக்குப் பயனுவதில்லை. நமது சரீரத்துள் இருக்கும் சாமிக்கு ஒன்று கொடுத் தால் அது கோவிலிலுள்ள சாமிக்கும் ஆகும்.

பாரதி பிரஸ்; மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1

சமயமும் ஒழுக்கமும் 8.

தற்காலத்திற்கு அவசியமான ஒழுக்கம்.

உயர்திருவாளர்: சி. சுப்பிரமணிய பாரதியார் கூறியதினின்றும், நமது கௌமாரகுருகுல மாணவர் ஆர். திருநாவுக்கரசு பிள்ளையால் திரட்டப்பட்டது.

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி ஜில்லாவி லுள்ள எட்டையபுரம் சமஸ்தான வித்வானக இருந்த ஸ்ரீ யுத சின்னசாமி ஐயரின் அருந்தவப்பயனுக 1882-ஷூ அவதரித் தார். இவருக்கு தகப்பனாரால் இடப்பட்ட இயற் பெயர் சுப்பிரமணியன் என்பது. இவர் இளம்பிராயம் முதற்கொண்டே அரிய தீஞ்சுவைப்பாக்கள் இயற்றலானர். எனவே இவரது திறத்தைக்கண்ட தமிழ்ப் புலவர்கள் சபை ஒன்றைக் கூட்டி அச்சமயம் நம் கவிக்குப் "பாரதி" என்னும் பெயரளித்தனர். இளம் பிராயத்திலேயே பெரும் புகழ்பெற்ற நம் புலவர் திலகத் தைக்கண்டு பொறாமைகொண்ட புலவர்கள் பலரையும் இவர் வாதில் வென்று தம் ஆற்றலை வெளிப்படுத்தினர். தம் அரிய பாக்களால் தமிழ் அன்னைக்குப் பாமாலை சூட்டிய நம் கவியைத் தமிழ் மக்கள் கேவலம் மகாநாடுகளிலும், மேடைகளிலும் பிரசங் கங்கள் செய்யும் சாதாரண ராஜீயவாதி யென்றெண்ணி ஆதரி யாதிருந்தது வருந்தத்தக்கது. சமீபகாலம் முதற்கொண்டுதான் நம் புலவரின் ஆற்றலைத் தமிழ் மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

குணாதிசயங்கள்.

பாரதியார் இவ்வுலகில் தாம் கண்ட எல்லா உயிர்களிடத் தும் மிக்க அன்பு செலுத்திவந்தார். அன்பைப்பற்றிக் கூறு மிடத்து இவர்,

"துன்ப நினைவு களும், சோர்வும் பயமு மெல்லாம்
அன்பில் அழியு மடீ—கிளியே, அன்புக் கழிவில்லை காண்.

—எனவும்,

"அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்"

—எனவும்

உலகத்தாருக்குப் போதித்தல் கவனிக்கத்தக்கது. இவர் தனக்கென வாழாது பிறர்க்கே தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அளித்தவள்ளல். தாம் வறுமையால் பீடிக்கப்பட்டுத் துன்பப் பட்டுக்கொண்டிருந்த பல சமயங்களிலும்கூட தம்முடைய துன்பங்களைச் சிறிதும் பொருட்படுத்தாது பிறருடைய துன்பங்களைத் தீர்ப்பதற்காக கடன் வாங்கியும் அவர்களுக்கு உதவினர் என்றும், பலநாட்கள் பட்டினிகிடந்து தாம் சிறிது பொருள் சம்பாதித்தபோதுங்கூட யாராவது வறுமையினல் அல்லற்படுகிறேன் என கூறினராஞல் உடனே தம்மிடமிருந்த பொருளைக் கொடுத்து உதவி விட்டு மறுபடியும் தாம் பட்டினிவிரதம் மேற்கொண்டார் எனவும் சரித்திரக்காரர் கூறுகின்றனர்.

இவர் இவ்வுலக மக்கள் யாவரும் ஒற்றுமையுடன் ஒரு குடும்பத்தினரைப் போல வாழ வேண்டுமென்ற பேரார்வம் கொண்டவர். எனவே இவர் ஜாதி மதபேதங்களை அறவே வெறுத்தார். தம்முடைய பாப்பா பாட்டில்

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

—எனவும்

உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனித ரெல்லாரும்
இடம்பெரி துண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

—எனவும்

நம்கவி மனம் கசிந்துகூறியிருத்தலால் அவரது மனேநிலை நன்கு விளங்கும். வாழ்விலும் தாழ்விலும் பாரத நாட்டினர் யாவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதை வலியுறுத்தவே "எங்கள் தாய்" என்னும் பாட்டில்

முப்பதுகோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனில்
சிந்தனை யொன்றுடை யாள்.

—எனவும் மற்ருேரிடத்தில்,

எப்பதம் வாய்த்திடுமேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.

—எனவும் கூறுகின்ருர்.

பாரதியார் வாழ்க்கையில் உண்மையான இன்பத்தைக் கண்டவராதலின் எவ்வகைத் துன்பத்திற்கும் சிறிதும் தளராத வைரமுடைய நெஞ்சம் கொண்டுவாழ்ந்தார். தீமையைக் கண்டு ஒருவன் அஞ்சி அதை மாய்க்க வழிதேடாவிடில் அஃது பெரும் பாவமென அடிக்கடி போதித்து வந்தார்.

பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

—எனக் கூறியுள்ள

அரிய உபதேசம் இளைஞர்களுக்காகவே எழுதப்பட்டிருப்பினும் அவ்வாக்கியங்களின் ஆழ்ந்தகருத்து யாவராலும் போற்றற்குரியது. மேலும் ராஜீயம் முதல் சமூகம் வரை எல்லாத் துறைகளிலும் "உண்மை விடுதலை"யை நாடிநின்ருர். சமூகத் தீய வழக்கங்களாகிய பால்ய விவாகம், தீண்டாமை, விதவைகளின் கஷ்டநிலை இவைகளை அறவே அகற்ற அரும்பாடுபட்டார். தாம் எழுதிய "சந்திரிகை" என்னும் கதையில் விதவா விவாகம் இல்லறத்தின் பெருமை, மாதரின் மாண்பு, ஜாதிமத வரையறைகளைக் கடந்த உண்மைக்காதல் முதலியவைகளைப்பற்றி அழகுபெற நம் கவி கூறியுள்ளார். அஃதன்றியும், இக்காலத்தில் அநேகர் மேடைமீது பேசுவது ஒன்று நடத்தை ஒன்று என்று இல்லாதபடி அவர் யாவருடனும் பேதமின்றி உணவும் ஒழுக்கமும் காட்டியது மன்றி, அதற்கு உதாரணமாக வெளிப்படை

யாகவும் பிராமணருக்குரிய தமது பூணூலையும் அறுத்து விட்டார். மாதர்கட்கு சுதந்திரம் அளிக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றிப் படிப்போர் மனதைக் கொள்ளைகொள்ளும் வண்ணம் பாரதியார் பாடியுள்ள பாடல்களுள் இரண்டொரு உதாரணங்களை எடுத்துக்காட்டுவோம்.

மாதர் தம்மை யிழிவுசெய்யு மடமையைக் கொளுத்துவோம்.
வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே,
தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும்
சரி நிகர், சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே.

எட்டையும் பெண்கள் தொடுவதுதீமை யென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

அன்பு மயமாயுள்ள பரம் பொருளை அடைவதற்கு ருத்திராக்ஷம், விபூதி முதலிய வெளி வேஷத்தால் மட்டும் சிறிதும் பயன் படாது மனம் கரைந்து பக்குவநிலை யடைவதுதான் பேரின்பத்தைக் காணும் மார்க்கம் என்பதைக் குறித்து இவர் பாடியுள்ள பாடல்கள் பக்தியில்லாதவனுக்கும் பக்திபுகட்ட வல்லதென்பது திண்ணம். அப்பாடல்களில் ஒன்றிரண்டைக் கீழே கூறுவோம்.

காவித்துணி வேண்டா கற்றைச்சடை வேண்டா
பாவித்தாற் போதும் பரமநிலை யெய்துதற்கே.
சாத்திரங்கள் வேண்டா சதுமறைகளேதுமில்லை
தோத்திரங்க ளில்லையுளந் தொட்டுநின்றாற் போதுமடா.

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திட லாமென்றே யெண்ணி யிருப்பார்
பித்த மனிதரவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்.

இத்தரை மீதினி லேயிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவ ராமென்றிங் கூதேடா சங்கம்.

ஸ்ரீ பாரதியார் ஹிந்துமதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர். அன்னை பராசக்தியிடத்து அளவற்ற பக்தி பூண்டு அத்தெய்வத்தின் பேரில் எண்ணிறந்த பாடல்கள் பாடியுள்ளார். இவர் பெரிய அத்வைத ஞானி. அன்றியும் கடவுள் எங்கிருக்கிறார் என்பதைப்பற்றி நம்கவி கூறியுள்ள அபிப்பிராயம் பின் கண்ட பாட்டின்மூலம் உணரலாம்.

உயிர்களெலாந் தெய்வமன்றிப்பிறவொன்றில்லை;
ஊர்வனவும் பறப்பனவு நேரே தெய்வம்!
பயிலுமுயிர் வகை மட்டுமன்றி யிங்கு
பார்க்கின்ற பொருளெல்லாந் தெய்வம்கண்டீர்,
வெயிலளிக்கு மிரவி, மதி, விண்மீன், மேகம்
மேலுமிங்கு பலபலவாந் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப் பொருள்களனைத்துந் தெய்வம்
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்துந் தெய்வம்.

இவர் ஹிந்துமதத்தில் விசேஷ பக்தியுள்ளவராயினும் மற்றெல்லா மதங்களிடத்தும் சமரச நோக்கமுடையவர். புத்தர், இயேசுகிறிஸ்து, முகம்மதுநபி முதலியோர் பேரில் இவர் பாடியுள்ள பாடல்களும், புதிய ஆத்திச்சூடியின் காப்புச்செய்யுளாகிய அடியில்கண்ட பரம்பொருள் வாழ்த்தும் இதற்குச் சிறந்த சான்றாகும்:—

ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத்திருக்கு முழுவெண் மேனியான்,
கருநிறங் கொண்டு பாற் கடல் மிசைக் கிடப்போன்,
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்,
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

கவித்திறனைப்பற்றிய குறிப்புகள்.

ஸ்ரீ பாரதியாரின் கவித்வத்தின் தன்மையைப்பற்றிக் கூறப்புகுவோமாயின் முதலில் குறிப்பிடத்தக்கது எளிய நடை. இவர் எழுதிய எந்த நூலைப்படிப்பதாயினும் பொருள் விளங்

கப் பெறவென்று கற்றறிந்த தமிழ்ப்புலவரை நாடவேண்டிய தில்லை. சாதாரணத்தமிழ் அறிவுள்ளவனும் நூலில் உள்ள நுட்பங்களை எளிதுணருமாறு அழகாக அமைத்திருக்கின்றார். இவ்வுண்மையை வலியுறுத்த உதாரணங்கள் கூறுவது அனுவசியம். வேறு சந்தர்ப்பங்களில் இதுவரை கூறப்பட்டுள்ள உதாரணங்களே இதற்குப்போதிய சான்றாகும். நடை எளியதாயிருப்பினும் அவரது நூலைப் படிக்கும் ஒவ்வொருவனையும் கவர்ந்து அவனது நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் நம்கவி எழுதின நூல்களுக்கு உண்டு. சந்தர்ப்பத்திற்குத்தக்க உபமான உபமேயங்களை அமைத்திருத்தலும் இவரது நூற்போக்கின் முக்கியமான தன்மையாம். உதாரணம்:—

பொய்யர்தந் துயரினைப் போல்—நல்ல
புண்ணிய வாளர்தம் புகழினைப் போல்,
தையலர் கருணையைப் போல்—கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போல்,
பெண்ணொளி வாழ்த்திடுவார்—அந்தப்
பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல் போல்
கண்ணபிரான் அருளால்—தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே.

மேலும் ஒருபாத்திரத்தின் மனோபாவத்திற்கும் நடைக்கும் பொருந்தியதாக அப்பாத்திரத்தின் வாய்ச்சொற்களை அமைத்தல் அறியத்தக்கது. உதாரணமாக கொடூர சிந்தனையுள்ள கௌரவர் தலைவன் சுயோதனன் பாண்டவருடன் சூதாடிய போது, தர்மசீலனாகிய விதுரன் கூறிய மொழிகளைக் கேளாது அவ்விதுரனை நோக்கிக்கூறிய கீழ்க்கண்டபாட்டு, சந்தர்ப்பத்திற்கும் சுயோதனனின் மனப்பான்மைக்கும் எவ்வளவு அழகாகப் பொருந்தியுள்ளதென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

நன்றி கெட்ட விதுரா—சிறிதும்
நாணமற்ற விதுரா
தின்ற உப்பினுக்கே—நாசந்
தேடுகின்ற விதுரா

அன்று தொட்டு நீயும்—எங்கள்
அழிவு நாடுகின்றாய்
மன்றி லுன்னை வைத்தான்—எந்தை
மதியை யென் னுரைப்பேன்.

ஐவருக்கு நெஞ்சும்—எங்கள்
அரமனைக்கு வயிறும்
தெய்வமன் றுனக்கே—விதுரா!
செய்து விட்டதேயோ?

பண்டைத் தமிழ்ப் புலவர்களைப்போல வழக்கமாகக் கூறிய உவமைகளையும் அணிகளையும் மறுபடியும் மறுபடியும் கூறாது, இவர் சூரியமண்டலத்தைச் சுற்றியுள்ள கோள்களின் தன்மை, பல்லாயிரம் மைல் தூரம் செல்லும் ஒளியின் குணம், எரிமலையின் கொந்தளிப்பு முதலிய புதியவிஷயங்களை எடுத்துக் கையாண்டுவந்திருக்கிறார்.

பாரதியாரின் நூல்களிடத்தே மலிந்துகிடக்கும் வர்ணனைகளும் வெகு இனிமையானதே. முக்கியமாக இவர் பொன் பொதிந்தமாலை ஞாயிற்றையும் கம்பீரமான மலைத்தோற்றத்தையும் அதிகம் வர்ணித்திருக்கிறார். ஞானரதம் என்னும் இவரது நூலில் இவ்வகையான வர்ணனைகள் மிக அதிகம். இன்னும், அற்பமான விஷயங்களைப்பற்றிக்கூட வெகு அழகாய் வர்ணித்திருத்தல் இவரது வர்ணனைகளின் சிறப்பாகும். உதாரணமாக அற்ப ஜந்துவாகிய வானரத்தை இவர் வர்ணித்திருத்தலை கவனிக்கவும்.

மேனி யழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலு நேர்த்தி தன்னிலுமே,
வானரர் தஞ்சாதிக்கு மாந்தர் நிகராவா ரோ?
ஆண் வரையும் அவர்முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப்படாத தமதுடலை
எட்டுடையால் மூடி யெதிருமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்,

ஆடிக் குதிக்கும் அழகினுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப்பாய்வதிலே
வானரர் போலாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச் சையிதற்கு நிகராமோ?

—எனவே,

தமிழ் மக்களிடத்து உறங்கிக் கொண்டிருக்கும் ஒற்றுமை, வீரம் முதலிய உயரிய தத்துவங்களை, தமதரும் பாக்களால் எழுப்பி, தமிழகத்திற்கே என்றும் அணையாத சுடர்விளக்கே போன்ற நம் சுப்பிரமணிய பாரதியாருக்கு, அவரது நூல்களைப்போற்றிப் படித்தலேதான் தமிழ்மக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம் மடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடோறும் உயர்க!

முக்கிய குறிப்பு:— பாரதியார் நூல்களை வாங்கிப் படிப்பதால் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் அவர் குடும்பத்தாருக்கு சகாயம் செய்தவராவோம்.

[பாரதி பிரஸ், மன்னார்குடி.]

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 9

ஆன்ம வளர்ச்சி.

ஆசிரியர்—இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை.

உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண். — ஔவைக்குறள்

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல்
பற்றல் ஆவதோர் நிலையிலாப் பரம்பொருள்; அப்பொருள் பாராதே,
பெற்ற அவாப்பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே,
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே. —
திருவாசகம்.

வாழ்க்கை நலம் அறிந்தோர் இந்தியர்.

சில ஆண்டுகளுக்கு முன் மேல்நாட்டு கீழ்நாட்டு நூல்களில் தேர்ந்த நமது பெரியார் ஒருவர் ஆங்கில நாட்டில் உபந்நியாசம் செய்தபோது, வாழ்க்கை நலம் அதாவது நாம் பிறந்து உயிர் வாழ்வதாலாய பிரயோஜனம் என்ன என்பதை இந்தியாவில் தான் உணர்ந்து அறிந்து இருக்கிறார்கள் என எடுத்துக் கூறினர். இதைப்பற்றிக் கொஞ்சம் ஆழ்ந்து ஆலோசிக்கலானேன்; யோசனையில் உண்டான சில எண்ணங்களை நமது நாட்டாருக்கு பயன்படுமாறு இங்கு கூறுகிறேன். நமது நாட்டில் இப்போது ஆன்மவிசாரணை எவ்வளவு குறைந்திருந்த போதிலும், பிறநாடுகளைவிட ஆன்மவாசனை இங்கு அதிகமாகவே இருக்கிறது ஆதலால் புண்ணிய பூமியாகிய இப்பரத நாட்டில் பிறந்த நாமெல்லோரும் பிறவிப்பயனை அடைய முயற்சி செய்தல் எளிது; முயற்சியும் வீணாகாது.

வாழ்க்கை நலம் உடம்பினில் உத்தமனைக்காணல்

2. வாழ்க்கை நலமும் பிறவிப்பயனும உத்தமனைக் காண்பதுவே என மேலே காட்டியுள்ள இரண்டு மேற்கோளாலும் விளங்கும். இத்தகைய மேற்கோள்கள் எத்தனையோ உள. பரம்பொருளான புருஷோத்தமனைக்கண்டு அக்குருநாதன் வழியில் நின்று, ஆன்ம விளக்கம் பொருந்தி ஜீவன்முக்தன் ஆவதே மானிட ஜென்மத்தின் முடிவான பலன் என்பது சகல சமய சித்தாந்தம். இத்தகைய அரும்பெரும் நிலை இந்து சாஸ்திரப்படி ஒரு பிறப்பில் ஆவதல்ல; பல சென்மங்கள் எடுத்து முக்தி அடையும் முறையை 1ம் படத்தில் குறிப்பாகக் காட்டப்

பட்டிருக்கிறது. அவைகளை எடுத்து அடியில் விரித்துரைப்போம். சாமான்னியமாக மிருகப்பிறப்பினின்றும் வெளியேறி மனித உடலெடுத்த ஆன்மா மனித ஜென்மமாகவே அச்சுமாறி, ஆண் பெண் மாறி, பிறந்துவரும்.

உயிர் என்பது எது?

3. உயிர் (ஆன்மா) என்பது எது, என ஒருவாறு நிர்ணயம செய்வது அவசியம். ஸ்தூல தேகம், இச்சை, மனம் இவைகளையெல்லாம் பல தேகங்களாக நாம் சாதாரணமாக அறிவோம். உயிர் இத்தேகங்கள் அல்ல; இத்தேகங்களுக்குள் நின்று விளங்கும் தேகி. இந்தத் தேகி காரண சரீரத்தைப் பிரியாது நின்று தன் ஆன்ம யாத்திரையில் உழன்று நடப்பன். எவ்வாறு நாம் தேகங்களை ஒவ்வொன்ருக எடுத்து உலகில் பிறந்து, வாழ்ந்து, இறந்த பிறகு அத்தேகங்களை ஒவ்வொன்ருக விடுகிறேமென்பதையும், மறுபடியும் அடுத்த பிறப்பை எப்படி அடைகிறேம் என்பதையும் 2ம் படத்தில் காட்டப் பட்டிருக்கிறது. இந்தத் தேகியை நாம் இங்கு உயிர் எனவும் ஆன்மா என்றும் கூறி உள்ளோம். இதை ஜீவாத்மா என்றும் சொல்வதுண்டு. இந்த உயிர் பரம்பொருளின் ஒரு பொறி எனவும் சிலர் கூறுவர். மேற் கூறிய உயிருக்கு பிறப்பு இறப்பு இல்லை. உயிர் எடுக்கும் தேகத்துக்கே பிறப்பும் இறப்பும்.

உயிருக்கு ஒரு பிறவி ஒரு நாள்.

4. முதல் படத்திலிருந்து முக்கியமாக முதலில் நாம் காணுவது யாதெனில் இப்போது நாம் எடுத்திருக்கும் இப் பிறப்பு எத்தனையோ பிறப்புகளில் ஒன்று; ஒருவருஷத்து 365 நாட்களில் ஒருநாள் போலும் இவ்விதம் எத்தனையோ மானிட ஜன்மங்களை எத்தனையோ லக்ஷ வருஷங்களில் எடுக்கிறேம் என்பதாக நமது நூல்கள் கூறும்.

5 பகல் இரவைப்போல் ஜனன மரணம் ஒன்றின்பின் ஒன்ருய் விடாது வருகிறது. பகலில் உலாவி உழைத்துப் பிறகு இரவில் இளைப்பாறி உறங்குகிற மாதிரி, ஜன்மம் எடுத்து உயிர் வாழுங்காலத்து ஓடி ஆடிப் பலகாரியங்களை நடத்திப் பிறகு இறந்தபின் மறைந்து இருந்து உயிர் (ஆன்மா) மறுபடியும் பிறவிக்கு வரும்

பிரவிருத்தி நிவிருத்தி மார்க்கம்.

6. எப்படி நமது தேகம் பிறந்ததுமுதல் வரவரப் பருத்துப் பலமாகிவந்து பிறகு க்ஷீணமாகி மெலிந்து அழியுமோ

ஓம்.

ஆன்மவிளக்கம்

மனிதன் பலசென்மங்கள் எடுத்து முத்திஅடையும்முறை குணகருமத்தாலாகும்



1. குணம்.				
2. உலகியல்.	மூர்க்கர் × ——	நாகரிகர் —	— ×	ஞானிகள்
3. புருஷார்த்தம்.	வீண் வாழ்வு	பொருள் + இன்பம்	அறம்	வீடு
4. அறிவு + உணர்ச்சி	ஸ்தூல தேகம்	சூக்ஷ்ம தேகம்	காரண தேகம்	ஆன்மா
5. மதம்.	சிறுதெய்வ வழிபாடு	சிவன், விஷ்ணு, குமரன் முதலிய தேவர் வழிபாடு	தத்துவ விசாரணை	ஆன்ம விசாரணை
6. நடத்தை	மிருகத்தொழில்	சுயநலம்	பரநலம்	கடவுளுக்கு ஈடு (அர்ப்பணம்)
7. செய்கை	தீவினை	தீவினை + நல்வினை	நல்வினை	தியாகம்
8. சிரத்தை	உரிமை	உரிமை + கடமை	கடமை	சேவை

படம் 1.

ஆன்மயாத்திரை
ஒருபிறப்பிலிருந்து அடுத்தபிறப்புக்கு



படம் 2.

அப்படி மூன்று லோகத்தில் வாசம் பண்ணவந்த உயிர் (ஆன்மா) அந்த லோகங்களின் தன்மைகளைக் கிரகித்து சம்பத்துகளை அடைந்து, பிறகு அவை அநித்தியம் அசத்தியம் என அறிந்து அவைகளிடம் பற்றறும். மூன்றுலோக சம்பத்துகளை அடைய ஆசையுள்ள ஜென்மங்களெல்லாம் பிரவிருத்தி மார்க்கமெனவும், அவைகளினின்றும் பற்று ஒழியும்படி வாழும் ஆசையற்ற ஜென்மங்களெல்லாம் நிவிருத்தி மார்க்கமெனவும் சொல்லப்படும்.

7. ஒரு ஜன்மத்தில் ஒருவன் (1) முதலில் சிறு பிள்ளையாக இருந்து படிக்கவும் உழைக்கவும் பிரீதியின்றிச் சோம்பலும் அறிவீனமும் மிகுந்து விளையாடுகிறான். (2) பிறகு வாலிபப்பருவ மடைந்து காமமும் கோபமும் மிகுந்து பல துறைகளில் தீவிரமாய் ஓடுகிறான். (3) பிறகு உலக அனுபவமும் அறிவும் வளர்ந்து நிதானமாக அடக்க ஒடுக்கத்துடன் வாழ்வான். (4) கடைசியாக வயது முதிர்ந்து பேரன் பேத்திகள் வளர்ந்தபோது அவர்களுக்கெனவே தன் சிரமம் அறியாது உழைப்பன். அல்லது சிலர் உலக நன்மைக்காக சகலமும் துறந்து, உலகில் உள்ள ஜீவராசிகளைத் தன் பந்துக்களாக ஏற்று அன்பின்வழி நடப்பார்கள்.

8. இங்ஙனமே மானிட ஜென்மமெடுத்த உயிர் (ஆன்மா) (1) முதலில் அறிவீனம் (அவித்தை) சோம்பல் (தாமசம்) மிகுந்து நடக்கும். இதற்கு உதாரணம்: காட்டிலும் ஆப்பிரிக்கா அமெரிக்கா முதலிய தேசங்களிலும் உள்ள புராதன ஜனங்கள் போன்று தேகப்பசி, நித்திரை நிமித்தம் எத்தீவினையும் செய்யக்கூடியவர்களாய மிருகத்தன்மையே மிகுந்த மூர்க்கர்கள். (2) பிறகு உலகத்தில் உள்ள வஸ்துக்களிடத்து மோகமுண்டாகி அதற்காகப் பல துறைகளில் தீவிரமாய் (ராஜசம்) திரிந்துவரும். உதாரணம்:—இரவு பகல் ஒழியாது தொழிலிலும் சம்சாரத்திலும் உழன்று சுழல்பவர்களான தற்கால நாகரீகத்தவர்கள் அனைவரும் இத்தகையவர்களே. (3) அதன்மேல் உயிர் தான் சென்ற துறைகளில் தட்டுப்பட்டு எது நல்லகாரியம் எது கெட்டகாரியமென்ற பகுத்தறிவுவந்து சாந்தமடைந்து நிதானத்துடன் (சத்துவம்) உலகில் வாழும். சுயநலத்துக்கும் பிறர் நலத்துக்குமாகவே, இத்தகைய ஆன்மாக்கள் உழைக்கும். உதாரணம்:—தத்துவ ஆராய்ச்சி, சாஸ்திர விசாரணை, இலக்கண இலக்கியத் தேர்ச்சியுடையவர்கள் இத்தகையராவர். (4) அந்தியத்தில் தன்நலத்தைக் கிரமமாகத் துறந்து பிறர் நலமும் உலகப்பொது நன்மையும் மிகுந்து உடல் பொருள் ஆவி அனைத்தையும் அவ்வழியில் செலவிட்டு மனம் வாக்குக் காயங்களால்

ஆசையற்ற (நிர்க்குணம்) ஈசுவரக் கைங்கரியத்தில் ஈடுபடும். உதாரணம்:— அனுபவ அறிஞர்கள், ஞானிகள், என்ற சற்குருவை சரணமடைந்தவர்.

முதல் இரண்டு தரத்தாரும் பிரவிருத்தி மார்க்கத்திலும், பின் இருவரும் நிவிருத்தி மார்க்கத்திலும் உள்ளவர்கள்.

புருஷார்த்தம்.

ஈதலறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்து ஒருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

குறிப்பு:—ஈட்டல் - சம்பாதித்தல்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும் காதல் - அன்பு; ஆதரவு - துணை; பரன் - கடவுள்; வீடு - மோக்ஷம்.

9. மனுஷ ஜன்மம் எடுத்தவர்களாகிய நாம் தேடும் திரவியம் புருஷார்த்த மெனப்படும். இவை தருமம் அர்த்த காம மோக்ஷம் அல்லது அறம் பொருள் இன்பம் வீடு என்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கூறிய முறையில் ஆன்மா குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி இவைகளை அடையமுடியும்.

குணத்தின் தொழில்.

10. குணங்கள் மூன்றுவகை:—

நாம் ஒவ்வொருவருக்கும் இயற்கை சுபாவம் உண்டென்பது யாவருக்கும் தெரிந்தது. இவ்விதமான நமது குணங்களெல்லாம் மூன்று பிரிவுகளுக்கு உட்படும். அவையாவன:— (1) தமோகுணம் (2) ரஜோகுணம் (3) சத்துவகுணம்.

தமோகுணம் அறிவில்லாமையால் உண்டாகி நம்மை மயங்கும்படிச் செய்து அஜாக்கிரதை, சோம்பல், தூக்கம் என்றவைகளுக்கு நம்மை அடிமையாக்குகிறது.

ரஜோகுணம் சகல ஆசைகளுக்கும் காரணமாய் நின்று கொண்டு பலவித தொழில்களிலும் நம்மை முயற்சி செய்யத் தூண்டுகிறது.

சத்துவகுணம் பரிசுத்தமும் பிரகாசமுமாய் நின்று, துன்பத்தைச் செய்யாமல் அறிவிலும் சுகத்திலும் நம்மை செலுத்துகிறது.

இம்மூன்று குணங்களும் எல்லாரிடத்திலும் இருக்கின்றது; ஒவ்வொரு குணம் ஒவ்வொரு சமயத்தில் அதிகமாகவும்

மற்ற குணங்கள் குறைந்தும் நடக்கும். எந்த குணம் அதிக மாக ஒருவரிடம் இருக்கிறதோ, அனேக சமயங்களில் காணுமோ, அதற்குத் தக்கபடி அவரவர்களுடைய நடை உடை பாவனை முதலிய ஒழுக்கங்கள் அமையும்.

தமோகுணம் மேலிட்டால் பகுத்தறிவு இல்லாமை, செய்யவேண்டிய காரியத்தை செய்ய முயற்சி இல்லாமை, மறதி, சோம்பல், தூக்கம், மயக்கம், அஜாக்கிறதை அதிகமாகின்றன.

ரஜோகுணம் மேலிட்டால் ஓய்வு ஒழிவு இல்லாமை, திருப்தி இல்லாத பேராசை, காரியங்களில் பிரயாசைப்படுதல் லோபத்தனமாக இருத்தல் முதலியவை ஏற்படும்.

சத்துவகுணம் ஒருவரிடம் மேலிட்டால் அவர் காரியா காரியங்களின் உண்மையை அறிவார். அவருடைய பார்வை யிலும், பேச்சிலும், கேள்வியிலும் சகல காரியங்களிலும அறிவு பிரகாசமாகும்.

11. குணம் எவ்விதம் தொழில் செய்கிறதென:—

	தமஸ்	ரஜஸ்	சத்துவம்
எவ்வுணவு பிரியம்? [கீதை 17 (8-10)]	ஊசினதும், ரச மற்றதும், பழைய தும், அசுத்தமா னதுமானவைகள்	கசப்பு, புளிப்பு, உப்பு, உறைப்பு, சூடு உள்ளது மானவைகள்.	ஸ்திரத்தையும், ஆரோக்கியத்தை யும், சுகத்தையும் தரக்கூடியவைகள்

	தமஸ்	ரஜஸ்	சத்துவம்
எவவித செய்கையை நம்மை செய்யத் தூண்டும்? [கீதை 18 (20-28)]	பின் விளையக் கூடியவற்றையும், இதரர்களுக்கு உண்டாகும் கெடுதியையும் ஆலோசியாது மயக்கத்தால் ஏற்பட்டவைகள்.	பலாபேக்ஷை, அகங்காரம், மிக்க சிரமமும் கூடிய வைகள், சுக துக்கத்துக்கு ஈடு பட்டவைகள்.	பலாபேக்ஷை, விருப்பு, வெறுப்பு அகங்காரம் இல் லாததும், உறுதி யும், நம்பிக்கை யும் கூடியது மானவைகள்.

நாம் திருந்தி வளருவது.

12. தமோகுணம் உள்ளவர் தனக்கும் பெண்சாதி பிள்ளை களுக்கும் பொருள் வேண்டுமென்று ஆசைப்பட்டு சோம்பல் தூக்கம் மறதி முதலியவைகளை விட்டு சுருசுருப்பாகிறார். ரஜோ குணம் உள்ளவர் பேராசையாலும் லோபத்தாலும் ஓய்வு ஒழிவு இன்மையால் வரும் துக்கத்தைக்கண்டு சாந்தி சுகமடைய விரும்பி சத்துவ குணமுடையவராகுவார். சத்துவகுணத்தவர் தன் நலம் விட்டு பிறர் நலம் தேடி பரோபகாரம் செய்வர்.

13 இக்குணங்கள் நம்மில் ஒரே கணக்காய் பிரவிருத்திப்ப தில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயங்களில் அதிகமாயும் குறைந்தும் காணும். எது அதிகமாகவும் அதிக காலமும் நடைபெறுகிறதென்று பக்ஷபாதமின்றி நம்மைப் பகுத்துப் பார்க்க நமது நிலை ஒருவாறு நமக்கே தெரியலாம். அதன் பயனாக மேல் நிலைக்கு வேண்டிய குணங்களை அடையக்கூடும். காமத்தினால் தாமசகுணத்தோர் ராஜச குணமடைவார்கள்; துக்கத்தினால் ராஜசகுணத்தோர் சத்துவ குணமடைவார்கள்; சத்துவ குணமுடையவர்கள் சாந்தத்தையும் ஆனந்தத்தையும் அபேக்ஷித்து நிர்க்குணராகி மோக்ஷமடைவார்கள். நிர்க்குண ராகி யென்றால் குணமில்லாமல் என்றல்ல; தேகத்தின் குண வசப்படாது ஆன்ம அறிவுடன் வாழ்தல்.

சமய ஆசாரம்.

14 ஒவ்வொருவனுடைய சமயாசாரம், அவனுடைய குணத்தையும் ஆன்ம விருத்தியையும் பொறுத்துள்ளது. நமது சமயாசாரம் நாம் அறிந்தும் அறியாமலும் நம்மைச் சீர்படுத்திவருகிறது. நமக்குள்ள அந்தரங்க மனோநிலையின்படிதான் நம்முடைய ஈசுவரவழிபாடு, தானம், தருமம், விரதம், தபசு, தியாகம் அமையும்.

	தமஸ்	ரஜஸ்	சத்துவம்
1 எவர்களைப் பூசிப்பார்கள்? கீதை 17(4)	பிரேத பூத கணங்களை	தனாதிபதிகளை, மந்திரசக்தியுள்ளவர்களை	தேவர்களை,
2 எவ்விதம் தபசு செய்வார்கள்? [கீதை 17 (17-19)]	தன்னை ஹிம்சித்துக்கொண்டும், மற்றவர்களுக்குக் கெடுதி விளைக்கக்கருதியும்.	டம்பத்திற்காகவும், மதிப்புக்காகவும், உறுதியற்றதும், சஞ்சலமுள்ளதும்.	சிரத்தையோடும், பலாபேக்ஷையின்றியும், ஒரு வழிப்பட்ட மனதுடனும்.
3 எவ்விதம் தானம்செய்வார்கள்? [கீதை 17 (20-22)]	தகாத கால தேசத்தில், தகாத பாத்திரனுக்கு, அவமதிப்போடு.	பிரதி உபகாரம் கருதி மனவருத்தத்தோடு.	பிரதி உபகாரம் கருதாது தகுந்த காலதேசத்தில் தக்கபாத்திரவானுக்கு பக்தி விசுவாசத்தோடு.

15 நாம் உண்மையாக சமயாசாரத்தில் விருத்தியடைய தத்துவ விசாரணை ஏற்பட்டு ஆன்ம வித்தையில் பிரவேசமாகி ஆன்ம விசாரணை ஏற்படும். ஆதலின் சமய மதங்களின் உட்

பொருளை உணர்ந்து அடிப்படிகளைக் கிரமமாக விட்டு மேற்படியான அன்பும் அருளும் நிறைந்த சமரச நிலையை அடைவோம்.

"வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில்
மாறுபடும் கருத்தில்லை."

"யாவையும் வகுத்துகல் அறிவையும் வகுத்துமறை யாதிநூலையும்
வகுத்துச்
சைவமுதலா அளவில் சமயமும் வகுத்துமேற் சமயங்கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னைநான் அணுகவுந் தண்ணருள் வகுக்க
வில்லையோ!"

16. இந்த மூன்று குணங்களையும் தாண்டின ஞானி நல்லது கெட்டது ஆன எதுவரினும் அதை வெறுக்காமலும் விரும்பாமலும் அதை அனுபவிப்பார். அவ்விதமே ஞானி எது போகினும் துக்கப்படாது இருப்பார். மான அவமானத்திலும், சத்துருமித்திரரிடத்திலும், சுகதுக்கத்திலும் சமத்துவ புத்தியோடு இருந்து கடவுளிடத்து பக்தி பாராட்டுவர்.

ஆனந்த வாழ்வே அழகிய முத்தி.

17. ஆன்ம வளர்ச்சி நாம் உயிர் வாழும் ஒவ்வொரு நிமிஷத்திலும் நமது வாழ்க்கையில், மனம் வாக்குக் காயத்தில், அமைந்துகொண்டே இருக்கிறது. உயிர் வாழும் ஒரு சிறு காலத்தையும் வீண்போக்காது பயன் படுத்துவது அதிக அவசியம் ஒவ்வொரு விநாடியும் எல்லா செல்வத்தையும்விட அருமையானது; கிடைப்பதற்கு அரியது.

தேடப்படும் பொருளைச் சிக்கனமாகப் புதைத்து
கோடிக்கொரு நிமிடம் கொள்ளுகினும்—கூடாத
வாழ்நாளை வீண்கழிக்கும் மானிடரைப் போல்மயக்கம்
பூணுர் பொய்கண்டு துறந்தோர்.

18. சமத்துவ புத்தியோடும், சமரச பக்தியோடும் தன் நலம் கருதாது பொதுநலம் கருதி உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்து வாழ்தலே ஆனந்த வாழ்வு; அதுவே உண்மையில் முத்தி, மோக்ஷம், வீடு.

ஈதல் இசைபட வாழ்தல் அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

குறிப்பு:—ஊதியம்—லாபம். உயிர்—ஆன்மா.

அத்தகைய நல்வாழ்வை நாம் எல்லோரும் அடையும்படி இறைவன் அருள்செய்வானாக!

இதன் பொருளை விரிவாக அறிய விரும்புபவர்கள் படிக்கவேண்டிய புத்தகம்:—**பகவத்கீதை.**

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1

சமயமும் ஒழுக்கமும் 10

ஸ்தூல சூக்ஷ்ம காரண தேகங்கள்.

ஆசிரியர்:— ஏ. ரேங்கசாமி அய்யர், பி. ஏ. பி. எல்.
ஹைகோர்ட் வக்கீல், மதுரை.

குறிப்பு:-- இப்புத்தகத்தில் உள்ள "ஆன்மவளர்ச்சி" என்ற உபந்நியாசத்தின் 3-வது பக்கம் அடியில் உள்ள படத்தைப் பார்க்கவும்.

1. ஆத்மா.

மானிடர்களில் ஒவ்வொருவருக்கும் 'நான்' என்ற அறிவுண்டு. மிருகங்களில் 'நான்' என்ற அறிவு இல்லாதபோதிலும் சீதோஷ்ண சுக துக்கங்களை உணர்வதற்கும் அனுபவிப்பதற்கும் சுகத்தை நாடுவதற்கும் துக்கத்தை விலக்குவதற்கும் உரிய அறிவு இருக்கின்றது. அதுபோலவே புல் பூண்டுகளிடத்திலும் ஓர் அறிவு காணப்படுகிறது. கல், மண், போன்ற தாது வர்க்கத்திலும் அறிவு உண்டென்று ஞானிகளும், சாஸ்திரக்ஞர்களும் கூறுகின்றனர். இவ்வித அறிவிற்கு காரணமான பொருள் ஆத்மா என்று சொல்லப்படுகின்றது. அவ்வாத்மாவானது எல்லோரிடத்தும் அந்தரங்கமாக விளங்குகின்றது.

2. ஏழு உலகங்கள்.

அந்த ஆத்மாவானது அதற்குள்ளடங்கி நிற்கும் சக்திகளோடு வெளித்தோன்றுவதற்குச் சாதனமாயுள்ள உலகங்களை மொத்தமாக பிரபஞ்ச மென்று சொல்லுவார்கள். அந்த பிரபஞ்சத்தில் நம்முடைய திருஷ்டிக்குத் தெரிந்ததாயும் அத் திருஷ்டிக்குப் புலப்படாததுமாகிய ஏழு உலகங்கள் உண்டு. அந்த ஏழு உலகங்களில் நமது கண்களுக்கு வெளிப்படையாகத் தோன்றுவது இந்த பூலோகம். இந்த பூலோகத்தின் ஓர் பாகம் நமது பாரத பூமியாகிய இந்தியா தேசம். அதில் ஓர் பாகம் சென்னை ராஜதானி. அதில் ஓர் ஜில்லாவாகிய தஞ்சாவூர் ஜில்லாவில் நாம் கூடி இருக்கும் மன்னார்குடி இருக்கின்றது. இப்பூலோகத்தில் நமது கண்களுக்கு வெளிப்படையாகத் தோன்றாத பாகங்கள் இருக்கின்றன. பூலோகத்தைத் தவிர இன்னும் நமது பார்வைக்குத் தோன்றாத ஆறு உலகங்கள்

இருக்கின்றன. அவைகள் நம்முடைய பூர்வீக நூல்களில் புவர் லோகம், ஸ்வர்க்கலோகம், மகர்லோகம், ஜனோலோகம், தபோ லோகம், ஸத்தியலோகம் என்று சொல்லப்படுகின்றன. இந்த ஏழு லோகங்களில் நான்கு கீழ் லோகங்களாகிய பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகம், மகர்லோகம், என்ற 4 லோகங் களை நாம் இச்சமயம் கவனித்தால் போதுமானது. அந்த உலகங்கள் எல்லாம் ஜலத்தில் உப்பு, சக்கரை, முதலிய பதார்த் தங்கள் கலந்து ஒன்றோடொன்று ஊடுருவி நிற்பதுபோல் ஒன்றோடொன்று கலந்து நிற்கின்றன.

3. சரீரங்கள்.

(i) ஸ்தூலசரீரம்:-- அந்த 'நான்' என்ற ஆத்மாவானது இப்பூலோகத்தில் தோன்றி அந்த உலகத்தின் வஸ்துக்களோடு கலந்து அந்த உலகத்திற்குரிய காரியங்களில் வேலைசெய்வதற்கு அதற்கு இப் பூலோகவஸ்துக்களால் அமைக்கப்பட்ட உடல், தேகம், சரீரம், என்ற பல பெயர்களால் கூறப்படுகிற ஓர் கருவி யானது அவசியமாயிருக்கின்றது. அந்த சரீரமானது நம்மு டைய திருஷ்டிக்கு வெளிப்படையானது. அக்காரணத்தால் அதை ஸ்தூலசரீரமென்று கூறுகின்றனர். அந்த சரீரத்தில், இப்பூலோகத்திலுள்ள வஸ்துக்களை நுகருவதற்கு ஐந்து இந்திரியங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. கண்களால் பார்க்கிறோம். செவிகளால் கேட்கிறோம். மூக்கினால் முகர்கி றோம். நாக்கினால் ருசிபார்க்கிறோம். சரீரத்தின் வெளிப்பிர தேசமாகிய தோலினால் தொட்டு ஸ்பர்சிக்கிறோம். இந்த ஐந்து இந்திரியங்களையும் அறியும் இந்திரியங்கள் அல்லது ஞானேந்திரியங்களென்றும் கூறுகிறார்கள். இதுபோல் கை கால் முதலியவைகளை காரியம் செய்யும் இந்திரியங்களாகிய கர்மேந் திரியங்கள் என்று சொல்லுகிறார்கள். இப்பூமியில் ஒருவன் பிறந்து வாழ்ந்து வந்து இறப்பதற்குள் அதாவது அவனது வாழ்நாட்களுக்குள் இப்பூமியில் வாழ்க்கையிலிருந்து உயர் வான பிரயோஜனத்தை அவன் அடையவேண்டுமானால் அதற்கு முதன்மையான ஸாதனம் ஸ்தூல சரீரமேயாகும். அவனது இந்த ஸ்தூல தேகத்தை அவன் பெற்றோர்களிடமிருந்து அடைந்தபோதிலும் அப்பரம்பரையின் காரணத்தால் அதில் சில குறைவுகளும் சில வியாதிகளின் மூலங்களும் சில சமயங் களில் ஏற்படக் கூடியதாயிருந்தாலும், பெரும்பாலும் அச்சரீ ரத்தை இப்பூலோக நல்வாழ்க்கைக்குரிய ஒரு உத்தமமான கருவியாகச் செய்ய ஒவ்வொருவருக்கும் சாத்தியமான காரிய மாகும். அச்சரீரத்தை உயர்வுற்ற நிலையில் வளர்த்து பாதுகாப் பதற்குரிய விஷயங்கள் எவை என்று நம்மால் விசாரிக்கத்தக் கது.

ஆகாரம்.

முதலாவது ஆகாரமாகும். நாம் உட்கொள்ளும் ஆகாரத்தால் நம்முடைய சரீரமானது போஷிக்கப்பட்டு வளர்கின்றது. உணவுப் பொருள்களின் தாதுக்கள் நம்முடைய சரீரத்தில் உண்டாகும் ஜீரணம் முதலிய சக்திகளால் ரத்தம், தசை, நரம்பு, எலும்பு முதலியவைகளை உண்டுபண்ணும் அம்சங்களாக மாறி சரீரத்தை போஷிப்பதற்கும் சரீரத்தில் இடைவிடா நிகழ்ந்து கொண்டிருக்கும் சேதங்களுக்கும் நஷ்டங்களுக்கும் பதிலாக பர்த்தி செய்து அச்சரீரத்தை வளர்ப்பதற்கும் இன்றியமையாத சாதனங்களாகவிளங்குகின்றன. அவைகளைப் பற்றி விரிவாக 'உணவு பானம்' முதலிய பாடங்களில் கூறப்படும். இச்சமயத்தில் பொதுப்படையாக நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அம்சங்கள் யாவை என்று விசாரிக்கத்தக்கது. நமது இந்திய தேசத்தில் பூர்விக காலமுதல் கூடியமட்டும் மாமிச போஜனத்தை விலக்கவேண்டுமென்றும், மரக்கறி பதார்த்தங்களை உட்கொள்ள வேண்டுமென்றும் விதிக்கப்பட்டுவரும் முறையின் காரணத்தை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். மிருகங்களையும் பிராணிகளையும் வதை செய்துகொன்று அதின் பிறகு அவைகளின் சரீரங்களிலிருந்து உண்பதற்குரிய மாமிசம் கிடைப்பதால், அம் முறையானது அஹிம்சை என்ற தர்ம முறைக்கு விரோதமென்பது ஒரு காரணமாகும். அதுமாத்திரம் காரணமல்ல. மாமிச பக்ஷணத்தால் நம்முடைய சரீரத்தில் அமையும் அணுக்களும் தாதுக்களும் ஓர்வித தடிப்போடு கூடினவைகளாய் அச்சரீரத்தைக் காமக்குரோதங்களுக்கு வசப்படுத்தியும், அதே காரணம்பற்றி அச்சரீரத்தின் மூலமாய் இவ்வுலக வாழ்க்கையில் கீழ் நிலைபற்றி இயங்கும் மனோபாவங்களாகிய சாந்தமின்மை, குரூரம், சுயநலம், பொறாமை, முதலிய தீய குணங்களை ஆதாரமாகக்கொண்ட பிரவிர்த்திகளால் கட்டுண்டு நிற்பதற்கும் காரணமாகும்.

பானம் முதலியன.

அதுபோலவே அபின், கஞ்சா, முதலிய லாகிரி வஸ்துக்களை உட்கொள்ளுதல் புத்தியைத் தெளிவாயும் நிர்மலமாயும் வைக்காமல் மயங்கி குழப்பமுற்று நிற்கும்படி செய்யக்கூடியது. நமது ஸ்தூல சரீரத்தை சுத்தமாய் செய்வதற்கு நாம் உட்கொள்ளும் ஆகாரம் முக்கியமானது. அதுபோலவே நாம் உட்கொள்ளும் பானத்தை நாம் நன்கு கவனிக்கவேண்டியது. நமது பூர்விக நாகரீகத்தில் கள், சாராயம் முதலிய பானங்களை தீவிரமாய்க் கண்டனம் செய்திருக்கிறார்கள். ஏனெனில், அவைகளைக் குடிப்பதினால் நமது ஸ்தூல சரீரத்தில்

நரம்பு சம்பந்தமான ரோகங்கள் உண்டாவது மல்லாமல் புத்தி தெளிவை இழந்து சரீரமானது மேன்மையான சிந்தனைகளுக்கு தகுதியில்லாமல் போய்விடுகின்றது. மேற் றிசையிலிருந்து நமது தேசத்தில் வந்திருக்கும் நாகரீகத்தில் மது, மாமிசம் முதலியவைகள் விலக்கப்படவில்லையாயினும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சைவ போஜனமும் மது விலக்கும் இந்நவீன காலத்தில் மேன்மேலும் அதிகரித்து வருவதே அவைகளின் மேன்மைக்கு ஓர் அத்தாக்ஷியாகும். புகையிலை பூர்வீக காலத்தில் நமது தேசத்தில் உற்பத்தியாகவில்லை. நடுவில்தான் இத் தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டு சாகுபடியாகி வருகின்றது. அப்புகையிலையை சிலர்கள் வாயில்போட்டு மென்று தின் கிறார்கள். அதின் புகையை சுருட்டு ஸிகரெட்டு முதலிய பக்குவ ரூபங்களால் குடிக்கிறார்கள். இன்னும் சிலர்கள் அதை மூக்குத் தூளாகப் பொடி செய்து உபயோகிக்கின்றனர். புகையிலையில் உள்ள சாரம் விஷ வஸ்துவாய் இருப்பதால் அப் புகையிலையை எந்த ரூபத்திலும் உட்கொள்ளாதிருத்தல் மிகவும் மேன்மையானது. காப்பிக்கொட்டை தேயிலை முதலானவை மேற்சொல்லிய வஸ்துக்களைப்போல் அவ்வித கெடுதல்களை உண்டுபண்ணுதபோதிலும் அவைகளும் தேக ஆரோக்கியத்திற்கு தடையானவைகள். அவைகளை விலக்குவதும் உசிதமேயாகும். ஸிகரெட்டு குடிக்கும் வழக்கமானது வாலிபர்களுக்குள் மற்ற தேசங்களில் பரவியிருப்பதுபோல் நமது தேசத்திலும் பரவி வருகின்றது. அதைத் தடுப்பதற்கு ராஜாங்கத்தாரும் பற்பல தேசங்களிலும் முயன்று வருகிறார்கள். அதுபோலவே பெற்றோர்களும் ஜன சமூகங்களும் முயற்சிக்க வேண்டும்.

காற்று.

ஆகாரம் பானம் எவ்வாறு சுத்தமாயிருத்தல் வேண்டுமோ அதுபோல நாம் சுவாசிக்கும் காற்று சுத்தமாயிருக்க வேண்டும். நமது பாரத பூமியில், முன்காலத்தில் பெரிய நகரங்கள் சொற்பமாகவே இருந்தன. இக்காலத்திலும் இந்தியர்கள் பெரும்பாலும் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். ஆனால் பெரிய நகரங்கள் அதிகரிக்கவே கிராமங்களிலுள்ள ஜனங்கள் பிழைப்புக்காகவும், தொழிலுக்காகவும், கல்வி கற்பதற்காகவும் இன்னும் பலவித காரணங்களுக்காகவும் நகரங்களை நாடி குடியேறுகின்றனர். நகரங்கள் ஜனப் பெருக்கத்துடன் கூடினவைகளாகவும் அவ்விடத்தில் ஏற்பட்டிருக்கும் வீடுகள் நெருக்கமாகவும் சுத்தமான காற்றோட்டமற்றும் இருக்கின்றன. இக்காரணத்தால் அவைகளில் குடியிருக்கும் ஜனங்கள் சுத்தமான காற்றை சுவாசிக்க இடமில்லாமற்போய் சுவாஸ சம்பந்த

மான ரோகங்கள் தொத்து வியாதிகள் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு பலஹீனர்களாகவும், அற்ப ஆயுள் உள்ளவர்களாகவும் ஆகிறார்கள். கிராமங்களும் சுத்தமில்லாமல் இருக்கின்றன.

சரீரப் பயிற்சி.

மேற்சொல்லிய சாதனங்களோடு சரீரப் பயிற்சி இல்லாமற்போனால் ஸ்தூல தேகத்தை ஆரோக்கியமான நிலையில் வைத்துக்கொள்வது அரிது. தினந்தோறும் சரீரப் பயிற்சி பால்யத்திலும், யௌவனத்திலும், மத்திய வயதிலும், முதுமையிலும் செய்வது அவசியமாகும். அப்பயிற்சியை இந்துக்கள் கவனியாமல் வாழ்வதுபோல் மற்ற ஜாதியார்களுக்குள் நிகழ்வதில்லை. இந்தியா தேசத்தில் சராசரி வாழ்நாளானது சுமார் 22 வயதாகும். இங்கிலாந்திலோ சுமார் 50 வயதாகும். நீயூஸீலண்டில் சுமார் 65 வயதென்று சொல்லுகிறார்கள். நாம் இவ்வித கீழ்நிலையிலிருப்பதற்கு முக்கிய காரணம் ஸ்தூலதேக ஆரோக்கிய விதிகளை கவனியாமல் வாழ்வதுதான்.

மற்ற சாதனங்கள்.

மேலும் உயர்வான சிந்தனைகளுடன் கூடி இருத்தலும் மனதை சாந்த நிலையில் வைத்தலும் தேக ஆரோக்கியத்திற்கு சாதனமாகும்.

(ii) சூக்ஷ்மகாரண சரீரங்கள்:-இதுவரை ஸ்தூல சரீரத்தைப்பற்றி விசாரித்தோம். இதைத் தவிர நமது ஸ்தூல திருஷ்டிக்குப் புலப்படாத பற்பல தாரதம்மியமுள்ள சூக்ஷ்ம தேகங்கள் இருக்கின்றன. அவைகளில் கீழானது இப்பூலோகத்தில் நாம் உயிருடன் இருக்கும்வரை நமது ஸ்தூல சரீரத்திற்கு உயிரைக்கொடுத்து பூலோக அதிநுட்ப பிரகிருதி விசேஷங்களால் அமைக்கப்பட்ட பிராண சரீரமாகும். இப்பூமியில் நாம் உயிருடன் வாழுங்காலத்தில் அச்சரீரமும் ஸ்தூல சரீரமும் சாதாரணமாய் பிரிவற்றுக் கூடிநிற்கும். மயக்கத்திலும் ரண வயித்தியர்கள் "குளோரபாரம்" முதலிய பதார்த்தங்களை முகரும்படி செய்யும்போதும் அப்பிராண சரீரமானது ஸ்தூல சரீரத்தைவிட்டு விலகி நிற்கும். அப்போது ஸ்தூல சரீரமானது ஸ்மரணையற்றுவிடும். மரணகாலத்தில் அப்பிராண சரீரமானது ஸ்தூல சரீரத்தைவிட்டு ஸ்திரமாய்ப் பிரிந்து போகும். பிராண சரீரத்தைக்காட்டிலும் சூக்ஷ்மமாய் உளது காமசரீரம். அது புவர்லோக தாதுக்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய கிரியைகளுக்கு எவ்வாறு ஸ்தூல சரீரம் ஆதாரமாய் இருக்கின்றதோ அதுபோல நமது சகல உணர்வுகளுக்கும் இச்சைகளுக்கும் நமது காம சரீரமானது

காரணமாய் இருக்கின்றது. நாம் சுத்தமான அன்னபானுதிகளை உட்கொண்டும் சுத்த காற்றை சுவாசித்தும் ஓர் ஆரோக்கியமுள்ள ஸ்தூல சரீரத்தை போஷித்து வளர்த்து வரக்கூடுமோ அதுபோல கருணை, அன்பு, தியாகம், தேசாபிமானம் முதலிய உத்தம மனோபாவங்களாலும் அம்மனோபாவங்களை ஆதாரமாகக்கொண்ட செய்கைகளாலும் அக்காம சரீரமானது பெருக்கம், அழகு, வன்மை, உயர்தர வர்ணங்களமைந்த தேஜஸ், முதலிய லக்ஷணங்களைப்பெற்று அவைகளுக்குரிய குணங்களுக்காக, அச்சரீரத்தைப்பெற்ற புருஷன் மற்ற ஜனங்களால் நன்கு மதிக்கப்படுகிறான். அந்தக் காம சரீரத்தைக் காட்டிலும் சூக்ஷ்மமான சரீரமானது ஸ்வர்க்கலோக தாதுக்களால் அமைக்கப்பட்ட மனோசரீரம். மனதை நம்முடைய பூர்வ நூல்களில் ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஆகிய இவைகளுக்கு வேறான 11-வது இந்திரியமாகக் கூறுவதுண்டு. உணர்ச்சிக்கும், இச்சைக்கும் எவ்வாறு காம சரீரம் காரணமாய் இருக்கின்றதோ அதுபோல நம்முடைய சிந்தனைக்கு மனது ஓர் கருவியாகும். நாம் மனது என்ற கருவியை மேன்மையாகச் செய்வது ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும். கல்வியால் மனதைப் பயிர்சி செய்து ஒவ்வொரு காரியத்தை நன்றாக நிறைவேற்றுவதற்கு அம்மனதானது முன் பின் யோஜனை செய்து அதற்கு ஏற்ற முயற்சிகளைத் துடங்கி கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு அம் முயற்சிகளைப் பொருந்தும்படி செய்வதற்கு அம்மனதை உபயோகப் படுத்துவதினாலேயே அம்மானஸ சரீரமானது அளவிலும், தெளிவிலும், வன்மையிலும், மேன்மைபெற்று, நேர்மை சக்தியம் முதலிய குணங்களால் உண்மையை அறியும் சக்தியிலும் சிறப்படைகின்றது. நாம் உயிருடன் வாழுங் காலத்தில் இக்காம சரீரமும் மனோசரீரமும் ஒன்றோடொன்று கலந்து நாம் எதை விரும்புகின்றோமோ அதை நோக்கி அடைவதற்கு நமது மனது ஆலோசனை செய்து இரண்டு சரீரங்களும் ஒன்று கூடி ஒரே சரீரம்போல் நிற்பதால் அவ்விரண்டு சரீரங்களையும் மனோமய சரீரமென நமது பூர்வீக நூல்களில் கூறுவதுண்டு. இவ்விதமாக மேற்கூறப்பட்ட ஸ்தூல சரீரம், பிராண சரீரம், காம சரீரம், மனோ சரீரம் முதலிய நான்கு சரீரங்கள் ஒவ்வொரு ஜென்மத்திற்கும் நூதனமாய் அமைக்கப்பட்டு அந்த ஜன்மத்தில் நம்முடைய கிரியை, இச்சை, சிந்தனை முதலியவைகளால் மேல்நிலை கீழ்நிலை பெற்று மறுபடியும் அடுத்த ஜென்மத்தில் அந்தமேல் நிலை அல்லது கீழ்நிலைக்குத் தக்கவாறு நூதனமாய் அமைக்கப்படுவதுமல்லாமல் நமது ஸ்தூல பிராண சரீரங்கள் பிராரப்த கர்மத்திற்குட்பட்டு நிற்கின்றன. ஆனால், ஜென்மந்தோறும் அழியாது மென்மேலும் வளர்ச்சிபெற்று நிற்

பது மகர்லோக தாதுக்களால் அமைக்கப்பெற்ற ஞானசரீரம். அதை சிலர்கள் காரண சரீரமெனக் கூறுவர். அது ஆத்மாவின் உறைவிடமாகும். அந்தச் சரீரமானது ஆழ்ந்த சிந்தனை உயர்ந்த பக்தி, உயர்ந்த நோக்கம், மெய்யறிவு முதலியவைகளால் அளவிலும் பிரகாசத்திலும் வன்மையிலும் மேன்மையடைந்து ஜென்மந்தோறும் அபிவிர்த்திபெற்று ஞானம், அன்பு, உறுதி முதலிய குணங்களால் விளங்கி நிற்கின்றது. அது ஒரு ஜென்மத்திற்கும் மறு ஜென்மத்திற்கும் ஊடே தொடர்ந்து நிற்கும் பாலம்போன்றது. ஒரு மனிதன் பல ஜென்மங்களில் நிகழ்ந்த சகல அனுபவங்கள் மூலமாய் சம்பாதித்துள்ள எல்லாச் சக்திகளும் அந்த ஞான சரீரமென்ற காரண சரீரத்தில் அடங்கி நிற்கின்றன. அவனை நல்ல வழியில் தூண்டி கெட்ட வழிகளில் போகாமல் தடுத்து நிற்கும் அவனது மனச்சாக்ஷி என்று சொல்லப்படும் அவனது உயர்வுற்ற பிரக்ஞையும் அந்த சரீரத்தின் சக்தியாக விளங்குகின்றது.

முடிவுரை.

இவ்வாறு நமது ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் யாவை என்று தெரிந்துகொண்டு அவைகள் எவ்வித ஸ்தூல சூக்ஷ்ம பதார்த்தங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அவைகளை நமது கருவிகளைக்கொண்டு அந்தரங்க ஆத்மாவானது அந்தந்த சரீரங்களுக்குரிய உலகங்களில் வெளித்தோன்றி பிரவிர்த்தித்து நிற்கின்றனவென்றும் நாம் லோகங்களிலெல்லாம் ஜென்மங்கள்தோறும் வாழ்வதினால் அந்த சரீரங்களை மென்மேலும் நமக்கு உபயோகமுள்ள கருவிகளாகச் செய்து அவைகளின் மூலமாய் அந்த ஆத்மாவின் அந்தரங்க சக்திகளை அபிவிர்த்திசெய்யவேண்டுமென்றும் அந்தந்த சரீரங்களை அபிவிர்த்தி செய்வதற்குரிய நியமங்களும் வழிகளும் எவை யென்றும் நாம் தெரிந்துகொள்வது அவசியமாகும். இவ்வித அறிவானது பண்டித பாமரர் எல்லோராலும் அடையத்தக்கது. எல்லோருக்கும் அவ்வறிவு பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்கது.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

மதியும் விதியும்.

ஆசிரியர்:—ஏ. ரெங்கசாமி ஐயர், பி. ஏ., பி. எல்.;
ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.

தலைவிதி என்று கூறுவது.

நமது தேசத்தில் சாதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒரு விபத்து அல்லது கேடு நேரிட்டால் அது அவனுக்கு ஜன்மமெடுப்பதற்கு முன்னமேயே விதிக்கப்பட்டிருப்பதாகவும் அதை அவன் தடுக்கமுடியாதென்றும் ஆகையால் அவ்விபத்து அல்லது கஷ்டத்தை அவன் அனுபவித்தே தீரவேண்டுமென்றும் சொல்வதுண்டு. சாதாரண ஜனங்கள் இவ்விதம் நிகழும் சம்பவங்கள் அவன் தலையில் வரைந்திருப்பனபோல் 'தலை விதி' என்றும் கூறுகின்றனர். அவ்விதம் முன்னமேயே விதிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களை மதியால் தடுக்கக் கூடுமா என்பது பண்டைக்காலமுதல் மனிதர்கள் மனதில் உண்டாகும் கேள்விக்கு உத்தரம் பலவிதமாக அளிக்கப்பட்டு வருகின்றது. விதியை மதியால் ஒருபோதும் தடுக்கமுடியாது என்ற கொள்கையைக் கைக்கொண்டிருப்போர் அதை ஒரு ஆதாரமாகக் கொண்டு முயற்சிகளில் உற்சாகமின்றி இவ்வுலகத்தில் துக்கத்தை உண்டுபண்ணும் காரணங்களை அகற்ற முயற்சியாமல் இருந்துவிடுகிறார்கள். விதியானது மனுஷ ப்ரயத்தனத்திற்கு உள்ளடங்கியது என்று கருதுகிறவர்கள் அடிக்கடி தோல்வியடைந்தாலும் தைரியத்தையும் உற்சாகத்தையும் கைவிடாமல் மென்மேலும் சாகஸமான செய்கைகளைச் செய்து அவர்கள் கோரியதைச் சாதிப்பதையும் பார்த்திருக்கிறோம்.

புராண திருஷ்டாந்தங்கள்.

நாம் ஒரு இடத்தைவிட்டு அடுத்த ஊருக்குப் போவதற்கு முன்பும் அல்லது ஒரு காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பும் அது யாதொரு இடையூறு இன்றி க்ஷேமமாக முற்றுப்பெறவேண்டுமென ஜ்யோதிஷர்களை வினவியும் சகுனங்களைப் பார்த்தும் தெய்வ சம்மதத்தை அறிய முயன்று அக்காரியத்தில் பிரவேசிக்கவோ அல்லது அதைக் கைவிடவோ தீர்மானிக்கிறோம். நவீன மேற்றிசையிலோ இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவிற்கோ அல்லது தென் ஆப்பிரிக்கா அல்லது

அமெரிக்காவிற்கோ ஆகாய விமானத்திலேறி செல்ல விரும்பும் ஸ்திரீ அல்லது புருஷர் அச்செய்கையைச் செய்ய ஆரம்பிக்கு முன் அது தனக்கு யாதொரு கெடுதலின்றியும் விக்னமின்றி யும் நிறைவேறுமாவென்பதை ஜோஸ்யம், சகுனம் முதலிய வைகளால் அறிய முயலாமல் தன்னுடைய முயற்சியால் அது சாதிக்கத்தக்க காரியம் என்று தீர்மானித்து அக்காரியத்தைச் செய்ய முயலுகிறார். அதை அவர் செய்து முடிக்கின்றதை நாம் பார்க்கிறோம். நம்முடைய பூர்வீகக் கதைகளில் மார்க்கண்டேயர், சாவித்ரீ முதலியோரின் கதைகள் விதியை மதியால் தடுக்கக்கூடும் என்ற முடிவிற்கு திருஷ்டாந்தமாகக் கூறப்படு கின்றன. ஆனால் ஒருவன் பூர்வ ஜன்மங்களில் அவனுடைய மனதாலும் வாக்காலும் செய்கையாலும் செய்த கர்மங்களின் பலன்களை அவன் அனுபவித்தே தீரவேண்டுமென்றும் அந்த கர்மங்களில் இந்த ஜன்மத்தில் அவன் அனுபவிப்பதற்காக விதிக்கப்பட்டிருக்கும் பிராரப்த கர்மத்தைவிட்டு அவன் தப்ப முடியாதென்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்க்கையிலும் நம்முடைய சிநேகிதர்களுடைய வாழ்க்கையிலும் நிகழ்ந்த சில விசேஷ சம்பவங்களை நாம் கவனித்துப் பார்த்தால் அவைகள் மானிட முன் யோஜனைக்கு அடங்கினவைகள் அல்லவென்றும் அவைகள் கர்ம பலன்கள்தான் என்றும் நிச்சயிக்கவேண்டியிருக்கின்றது.

முயற்சி அவசியமானது.

ஆனால் நாம் இதை முற்றிலும் கைக்கொண்டு எல்லாப் பிரயத்தனத்தையும் கைவிட்டு நதியின் பிரவாகத்தில் சுதந்திர மற்று மிதந்துபோகும் துரும்புபோல் நாம் வாழ்க்கை என்ற பிரவாகத்தில் இழுக்கப்பட்டு லக்ஷியமின்றி செல்லுகிறோமா? அப்படி நாம் போவதில்லை. நாம் இவ்வுலகத்தில் சுகத்தை நாடுகிறோம். துக்கத்தை விலக்க எத்தனிக்கிறோம். அதற்குரிய சாதனங்களைச் செய்துகொள்ளுகிறோம். ஆனால் நம்முடைய தேசத்தில் விதி பெரிது முயற்சி சிறிது என்ற கொள்கையானது மேலிட்டு அந்த எண்ணமானது மனிதர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு செய்கையிலும் சம்பந்தித்து நிற்றலால் நாம் இக்காலத்தில் மற்ற மேற்றிசை ஜாதியார்களைப்போல் விடா முயற்சியிலும் பொதுஜன முன்னேற்றங்களிலும் சாகஸ செய்கைகளிலும் பின்னடைந்து நிற்கிறோமென்பது வெளிப்படையான விஷயம்.

உண்மையான அறிவு.

விதியென்பதென்ன? அது எவ்வாறு உண்டாகிறது? விதி பெரிதா? அல்லது மதி பெரிதா? அல்லது விதி என்பதற்

கும் மதி என்பதற்கும் உள்ள சம்பந்தம் யாது? இவைகளை நாம் நன்றாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. இவ்விஷயங்களை நன்றாகத் தெரிந்துகொண்டால் அவ்வித உண்மையான அறிவின் பயனாக விடாமுயற்சியானது பலமடைந்து நமது ஜனங்கள் பல உயர்தர லௌகிக பிரவிர்த்திகளைக் கைக்கொண்டு அரசாங்கம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் முதலிய பொது ஜன நலம்பற்றிய முறைகளில் தேசத்தின் க்ஷேமங்களைப் பெருக்குவதற்கு வல்லமை அடைவார்கள்.

மதியின் பெருமைக்கு உதாரணங்கள்.

ஒரு உதாரணம் இங்கு கவனிக்கத்தக்கது. இந்தியாவில் முறைக் காய்ச்சல், காலரா, பிளேக் முதலிய தொத்து வியாதிகளாலும் சுகாதார விதிகளைக் கவனியாமல் வாழ்வதாலும் ஜனங்களுடைய சராசரி ஆயுளானது சுமார் 23 வயதென்றும் இங்கிலாந்து தேசத்தில் அந்த சராசரி ஆயுளானது 45 அல்லது 50 வயதென்றும் சொல்லப்படுகின்றது. சொற்ப தினங்களுக்குமுன் வெளிவந்த ஓர் பத்திரிகையில் இங்கிலாந்தில் இந்த சராசரி வயதானது சில வருஷங்களுக்குமுன் இருந்ததைக்காட்டிலும் ஜனங்கள் சுகாதார விதிகளை நன்கு கவனிப்பதாலும் அரசாங்கத்தாரும் சுகாதார முதலிய இலாகா அரசியல் ஸ்தாபனங்களும் பொதுஜன க்ஷேமத்திற்குரிய சாதகங்களைச் செய்வதாலும் ஜனத்தொகை சிலவருஷங்களில் அதிகமாகப் பெருகியிருக்கிறதென்றும் கூறப்பட்டது. வாழ்வில் நிகழும் சம்பவங்களில் ஆயுள் என்பது முக்கியம். ஒரு ஜன சமூகத்தின் சராசரி ஆயுளானது அந்த ஜன சமூகத்தைச் சேர்ந்த பல ஸ்திரீ புருஷர்களின் ஆயுள்களிலிருந்து கணிக்கப்படும் ஓர் அளவு ஆகும். சராசரி ஆயுளானது அதிகமாயிற்றென்றால் அந்த ஜனசமூகத்தில் உள்ள ஸ்திரீ புருஷர்களின் ஆயுளானது மனிதப் பிரயத்தனத்தால் அவ்விதம் அதிகரிக்கப்பட்டதென்று அறியத்தக்கது. ஆகையால் ஆயுள் என்பது மாற்றத்தகாத விதியல்லவென்றும் அதை மதியாலும் மாற்றத்தகும் என்பதற்கு இது பெருந் திருஷ்டாந்தமாகின்றது. அதுபோல ஒரு பிரதேசத்தில் தொத்து வியாதிகளை உண்டுபண்ணும் கிருமிகள் உண்டாவதற்கும் அபிவிர்த்தியடைவதற்கும் உள்ள சாதகங்களின்றி அப்பிரதேசத்தைச் சுத்தமாகச் செய்தால் அதில் வசிப்போர்கள் அவ்வித வியாதிகளால் பீடிக்கப்படாமல் வாழ்வார்கள் என்பதற்கு நமது அனுபவத்தில் உதாரணங்கள் இருக்கின்றன. சிசுக்கள் சம்பந்தமாயும் கெர்ப்பிணிகள் சம்பந்தமாயும் மரணலிகிதமானது மனுஷப் பிரயத்தனங்களால் குறைக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம் இவைகளெல்லாம் விதி

யென்று நாம் கருதுவதை பிரயத்தனத்தால் மாற்றலாம் என்பதற்கு ஆதாரமாகும். குஷ்டரோகத்தை கரும வியாதியென்று சிலர் சொல்வதுண்டு. இவ்வெண்ணமானது பெரும்பாலும் கைக்கொள்ளப்பட்டு குஷ்டரோகிகளின் கஷடத்தை கவனியாது சில வருஷங்களுக்குமுன்வரை அதற்குப் பரிகாரம் தேடாமல் இருந்ததற்கு ஒரு மூடாதாரமாக இருந்தது. இப்பொழுது அவ்வியாதியும் மற்ற வியாதிகளைப்போல் நிவர்த்திக்கத்தக்கதுதான் என்ற அபிப்பிராயம் முன்னேற்றமடைந்து அவ்வியாதியால் பீடிக்கப்பட் டிருக்கிறவர்களுக்கு ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டு மருந்துகளும் முறைகளும் கண்டு பிடிக்கப்பட்டு அதின் மூலமாய் பல வியாதியஸ்தர்கள் சுகமடைந்திருக்கின்றனர்.

விதிக்கும் மதிக்கும் உள்ள சம்பந்தம்.

விதிக்கும் மதிக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பை நாம் நன்கு கவனிக்கவேண்டும். விதி என்பது ஒரு மனிதனின் பகிர் நிலைமையையும், சம்பவங்களையும் குறிக்கின்றது. ஜீவாத்மாவானவன் ஒரு வாலிபன் பாடசாலையில் சேர்ந்து, வருஷந்தோறும் உயர்வகுப்புகளுக்குச் சென்று கற்றுவருவதுபோல இவ்வுலகில் அநுபவங்களைப் பெற்று மேல்நிலையை அடைவதின் பொருட்டு ஜென்மம் எடுக்கிறான். அவனுக்குக் கிடைத்திருக்கும் இச்சரீரம், அவன் பிறக்கும் குடும்பம், தேசம், அவனுடைய ஐசுவர்யம், தரித்திரம், முதலாகிய வெளிநிலையும் அவனுடைய அந்தரங்க மனோபாவனைகள் முதலியனவும் அவனுடைய பூர்வ ஜென்ம கர்மவாசனைகளால் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வித பூர்வஜென்ம கர்மங்களைச் செய்வதற்கு அவன் பூர்வத்தில் எவ்வாறு சுதந்திரனாக நின்றானோ அதுபோல இந்த ஜன்மத்திலும் அவனுக்கு அவனால் பூர்வத்தில் ஏற்படுத்தப்பட்ட பகிர்முக நிபந்தனைக்குள் கட்டுப்பட்டவனாய் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பகிர்நிலைகளை நிர்மாணிக்கத்தக்க சுதந்திரமும் வல்லமையும் இப்பொழுதும் அவனுக்கு ஏற்பட்டுள்ளது என்பது ஸ்பஷ்டமாகும். ஆகையால் ஒவ்வொருவரிடத்திலும் இந்த அந்தரங்க தெய்வீக சுதந்தர சக்தியானது குடிகொண்டிருக்கிறது. அவன் ஞானம், இச்சை, கிரியை, என்ற மூவகை சக்திகளில் ஜன்மந்தோறும் மேம்பாடுபெற்று அவனுடைய லக்ஷியமாகிய 'பூரணத்துவம்' அல்லது 'மோக்ஷம்' அல்லது 'வீடு' என்ற முடிவைநோக்கிச் செல்லுங்கால், அவனைக்கட்டுப்படுத்தும் விதியின் பலமானது வரவரக் குறைந்து நிற்க, அவனுடைய தெய்வீக அந்தரங்க சக்தியானது வளர்ச்சிபெற அவன் மேன் மேலும் அவ்விதியை அதிக்கிரமித்துக் கொண்டு கடைசியாக விதியால் கட்டுப்படாமல் அதினின்று விடுபடுகிறான்.

ஆகையால் அக்க்கியின் இடையில் வெவ்வேறு படிகளுடன் கூடிய நிலைகளில் தங்கும் ஜீவர்களுக்கு இந்த அந்தரங்க திவ்ய சக்தியின் அளவானது, வெவ்வேறு வித்தியாசங்களுடன் கூடி நிற்கின்றது.

விதிப்பயனின் வேறுபாடுகள்.

முன் ஜென்மங்களில் ஒரு ஜீவனால் செய்யப்பட்ட கர்மங்களின் பலன்களை அவன் அனுபவித்தே தீரவேண்டும் என்பது ஒரு உயர்ந்த நீதியாகும். விரை ஒன்றுபோட சுரை ஒன்று முளைக்கமாட்டாது என்ற வசனத்தை நாம் கேட்டிருக்கின்றோம். உலகத்தில் மனிதர்களுக்குள் சுகதுக்கங்கள் பலவாறுயிருப்பதற்கும், ஒருவன் வாழ்வில் சுகம் மேலிட்டிருப்பதற்கும் மற்றொருவன் வாழ்வில் துக்கம் மேலிட்டிருப்பதற்கும் பூர்வ ஜன்ம வினைப்பயனே தவிற வேறு சமாதானம் கூறுவது அரிது. முன் ஜன்மங்களில் எல்லாம் செய்த கருமங்களின் கூட்டத்தை 'சஞ்சித கரும' மென்றும் அக்கூட்டத்திலிருந்து ஒருவன் ஒரு ஜன்மத்தில் அனுபவிக்க வேண்டியதாய் கரும தேவதைகளால் விதிக்கப்படும் கர்மபாகத்தை 'பிராரப்த கரும' மென்றும் அவன் அந்த ஜன்மத்தில் நூதனமாய்ச் செய்யும் கருமத்தை "ஆகாமிய கர்ம" மென்றும் மூன்று விதமாக நமது பூர்வீக நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளில் ஜீவனானவன் இந்தஜென்மத்தில் அவனுடைய பிராரப்த கரும வசத்தால் ஏற்பட்டுள்ள பகிர்முக நிலைமைகளுக்குள்பட்டு நூதன கருமங்களைச் செய்வதில் அவனுக்கு சுவாதந்திரம் உண்டு. அப்பொழுது முன்கூறிய அவனுடைய அந்தரங்க திவ்ய சக்தியின் பலமானது அவனுக்கு சாதகமாயுளது. அதின் மூலமாய் அவன் பகிர்முக இடையூறுகளை விலக்கிக்கொண்டு உயர்வுற்ற காரியங்களை சாதிக்க வல்லன் ஆவான்.

வினைப்பயனை எவ்வாறு வெல்வது?

விதியை மதியால் வெல்ல முடியுமா? அது சாத்தியமானல் அது எவ்வாறு செய்யத்தக்கது?

(1) கர்மத்தின் வழியானது நமது அறிவிற்கு பெரும்பாலும் மறைந்து இருப்பினும் சில உண்மைகளை நமது யுக்தியால் ஊகிக்கலாம் பிராரப்த கர்மத்தை ஜீவர்கள் ஒருபோதும் விலக்க முடியாது என்ற சங்கற்பத்துடன் கர்ம தேவதைகள் பாகுபாடு செய்திருக்கிறார்கள் என்று நினைப்பதற்குக் காரணமில்லை. மனுஷப் பிரயத்தனத்திற்குத் தக்கவாறு அப்பிராரப்த கர்ம சேர்க்கையின் அமைப்பை மாற்றக்கூடும் என்று நினைக்கக் காரணம் இருக்கின்றது. அப்படி மாறுதல்களுக்கு இடமில்லா

மற்போனால் மனுஷப் பிரயத்தனங்களுக்கு இடமில்லாமலே போய்விடும். உலக சம்பவங்களும் அனுபவங்களும் இம்முடிவை ஆதரிக்கின்றன. நாம் முயற்சிகளால் தள்ளத்தகாத ஒரு குறிப்பிட்ட பிராரப்த கர்மத்தின் பலனை மாற்றினாலும் அந்தப் பலனை வேறுவிதமாய் நமக்கு அளிக்கவும் அக்கர்ம தேவதைகளுக்கு அறிவும் சக்தியும் உண்டென்றே நாம் கருத வேண்டும். ஆனால் அவ்விதம் நாம் செய்த முயற்சிகளாலேயே நம்முடைய ஆத்ம சக்திகள் வளருகிறதற்கு இடம் உண்டாகின்றது. ஆகையால் அம்முயற்சிகள் வீணாகாமல் இருவகையிலும் நமக்கு பிரயோஜனமாகின்றன.

(2) பிராரப்த கர்மத்தின் பலனை நாம் இன்னும் ஒருவிதமாய் வெல்லலாம். ஒருவனுக்கு ஒரு விபத்து நேரிட்டு அவன் விவேகமற்றவனாய் இருந்தால் அதின் கொடுமையால் துன்புற்று மிகவும் வருந்துவான். அவன் அறிவுடன்கூடிய விவேகியாயிருந்தானேயாகில் அவனுடைய மனதானது அவ்விபத்தால் யாதொரு சஞ்சலமும் அடையாமல் சமாதானம்பெற்று அதின் கடுமையை வெல்ல முயற்சிப்பான். ஒரேவிதமான நிகழ்ச்சியால் ஒருவன் ஆறாத் துயரத்தை அனுபவித்தும் மற்றொருவன் தாமரை இலையின்மீது விழும் நீர்த் துளிபோல் பாதிக்கப் படாமலும் இருக்கிறான். அவனுடைய கரும பலனானது அக்கினியால் தகிக்கப்பட்ட கட்டையானது முன் உருவத்தோடுகூடி நின்றாலும் எவ்வாறு பலமற்று ஓர் அசைவினால் சாம்பல் பொடியாகிவிடுமோ அதுபோலவும் தாக்கவந்த அம்பானது கூர்மையை இழந்ததுபோலவும் புண்படுத்தும் சக்தியை இழந்துவிடுகிறது. இதுதான் ஞானாக்கினியால் கருமபலனை வெல்வது என்பதின் தாத்பரியமாகும்.

(3) நமது ஒவ்வொரு அனுபவமும் சுகத்தைக் கொடுத்தாலும் அல்லது துக்கத்தைத் தந்தாலும் அவ்வனுபவத்தால் நமது சக்திகள் முன்னேற்றமடைவதாகிய பயனை நாம் முழுமனதுடன் கைப்பற்றிக்கொண்டால் அப்பயன் பிரதானமாகி சுகதுக்கங்கள் பொருட்டாகக் கருதப்படா. இதுவும் மதியின் வெற்றியாகும்.

(4) ஞானத்தில் தேர்ந்த தீர்க்கதரிசிகள் அவர்களுடைய பூர்வ ஜன்மகடன்களை ஞானதிருஷ்டியால் இப்பிறப்பிலேயே அறிந்துகொண்டு அவைகளை எவர்களிடம் செலுத்த வேண்டுமோ அவர்களைத் தேடிச்சென்று அக்கடன்களைச் செலுத்தி தங்களை கர்மபந்தத்திலிருந்து விடுவித்துக்கொள்வார்களை நாம் கேட்டிருக்கிறோம். இவ்விதமாயும் விதியை மதியால் பின் காலங்களில் தன்னைக் கட்டுப்படுத்தாமலிருப்பதற்கு இப்பிறப்பிலேயே வென்றுவிடலாம் என்பதும் ஓர் கருத்து.

(5) ஜீவனானவன் பரம்பொருளின் ஓர் அம்சமாக இருத்தலின் காரணத்தால் அதின் அந்தரங்க சக்திகளை விகாஸம் பெற்று அறிந்து உணர்ந்து அப்பரம்பொருளின் நோக்கத்திற்கு வேறு, தான் இசைந்து நடப்பதினால் அந்த ஜீவனானவன் அப்பரம்பொருள் வேறு என்ற வேறுபாட்டை ஒழித்துவிடுகிறான். அப்பொழுது அவனை வேறுபடுத்தும் கருமபந்தமும் நீங்கிவிடுகின்றது. அந்த நிலையில் அவனுக்கு நேரும் சம்பவங்கள் அவைகளின் வெளித்தோற்றத்தால் மற்றவர்களுக்கு கஷ்ட துக்கங்களாகத் தோன்றினும் வீரியமற்றவைகளாகி ஐக்கிய நிலைபெற்ற அவனை பாதிக்கமாட்டா.

முடிவுரை.

ஆகையால் நாம் நம்முடைய பிரயத்தனத்தால் நம்முடைய வருங்கால நிலைமையை மாற்றிக்கொள்ளக்கூடும் என்ற மனோதிடம் நமக்குவேண்டும். அம்மனோதிடத்தைக் கொண்டு நாம் நமது மானிட வாழ்க்கையை நடத்துவோமாகில் இந்த ஜென்மத்திலும் வரும் ஜென்மங்களிலும் நாம் நமது பகிர் நிலைமைகளை நமக்கு சாதகமாகச் செய்துகொள்ளலாம். எச்சம்பவம் நம்மால் விலக்கத்தக்கது எச்சம்பவம் நம்மால் விலக்கத் தகாத விதிப்பயனாய் உளது என்று நம்முடைய கிஞ்சித்தறிவால் அறிந்துகொள்வது சாத்தியமானது. ஆகையால் எல்லா சம்பவங்களும் நமது ஆளுகைக்கு உள்பட்டனவென்றே, நாம் கருதி நமது அறிவு, முன் யோசனை, ஜாக்கிரதை, விடாமுயற்சி, முதலிய சக்திகளைக்கொண்டு நமது செய்கைகள், எண்ணங்கள், மனோபாவங்கள் முதலியவைகளை ஒழுங்குபடுத்தி நிறைவேற்றுவதே உத்தமமான முறையாகும். நமது தள்ளத்தகாத விதியான கருமதேவதைகளால் ஏற்பட்டுள்ள சம்பவங்களை நாம் எவ்வாறு தடுக்கமுயன்றாலும் அவைகளை நிறைவேற்ற அக்கரும தேவதைகளுக்கு அளவற்ற சக்தியும் ஞானமும் ஏற்பட்டுள்ளது. ஆகையால் அத்தேவதைகளின் நியமனங்களை நம்முடைய முயற்சிகளால் தடுக்கக்கூடாதென்ற ஓர் மூடபக்தியைக் கொண்டு முயற்சி செய்யாதிருந்தால் அறிவீனமாகும். ஏனெனில் அத்தேவதைகளின் தள்ளத்தகாத கரும நியமனங்கள் யாவையென்று அவைகள் நிகழுமுன் நமக்குத் தெரியாது. ஆகையால் மதியும் அம்மதியை அனுசரித்து நிற்கும் முயற்சியும் பிரதானமானது. அம்மதியாலும் அம்முயற்சியாலும் நாம் விதியை ஒருக்கால் வென்றுவிடக்கூடும்; அல்லது அதின் பயனை மாற்றக்கூடும் அப்படி இப்போது வென்றுவிடத் தவறினும், அம்மதியாலும் அம்முயற்சியாலும் நம்முடைய அந்தரங்க

சக்திகள் அபிவிர்த்திபெற்று வருங்காலத்தில் விதியை வெல்லத் தக்க சக்தி நம்மிடத்தில் ஏற்படக்கூடும். ஆகையால் முயற்சி யுடையோர் இகழ்ச்சி யடையார்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றுஇன்மை
இன்மை புகுத்தி விடும்.

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

—திருக்குறள்.

நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை.

பயமெனும் பேய்தனை அடித்தோம்—பொய்மைப்
பரம்பைப் பிளந்து உயிரைக் குடித்தோம்.

—பாரதியார்.

கௌமார
தருதலம்
மன்னார்குடி.

—பாரதி பிரஸ், மன்னார்குடி.—

இறைவன் துணை.

கௌமார தருதலக்
கல்விப் பிரசுரம் 1.

இக்காலச் சமயக் கிளர்ச்சிகள்.

ஆசிரியர்:—இராவ்பகதூர் கே. வி. சேஷய்யங்கார், எம்.ஏ. பி.எல்.
ஹைகோர்ட் வக்கீல், பத்திராசிரியர் பாரத தருமம், சென்னை.

பரம்பொருள் வாழ்த்து.

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்,
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்,
மகமது நபிக்கு மறைஅருள் புரிந்தோன்,
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதன்இயல் ஒளியுறும் அறிவாம்;
அதன்அருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

—பாரதியார்.

இந்தியாதேசமன்றி உலக மெங்குமே ஒருபுத்துயிர் எழுங் கிளர்ச்சியை இன்று காண்கிறோம். கல்வி எங்கும் பரவுவதாலும் பூதபௌதிக அறிவு வளர்ச்சியினாலும், இதுவரை மற்றவர்கள் பெரியார்களின் வார்த்தைகளை நம்பி அவைகளின் படி நடந்துவந்தவர்கள்கூட மனிதவாழ்க்கையையும் ஜன சமூகத்தையும் பற்றிய பல விஷயங்களையும் அஞ்சாமல் புதிய முறைகளில் ஆலோசித்து முடிவு செய்கிறார்கள்.

சமயமதத்துறையில் உயிர் என்ன மரணம் என்ன சுகம் என்ன என முற்காலங்களிற்போல அழுத்தமாகவும் திருத்தமாகவும் கேட்கிறார்கள். இதுவரை கூறப்பட்டிருப்பவைகளை அறியாதபடி இவ்வாறு கேட்கவில்லை; இதுவரை சொல்லியுள்ளவை மனதிற்குத் திருப்தியை தாராததால், தாங்களே சுயமாய் விசாரணை செய்கிறார்கள்; விசாரணையில் தெளிந்த அறிவை வாழ்விலும் அனுபவத்திலும் நடத்துகிறார்கள்.

இப்புத்துயிரின் பலம், எல்லா சமயங்களையும் தாக்கி வருகிறது. கிறிஸ்தவமதத்தில், பல பிரிவுகள் இருப்பினும், முக்கியமாக இரண்டு பிரிவுகள் உண்டு. ஒருவர் பிபிலியசத்திய வேதம் கடவுள்வாக்கு அதன் வாக்கியங்களெல்லாம் சத்தியம் எனவும் மற்றவர் நவீனர் பிபிலியவேதத்தில் கூறப்பட்ட பழையமொழிகளை விசாரித்து தற்கால பூதபௌதிக சாஸ்திர அறிவுடன் அவைகளை ஒத்துப்பார்ப்பது தவறாகாது என்பர். இவ்விருதாரத்தாருக்கும் குழப்பம் வளர்ந்துவருகின்றன. இது இஸ்லாம் மதத்திலும் உண்டு; ஆனால் அது அவ்வளவு தீவிரமில்லாமல் மிதமாக இருக்கிறது. ஹிந்துமதத்திலோ அவ்விதக் குழப்பம் அதிதீவிரமாகவும் வெகு வேகமாகவும் இருந்து கொண்டு மதவிஷயத்திலும் ஜனசமூக விஷயங்களிலும் பிரமாதமான புதிய கிளர்ச்சிகளை எழுப்பிக்கொண்டு இருக்கிறது.

இப்புத்தியினையும் அதன் அந்தரங்கத்தையும் வலிமையையும் நாம் ஆராய்ந்து அறிவது அவசியம். நம்மைச்சுற்றி எல்லாப்பக்கங்களிலும் நிகழ்ந்துவரும் பல மாறுதல்களினால், நாம் அவைகளை ஆழ்ந்து அறியாமல் இருக்கமுடியாது. பழைய சமய சின்னங்களெல்லாம் அழிந்து மறைந்து வருகின்றன. திடமாகவும் வேறு விதியில்லாமலும் ஜனங்கள் வாழ்க்கையைப் பற்றி இதுவரை பழக்கத்திலிருந்த நோக்கங்களுக்கு மாறாகவே

எண்ணி நடக்கிறார்கள். நமக்கு இஷ்டமோ இஷ்டமில்லையோ, வருத்தமோ வருத்தமில்லையோ, ஜனங்களும் சபைகளும் புதிய பழக்க வழக்கத்தைக் கைக்கொண்டு வருவதைப் பார்த்தால்,* காலக்கிரமத்தில் நமது ஹிந்து ஜன சமூகம் நன்கு மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. இம்மாறுதல்களின் நோக்கமென்ன? இம்மாறுதல்கள் நம்மை எங்கே தள்ளிக்கொண்டுபோகின்றன? ஹிந்துமதம் கடைசியாக என்னவாகும்? இவ்விதமாய் அஞ்சியும் மெல்லெனவும் பலர் கேள்விகேட்கிறார்கள். இவ்வித ஐயப்பாடு நமது நாட்டு அறிஞர்கள் மனதில் நிறைந்துள்ளதெனக் கூறுவது பிழையாகாது. அப்போதைக்கப்போது ஏற்படும், இதுவரை பலமுறை நிகழ்ந்த பல சீர்திருத்தங்களைப் போன்றதா இப்போது நிகழ்வது? அல்லது சமயத்திலும் மதத்திலும் இதுவரையுள்ள நோக்கங்கள் மாறி வேறாகிவிடும் காலம் வந்துவிட்டதா?

எப்போதும்போல இப்போதும் சிலர் இருக்கின்றார்கள்; அவர்களுக்கு சமயம் மதம என்பது சொந்த ஆஸ்தியாகும்; அதன்மூலம் அவர்கள் ஆன்ம அநுபவத்தையும் தன் மோக்ஷத்தையும் தேடுகிறார்கள். இவர்களுக்கு வேண்டியவை எல்லாம் பழைய பழக்க ஒழுக்கங்களிலே இருக்கிறது. வேறு எவையும் தேவையில்லை. அவர்கள் தங்களை மற்றவர்கள் தங்களிஷ்டப்படி விட்டுவிடவேண்டுமெனவும், மற்றவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளட்டுமெனவும் கூறுவர்.

---

*இதுசமயத்தில் முன்னர் சில நூறு வருஷங்களுக்கு முன்னால் சமயத்தில் ஒரு திருத்தம் வளர்ச்சி மாற்றம் ஏற்பட்டகாலத்தில் ஸ்ரீலஸ்ரீ உமாபதி சிவாசாரியார் என்ற பெரியார் கூறுவது யாவரும் ஆழ்ந்து அறியக்கடவது:—

தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினர் நலம்கொள்மணி பொதியும்அதன் களங்கம்
நவைஆகாது, எனஉண்மை நயந்திடுவர். நடுவாந்
தன்மையினர் பழமைஅழகு ஆராய்ந்து தரிப்பர்.
தவறுநலம் பொருளின்கண் சார்பு ஆராய்ந்து அறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர்; ஏதிலர்உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனஒன்று இலரே.

தொன்மை—பழைமை. நூல்—சாஸ்திரம், புத்தகம்; துணிந்த—நிச்சயமான. பொதியும்—நிறையும், களங்கம்—குற்றம். நவை—சிரிப்பு ஏத்துவது—உயர்த்துவது. ஏதிலர்—பகைவர்.

இதனால் புதியதொரு காரியத்தை எவ்விதமாக ஆராய்ந்து அறிய வேண்டுமெனப் புலப்படும்.

ஆனால் வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் கக்ஷியும் எண்ணிக்கையும் அதிகம். அவர்கள் கடினமான, இடஞ்சலான சில சமயத்தில் பதில் சொல்ல வகையில்லாத கேள்விகளைக் கேட்கிறார்கள். விடாதபடி அடக்கத்துடனும் மரியாதையுடனும் கேட்கிறார்கள். இவர்கள் ஹிந்து ஜனசமூகம் அனைத்தையும் ஒன்றாக எண்ணி மற்றவர்கள் கஷ்ட நஷ்டத்தையும் தங்களுடையதாக எண்ணி, அன்பும் ஒளியும் நிறைந்த இவ்வுலகில் ஏன் மனிதர்கள் துன்புற்று உதவியற்றுத் தவிக்கவேண்டும்? இதுவே இவர்களுடைய துயரம். திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்பதை ஒட்டி, உதவியற்ற திசையில் இவர்கள் சமயத்தில் உதவி தேடுகிறார்கள்.

இக்காலச் சமயக் கிளர்ச்சிகளில் எடுத்துக்காட்டாக விளங்கும் அம்சம் எது எனில் ஜனசமூகசெழிப்புக்காகச் செய்யும் வேண்டுகோள்தான். ஒருஜாதி, ஒருவகுப்பாருக்கு என்று இல்லாதபடி எல்லாஜாதி எல்லாவகுப்பாருக்குமே ஈசுவரவணக்கம், ஆன்மவிளக்கம், உயிர்வளர்ச்சி, சமமாகக் கிடைக்கும்படி அவர்கள் வேண்டுகிறார்கள். இவை ஒருவருக்கே சொந்தமல்ல; ஒருவரே சுவாதீனமாக்கிக்கொள்ளல் ஆகாது; யாவரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். சரிபங்காகவும் பங்கிடவேண்டும். இதுவே ஆரிய சமாஜம் பிரம்மசமாஜம் தியசாபிகல்சொசையடிமுதலிய இக்காலச் சமயக்கிளர்ச்சிகளின் பெரும்பேரிகையும் முக்கிய முரசுமாகும். மனுஷசகோதரத்துவத்தையும், அதன்பயனை சமத்துவப்பயிற்சிக்கும் சமயவசதிக்கும் அவர்கள் வற்புறுத்துகிறார்கள். இக்கால அநேக சங்கடங்களை ஒழிக்க அவர்கள் மதத்தின் உதவியை எதிர்பார்க்கிறார்கள்; சமூக நோக்கங்கள் நன்னோக்கங்களாகவேண்டுமெனின், அவைகள் உண்மை மதத்திற்கு ஒத்ததாய் சமரசமாய் இருக்குமென நிச்சயிக்கிறார்கள்; சமூகத்தை நன்னெறியில் நிலைக்கவைக்கும் அப்பெரும் தீவிரசக்தி சமய அடிப்படையில்தான் உள்ளதென அவர்கள் எண்ணுகிறார்கள். சமய நோக்க ஒழுக்கங்களை ஜனசமூகக் கட்டுக் கேடுறாதபடி தடைசெய்யவும் நிலைத்து நிற்கவும் செய்யக்கூடும்; ஜனசமூக மதிப்புகளைக் காலத்திற்கேற்ற சமய சத்தியங்களை நிர்ணயிக்கக்கூடும். இவ்வண்ணம் இக்காலப் புதுசமயக் கிளர்ச்சிகளும் உழைப்போர்களும் கூட எந்த சில மாறுதலாலும்

சமயத்திற்கு மோசம் வந்துவிட்டதென அஞ்சிஅலறும் சநாதனஸ்தர்களைவிட, அதிகமாகவே சமயமத ஆஸ்திகபுத்தியிலேயே நம்பி முயற்சிசெய்கின்றனர். இருவருக்கும் ஈசுவர நம்பிக்கையே; ஆனால் ஒருவர் உலகில் உள்ளதில் ஒன்றும் மாற்றப்படாது என்பர்; மற்றவர் காலதேச வர்த்தமானத்திற்கிணங்க ஈசுவர சக்தியே நம்மை திருத்தி வளர்க்கிறது என்பர்.

இக்காலச் சமயக்கிளர்ச்சிகளின் இரண்டாவது முக்கிய அம்சம் என்ன எனில் மனதில் உள்ள சந்தேகங்களை மறைவின்றிப்பேசித்தெளிதலாகும். இது எவ்வளவு எல்லை கடந்து நிகழ்கிறதென்பது ஒரு பெரும் திகைப்பே. இதுவரையில் கட்டிவைக்கப்பட்டிருந்த நாவெல்லாம் திடீரென அவிழ்க்கப்பட்டது போலும்! இந்திய மனம் இப்போது மற்றவர் மொழிக்கு இடந்தரேன் என்கின்றது. பழைய மதக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும் என் ஒப்புக்கொள்ளவேண்டுமென உதறிஎறிகிறது. எட்டுச்சுவடி தவிற வேறு ஆதாரமில்லாத பழக்க வழக்கங்களின் பயன் யாதென வினவி அவைகளை ஒருபுறமாக ஒதுக்கிவிடுகிறது. ரோட்டில் போகிறவன்கூட அப்பழக்க வழக்கங்கள் நியாயமா அல்லவா எனத்தான் அறியவேண்டுமென்கிறான்.

இவைகளெல்லாம் வருங்காலத்தில் பெரும்பயன் அளிப்பனவாகும். இவைகளை எண்ணிப்பார்த்தால் இவை சீர்திருத்தமென எண்ண இடமில்லை. ஒரு பெரும் குழப்பமாகுமோ என ஆலோசிக்கவேண்டியுள்ளது. ஹிந்துவர்ணாசிரமப் பிரிவுகளுக்குள் ஒரு மனவெறுப்பு எழுந்து வருகிறது. இச்சுயேச்சையின் ஒரு பகுதி எப்படி பூதபௌதிகப்பரிசைஷயால் பூதபௌதிக அறிவு யாவருக்கும் புலப்படுகிறமாதிரியே ஆன்ம ஈசுவரகாரியங்களும் சுய அறிவுக்கும் சுய அனுபவத்திற்கும் புலப்படவேண்டுமென்கின்றனர். இவ்விதம் கூறுவது ஆச்சரியமாக இருக்கலாம்; ஆனால் அது பிரத்தியக்ஷம். இறை (அரசர்)களுடன் எட்டுச்சுவடியும் ஒழிந்து அழிந்து வருகின்றனபோலும்; ஏனெனில் இறைகளின்வாக்கும் எட்டுச்சுவடிகளின்வாக்கும் விஷ்ணுவாக்கு வேதவாக்கு என்ற காலம் பறந்துவிட்டது. ஜனங்கள் அவ்வித அதிகாரத்தைத் தாக்குகிறார்கள்; இந்த வீரியமே ஈசனை வழிபட நடுவில் பூசாரி யேன்என வினவுகிறது. இவ்வீரியமே பழைய ஆகமபூஜை சடங்குகள் எவ்விதம் பிரயோசனம் என்று காட்டச்

சொல்லுகிறது. இவ்வீரியம் தனக்கு ஒரு முத்தி மோக்ஷம் வேண்டுமெனுதபடி ஜனசமூக உயர்வுக்கு உழைக்கிறது. நாமெலாம் ஏகம், ஒரே சமூகத்தின் அம்சங்கள் என்ற எண்ணம் இருக்குமானல், சுயநலமான தன் ஒருவனது சுகமான தான் தப்பிப் பிழைக்கும் தனது முத்தியை மாத்திரம் கருத இயலுமா?

இதுவரை நான் கூறுவது யாது என அறியக்கிடக்கும். அதாவது ஒரு பெரும் அரிய அருட்சக்தி உலகில் எங்கும் இப்போது பொழிந்துவருகிறது. இதன்மூலம் சர்வஜன சமரச புத்தி ஓங்கிவளர்ந்து, உலகெலாம் ஒன்றென உணரும் உணர்ச்சி மேலிட்டுள்ளது; உலகில் உள்ள நூற்றைம்பதுகோடி மக்களும் ஒரே குடும்பம் என்ற அறிவு உதித்துள்ளது. கலைப்பயிற்சியாலும் பொருளாதாரத்தாலும் உலகில் உள்ள எல்லா நாடுகளும் மாந்தர்களும் ஒரே கட்டில் அகப்பட்டுள்ளனர். இதுவரைக் கனவிலும் எண்ணுத எண்ணங்களை எண்ணவும் செய்யவும் தீரம் கொண்டுள்ளனர். இந்தியாவிலே பல கிளர்ச்சிகள் தலை எடுத்துள்ளன; இன்னமும் தலை எடுக்கும்; இவைகளின் இலக்ஷியங்களெல்லாம் எல்லாருடைய வாழ்வும் எழில்பெற வேண்டுமென்பதே. இவைகளின் பயனும் நலனும் யாதெனச் சீர்தூக்கி நிச்சயிப்பது ஒரு கூடாதகாரியமே. இவ்வியக்கங்கள் மனிதசகோதரத்துவத்தை வளர்த்து, சமூக சேவையையும் சுயநலத்தியாகத்தையும் பலப்படுத்தி, யாவருக்கும் தீமையாகவும் சத்துருவாகவும் இருப்பவைகளை ஒழிக்க நமது வல்லமையைச் சேர்த்து, ஒரு மனிதன் ஒரு ஜாதி மற்றொரு மனிதன் மற்றொரு ஜாதியின் ஜீவனத்தால் உயிர் வாழாமல் செய்து வருமளவும், அவ்வியக்கம் அக்கிளர்ச்சி ஈசுவரனுக்கு இசைந்ததெனவும், சனுதன தருமதத்திற்கு சம்மதமெனவும் கூறுவது பிழையாகாது.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. —குறள்.

தோல்வியும் வெற்றியும் சொன் மதங்கட் கெல்லாம்
கால பேதத்தினுல் உண்டு உந்தீபற,
கருத்தன் செயலது என்று உந்தீபற.

பாரதி பிரஸ், மன்னர்குடி.

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

சமயமும் ஒழுக்கமும் 14

வாழ்க்கையின் ஒழுக்கம்.

ஆசிரியர்கள்:—ரேவரேண்ட் ஆர். ஸ்மேயில்ஸ் துரை எம். ஏ.
மிஸ்ஸஸ் ஸ்மேயில்ஸ் துரைசாணி பி. ஏ.
மன்னார்குடி பிண்டிலே கல்லூரி தலைவரும், ஆசிரியரும்.

ஸ்மேயில்ஸ் துரையவர்களின் பிரசங்கம்:—

சகோதரர்களே! எல்லோருக்கும் படிப்பு அவசியமானது. நான் சில வருஷங்களாக பின்ட்லே காலேஜில் மாணவர்களுக்குப் படிப்பைச் சொல்லிவருகின்றேன். நீங்கள் கிராமங்களிலிருந்து படிக்க வந்திருக்கின்றீர்கள். அதைப்பற்றி எனக்கு அதிக சந்தோஷம். ஆசையுண்டானல்தான் படிப்புவரும். உங்களுக்குப் படிப்பின்மேல் அதிக ஆசை இருப்பதனல் நன்ருக படிப்புவருமென்று நம்புகின்றேன். நீங்கள் உங்கள் கிராமங்களுக்குப் போனவுடன் நீங்கள் கற்றுள்ளதை எல்லாம் கிராமத்தார்களுக்கும் போதியுங்கள். கிராமத்தார்களுக்கு படிப்பு அவசியம் வேண்டியிருக்கிறது. சில கிராமங்களில் நான் பள்ளிக்கூடங்களைப் பார்த்தேன். அவைகளில் சொற்பப் படிப்புத்தான் இருக்கிறது. கிராமத்தார்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்கம் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் கிராமங்களில் படிப்பு பரவும்.

இன்றைக்கு நீங்கள் கிறிஸ்தவக்கோவிலுக்குப் போனீர்கள்; அங்கே ஏசுநாதரைப்பற்றிக் கூறினர்கள். நீங்கள் அவரைப்பற்றி வாசித்திருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன். அவர் நல்லவர். அவர் நல்ல விஷயங்களைச் செய்தார். எல்லோருக்கும் உபதேசம் பண்ணினர். கிராமங்களிலும் பட்டணங்களிலும் நீங்கள் வேதத்தை வாசித்துவருவீர்களென்று நம்புகின்றேன். புஸ்தகங்களை வாசித்து அதன்படியே நடப்பீர்கள் என்று நம்புகின்றேன். கிறிஸ்தவர்கள் எல்லோரும் நல்ல கிறிஸ்தவர்கள் அல்லர். அவர்களிடத்தில் குறை இருக்கிறது.

கோவில்களிலும் வீடுகளிலும் ஜபம் செய்யவேண்டும். யாவருக்கும ஊக்கம் வைராக்கியம் வேண்டும். ஏசுகிறிஸ்துவின் கிருபையால் நாம் ஜீவிக்கிறோம். உங்களைக் கிராமங்களிலிருந்து அழைத்து இருக்கின்ற இராவ் சாகிபு சு. வி. கனகசபை பிள்ளை அவர்களைப்பற்றி நான் நன்றாய் அறிந்திருக்கின்றேன். அவர் செய்கிற இந்தத் தொண்டுக்கு நன்மை அதிகம் கிடைக்கும். நானும் என் மனைவியும் சமீபத்தில் இங்கிலாந்துக்குப் போகின்றோம். அங்கே நாங்கள் உங்களை நினைப்போம். நீங்களும் எங்களை மறக்கக்கூடாது.

மிஸ்ஸஸ் ஸ்மெயில்ஸ் துரைசாணி அவர்கள் போதித்ததாவது:—

நாம் தினந் தினமும் மணிக்கு மணியும் நடத்திவருகின்ற வாழ்க்கையும் நமது மதமும் வேறுபட்டவைகளல்ல. வாழ்க்கையே மதம்; மதமே வாழ்க்கை. அவை இரண்டும் ஒன்றானதே யாகும். அதைக் கடைகளில் வாங்கவோ ஒருவரிடத்தில் கடன் வாங்கவோ வேறு இடங்களில் திருடவோ முடியாது. இயற்கையாகவே மனித வாழ்க்கையுடன் சம்மந்தப்பட்டிருப்பது மதமாகும். கிறிஸ்து பிறந்து மனிதரிடை வாழ்ந்து, எப்படி நல் வாழ்வு வாழவேண்டுமெனக் காட்டி அவர்களை நல்வழியில் கொண்டுவந்தார். இப்போது பலமார்க்கங்களிலும் பக்தர்களாய்க் காணப்படுகிறவர்களில் பலர் சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்றாகச் செய்கிறார்கள். அப்படிச் செய்கிறவர்கள் உண்மையான பக்தர்களாகமாட்டார்கள்.

ஒரு கதை உங்களுக்குச் சொல்லுகிறேன். இங்கிலாந்தில் ஒரு உபாத்தியாயர் தமது மாணுக்கர் வீட்டுக்குப் போனார். அந்த வீட்டில் பல கெட்ட படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அவைகளை அவர் நீக்கும்படிச் சொல்லவில்லை. ஆனால் வேறு நல்ல படங்களை வாங்கிவந்து அந்த கெட்ட படங்களுக்குப் பக்கத்தில் மாட்டித் தொங்கவிட்டார். அந்த மாணவர் நல்ல படங்களின் மேன்மையை உணர்ந்து கெட்ட படங்களைத் தாமாகவே விலக்கிவிட்டார். அதுபோலவே ஏசுவானவர் கெட்ட காரியங்களைச் செய்கிறவர்களிடம் நல்ல விஷயங்களைப் போதித்துச் செய்துகாட்டி அவர்களை நல்லவர்களாக்கினார்.

நாம் இறைவனிடம் பக்தியுள்ளவர்களா யிருக்கவேண்டும். அதனுடன் மனிதர்களிடமும் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். சில மனிதர் கடவுளிடம் அன்பாயிருக்கிறார்கள். ஆனால் மனிதர்களிடம் அன்பா யிருப்பதில்லை. நாம் மற்றவர்களைக் கடுமையாய் நடத்தக்கூடாது. நாம் மட்டும் சுகமாய் இருந்துகொண்டு மற்றவர்கள் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அவர்களும் சுகமாய் இருக்கும்படி நமது சுகத்தில் அவர்களுக்குப் பங்குக் கொடுக்கவேண்டும். சிலர் கஷ்டப்படும்போது கடவுளை எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால் நன்றாக வாழும்போது கடவுளை நினைப்பதில்லை. அப்படியே ஆபத்து வரும்போது அரசாங்கத்தைத் தேடுகிறார்கள். அரசாங்கத்தினால் யாவரும் சமாதானமாக வாழும்போது அரசாங்கத்தை நினைக்கிறார்கள் இல்லை. இந்தவிதமான செய்கை நல்லதல்ல. ஜனங்கள் தங்களுடைய முயற்சியினாலும் உழைப்பினாலும் ஆகப்பண்ணிக் கொள்ளக்கூடியவைகளுக்காக கவர்ன்மெண்டாரை நோக்கிக்கொண்டிருப்பது நியாயமல்ல. ஜனங்களுக்கு இறைவன் நன்மை செய்கிறானே யன்றி விஷபேதியை (காலரா) இறைவன் அனுப்புவதில்லை. அது ஜனங்களின் அஜாக்கிரதையால்—சுத்தக் குறைவால் ஏற்படுகிறதே யாகும். அவ்விதமே பல நோய்களும், கெடுதல்களும் நம்மிடை உள்ளது. அவைகளின் காரணங்களை அறிந்து அவை ஏற்படாமல் காத்துக்கொள்ளுவது அறிவாளிகளுக்கு அடையாளம்.

கடவுள் நமக்கு எல்லாக் காரியங்களையும் கொடுத்திருந்தும் நாம் அவைகளை உபயோகிப்பதில்லை. இறைவன் நமக்கு மூளையைக் கொடுத்திருக்கிறார். அதை உபயோகிக்கவேண்டியது நமது கடமையாகும். வெளிப்பார்வைக்குச் சுவாமிக்கு ஜபஞ் செய்கிறேனென்று சொல்லிக்கொண்டு திரிபவர்களைக் காட்டினும் மற்ற ஜனங்களுக்கு உபகாரஞ் செய்கிறவர்கள் எவ்வளவோ மேலானவர்கள். ஆகையால் நாம் நமது சகோதர சகோதரிகளுக்கு நம்மாலியன்ற உதவியைச் செய்யவேண்டும்.

இந்த வித்தியாசாலையை ஏற்படுத்திய ராவ் சாகிபு சு. வி. கனகசபை பிள்ளை அவர்களின் ஊக்கம் மேன்மேலும் அதிகமாக இறைவன் அருள்புரியவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாணவர்கள் யாவரும் மிக ஆசையுடன் படித்துக்

கொள்ளுகின்ற பாடங்களையும் நற்போதனைகளையும் கிராமங்கள் எங்கும் கொண்டுபோய் போதித்து எல்லாக் கிராமங்களிலும் பாடசாலைகளை ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். எங்களைப் பெரிதும் பாராட்டி வரவேற்று இந்த மாணவர்களுக்கு உபதேசிக்க ஏற்பாடு செய்த கனக சபை பிள்ளை அவர்களுக்கும் இதுவரை அமைதியுடன் உட் கார்ந்து பிரசங்கத்தைக் கேட்ட மாணவர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றோம்.

——:(o):——

உயிர்களெல்லாம் தெய்வம் அன்றிப்பிற ஒன்றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்.
பயிலும் உயிர் வகைமட்டும் அன்றி இங்கு
பார்க்கின்ற பொருள்கள்எல்லாம் தெய்வம் கண்டீர்!

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்—தெய்வம்
உண்மை என்று தான்அறிதல் வேண்டும்;
வயிரமுடைய நெஞ்சு வேண்டும்—இது
வாழு முறைமையடி பாப்பா.

ஜாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்வு சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி, அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

—பாரதியார்

———

—பாரதி பிரஸ், மன்னார்குடி.—

"ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊனம் இன்று பெரிது இழைக்கின்றீர்!
ஓங்கு கல்வி உழைப்பை மறந்தீர்!
மானமற்று விலங்குகள் ஒப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா,
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்!" (1)

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்னர் உளள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்." (2)

"வீடுதோறும் கலையின் விளக்கம்;
வீதி தோறும் இரண்டு ஒரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்,
நகர்கள் எங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வி இலாததோர் ஊரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதம்என் அன்னை
கேண்மை கொள்ள வழிஇவை கண்டீர்." (3)

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர்!
எதுவும் நல்கி இங்கு எவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!" (4)

பாரதியார் பாடல்.

லம், மன்னார்குடி.



கிராமக்கல்வி முதியோர் வித்தியாசாலை, ஆசிரியர்களும் மாணவர்களும்
ஆண்டுவிழா—ஆங்கீரஸ-ஹு சித்திரைமீ 16உ